

වාර්ෂික කාර්යසාධන වාර්තාව

வருடாந்திர செயல்திறன் அறிக்கை

Annual Performance Report

2021

පොල්, කිතුල් හා තල් වගා ප්‍රවර්ධන හා ආශ්‍රිත කාර්මික භාණ්ඩ නිෂ්පාදන හා අපනයන විවිධාංගීකරණ රාජ්‍ය අමාත්‍යාංශය

தென்னை, கித்துல், பனை செய்கை மேம்பாடு மற்றும் அதுசார்ந்த கைத்தொழில் பண்டங்கள் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி பல்வகைப்படுத்தல் இராஜாங்க அமைச்சு

State Ministry of Coconut, Kithul and Palmyrah Cultivation Promotion and Related Industrial Product Manufacturing & Export Diversification

செலவுத் தலைப்பு 431

සැකසුම් - සැලසුම් අංශය

தயாரிப்பு திட்டமிடல் பிரிவு

Prepared by – Planning Division

0112 876 447

கௌரவ பெருந்தோட்ட அமைச்சரின் செய்தி



தென்னை, கித்துல், பனை செய்கை மேம்பாடு மற்றும் அதுசார்ந்த கைத்தொழில் பண்டங்கள் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி பல்வகைப்படுத்தல் இராஜாங்க அமைச்சின் 2021 ஆண்டறிக்கைக்கு செய்தியொன்றை வெளியிடக் கிடைத்ததையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

பெருந்தோட்ட அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள இந்த இராஜாங்க அமைச்சு உட்பட ஏனைய இராஜாங்க அமைச்சுக்கள் "சுபீட்சத்தின் நோக்கு" கொள்கை சட்டகத்திற்கு அமைய மக்களை மையமாகக் கொண்ட பொருளாதாரத்தை உருவாக்கும் பொருளாதார இலக்குகளை அடைந்துகொள்ளும் நோக்கத்துடன் செயற்பட்டு வருகின்றன.

2025 ஆம் ஆண்டளவில் 6.5% ஆன பொருளாதார வளர்ச்சி வேகத்தை அடைந்துகொண்டு 6500 அ.டொ. ஐ விஞ்சும் தனிநபர் வருமானத்தை உழைத்துக் கொள்ளக்கூடியவாறு புதிய தொழில்நுட்பம் கலந்த ஏற்றுமதியை மையமாகக் கொண்ட பெருந்தோட்டக் கைத்தொழிலை ஏறபடுத்த அர்ப்பணிப்புடன் நடவடிக்கை மேற்கொண்டு வருவதுடன், பல்வேறு சவால்களுக்கு மத்தியிலாயினும் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2021 ஆம் ஆண்டில் இத்துறையில் வளர்ச்சியை உறுதி செய்ய முடியுமானது என்றும் அதற்கமைய, ஏற்றுமதி வருமான வழிமுறைகளில் பிரதானமாக விவசாய வர்த்தக பொருள் விற்பனை மூலம் பெற்ற வருமானம் 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2021 ஆம் ஆண்டில் 8.9% ஆன வளர்ச்சி வெளிப்படுத்தப்பட்டுள்ளது என்பதையும் குறிப்பிடுகின்றேன்.

இந்நாட்டு பிரதான ஏற்றுமதி பயிர்களில் உயர்மட்டத்தில் இருப்பது தெங்குப் பயிர்செய்கையாகும். இதற்கு மேலதிகமாக பனை மற்றும் கித்துல் கைத்தொழிலும் உலக சந்தையை வென்றுவருகின்றது. இந்தக் கைத்தொழில்களை மேம்படுத்துவது தொடர்பில் எதிர்காலத்தில் மேற்கொள்ளவென பல நடவடிக்கைகள் பிரேரிக்கப்பட்டுள்ளதுடன், ஏற்கெனவே இத்துறையில் பாரிய முன்னேற்றமும் அடையப்பெற்றுள்ளது. அத்துடன் பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகள் பாரியளவில் இத்துறையில் உருவாகி வருவதுடன், சனாதிபதியின் கவனமும் இது தொடர்பில் செலுத்தப்பட்டுள்ளது.

இராஜாங்க அமைச்சு 2021 ஆம் ஆண்டு இந்த முன்னேற்றத்தை அடைந்துகொள்வதற்காக இராசாங்க அமைச்சுக்கு பொறுப்பளிக்கப்பட்ட பணிகளை வெற்றிகரமாக நிறைவேற்றி பெரும் முயற்சியுடனும் அர்ப்பணிப்புடனும் நடவடிக்கை மேற்கொண்ட கௌரவ இராஜாங்க அமைச்சர் அருந்திக்க பெர்ணாந்து, இராஜாச் அமைச்சின் செயலாளர் திரு திஸ்ஸ ஹேவாவிதான உள்ளிட்ட பதவியணியினருக்கும், அதன் கீழுள்ள நிறுவனங்களின் சகல பதவியணியினருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

டாக்டர் ரமேஷ் பத்திரண, (பா.உ.)

பெருந்தோட்ட அமைச்சர்.

கௌரவ இராஜாங்க அமைச்சரின் செய்தி



தெங்கு, கித்துல் மற்றும் பனை பயிர்ச்செய்கை மேம்பர்டு மற்றும் அதுசார்ந்த கைத்தொழில் பண்டங்கள் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி பன்முகப்படுத்தல் இராஜாங்க அமைச்சின் 2021 ஆம் ஆண்டறிக்கைக்கு செய்தியொன்றை வெளியிடக் கிடைத்தமை மகிழ்ச்சியளிக்கின்றது. இந்நாட்டின் தென்னை, கித்துல், பனை பயிர்செய்கைகள் பண்டைய காலம் தொட்டு காணப்பட்டு வருகின்ற கைத்தொழில்களாகும். இவற்றில் தென்னைக் கைத்தொழில் பிரதானமானதும், பாரியளவிலானதுமாகும். 2.7 பில்லியன் தென்னை விளைச்சல் நாட்டில் காணப்படுவதுடன், இதில் சுமார் 1 பில்லியன் தேங்காய் பால், தேங்காய் எண்ணெய், கொப்பரா, தேங்காய் நீர் போன்ற உப உற்பத்திகளுக்கு பயன்படுத்திக் கொள்ளப்படுகின்றன.

இந்தக் கைத்தொழிலின் மூலம் கிடைக்கின்ற வருமானத்தை ஒரு பில்லியன் அமெரிக்க டொலராக அதிகரித்துக் கொள்வது மேன்மைதங்கிய சனாதிபதி அவர்கள் மற்றும் அரசாங்கத்தின் பிரதான நோக்கமாக உள்ளது. மேலும், கித்துல் துறையின் முன்னேற்றத்திற்காக கித்துல் அபிவிருத்தி சபை தாபிக்கப்பட்டுள்ளது. கித்துல் பாணி, கித்துல் கட்டி மற்றும் அது சார்ந்த உற்பத்தகள் வெளிநாட்டு சந்தையை வென்றெடுத்த உற்பத்திகளாகும். அத்துடன் நாடு முழுவதிலும் கித்துல் அபிவிருத்தியை பிரபல்யப்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள் ஆரம்பிக்கபபட்டுள்ளதுடன், கித்துல் கருநீர் உடலுக்கு பலம்தரும் குடிபானமாக நவீன விஞ்ஞான ரீதியல் இனங்காணப்பட்டுள்ளது. கித்துல் சார்ந்த உற்பத்திகள் மற்றும் உணவு வகைகள், அதற்குத் தேவையான உபகரணங்களை அறிமுகம் செய்தல், விநியோகிததல், வங்கிக் கடன் மற்றும் உற்பத்திகளை கொள்வனவு செய்தல் போன்றவற்றுகு உதவுவதற்கு எனது இராஜாங்க அமைச்சு முனைப்பான பங்களிப்பை வழங்கி வருகின்றது.

பனை கைத்தொழிலை மேம்படுத்துவத்றகாக எமது அமைச்சின் கீழ் காணப்படுகின்ற நிறுவனமொன்றான பனை அபிவிருத்தி சபை பாரியதொரு செயற்பணியை நிறைவேற்றி வருகின்றது. எமது நாட்டுக்குள் பனை மரங்கள் ஒரு மில்லியனுக்கும் மேல் காணப்படுகின்றன. வட மாகாணத்தை மையமாகக் கொண்டு இயங்கிவருகின்ற நிறுவனம் என்ற வகையில் வட மாகாண மக்களின் நலன்புரிக்கான நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வாழ்வாதார அபிவிருத்தி மூலம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொழில்வாய்ப்புக்களை உருவாக்கிக் கொடுத்து உற்பத்திகளை வட மாகாணத்தை மையமாகக் கொண்டு பெருந்தோட்டத்துறை அமைச்சு மற்றும் எமது அமைச்சின் தலைமையில் இலங்கையின் ஏனைய மாகாணங்களுக்கும் அறிமுகம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பனை சார்ந்த உற்பத்திகள் பிரான்ஸ், இத்தாலி, அவுஸ்திரேலியா, கனடா, அமெரிக்கா மற்றும் இங்கிலாந்து போன்ற நாடுகளின் பல்தொகுதிக் கடைகள் மற்றும் எமது உள்ளூர் காட்சிக்கூடங்களில் அந்நாடுகளின் நுகர்வோருக்கு கொள்வனவு செய்ய வசதி செய்யப்பட்டுள்ளது. 2022 ஆ ஆண்டில் எமது இராஜாங்க அமைச்சு, மேன்மைதங்கிய சனாதிபதி அவர்களினதும், பிரதம அமைச்சர் அவர்களினதும், பெருந்தோட்ட அமைச்சரினதும் வழிகாட்டலின் கீழ், பாரியளவில் அந்நியச் செலாவணியை இந்நாட்டுக்கு கொண்டுவர நடவடிக்கைகளை திட்டமிட்டு வருகின்றது. இந்நாட்டு நுகர்வோரான மக்களுக்கு நிவாரண விலையில் பொருட்களை பெற்றுக் கொடுப்பதற்கும், உற்பத்திகள் மற்றும் உப உற்பத்திகளை மேம்படுத்தி இந்ட்டின் பொருளாதாரத்தை வலுவூட்டுவதற்கும் செயற்படுவது எமது அமைச்சின் பிரதான குறிக்கோளாகும் என்பதை குறிப்பிட விரும்புகின்றேன்.

2021 ஆம் ஆண்டில் இந்த முன்னேற்றத்தை அடைந்துகொள்வதற்கு இராஜாங்க அமைச்சுக்குப் பொறுப்பளிக்கப்பட்ட பணிகளை வெற்றிகரமாக நிறைவேற்றிக் கொள்வதற்கு பெரும் முயற்சிகளை மேற்கொண்டு அர்ப்பணிப்புடன் செயற்பட்ட இராஜாங்க அமைச்சின் செயலாளர் திரு திஸ்ஸ ஹேவாவிதான உள்ளிட்ட பதவியணியினருக்கும், அதன் கீழ் உள்ள நிறுவனங்களின் சகல பதவியணியினருக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றென்.

அருந்திக பெர்ணாந்து(பா.உ.)

தெங்கு, கித்துல் மற்றும் பனை பயிர்ச்செய்கை மேம்பர்டு மற்றும் அதுசார்ந்த கைத்தொழில் பண்டங்கள் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி பன்முகப்படுத்தல் இராஜாங்க அமைச்சர்

பெருந்தோட்டக் அமைச்சின் செயலாளரின் செய்தி



தெங்கு, கித்துல் மற்றும் பனை பயிர்செய்கை மேம்பாடு மற்றும் அதுசார்ந்த பொருட்களின் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி பல்வகைப்படுத்தல் இரஜாங்க அமைச்சினால் அரசாங்க கொள்கை சட்டகத்துக்கு அமைய புதிய தொழில்நுட்பம் இணைக்கப்பட்ட ஏற்றுமதியை மையமாகக் கொண்ட பெருந்தோட்டக் துறையை தாபிப்பதை நோக்காகக் கொண்டு பெருந்தோட்டக் அமைச்சரின் தலைமையில் மற்றும் இராஜாங்க அமைச்சரின் வழிகாட்டலின் கீழ் இயங்கிவருகின்றது.

தெங்கு, கித்துல் மற்றும் பனை பயிர்செய்கை மேம்பாட்டுப் பிரிவுக்குப் பொறுப்பளிக்கப்பட்டுள்ள பிரதான பொறுப்பாக இருப்பது, ஆராய்ச்சிசார் முறையியல்கள், புதிய தொழில்நுட்ப முறையியல்கள் மற்றும் சிறந்த முறையில் நிலத்தைப் பயன்படுத்துவதன் மூலம் பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்தி பல்வகைப்படுத்தல் கலந்த ஏற்றுமதிச் சந்தையை வென்றெடுப்பதன் மூலம் விடயப்பரப்புக்கு அமைய தெங்கு, கித்துல் மற்றும் பனை பயிர்செய்கைத் துறையை அபிவிருத்தி செய்வதாகும்.

அதற்கமைய, தெங்கு, கித்துல் மற்றும் பனை பயிர்செய்கைப் பிரிவின் கீழ் காணப்படுகின்ற சகல நிறுவனங்களினதும் ஒத்துழைப்புடன் அரசாங்க கொள்கை சட்டகத்திற்கு அமைய மக்களை மையமாகக் கொண்ட பொருளாதாரத்தை ஏற்படுத்துவதற்கு விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. 2021 ஆம் ஆண்டில் காணப்பட்ட தெங்குப் பயிர்செய்கையின் உற்பத்திசார் விளைச்சலை அதிகரிப்பதற்காக தற்போது தெங்குப் பயிர் செய்கை மேற்கொள்ளாத போதிலும் தெங்குப் பயிர்செய்கைக்கு உகந்த பிரதேசங்களில் தெங்குப் பயிர்செய்கையை மேம்படுத்தல், தெங்குப் பயிர்செய்கையாளர்களுக்கு உப பயிர்செய்கைகளை பயிரிட ஊக்குவித்தல் போன்றவற்றின் மூலம் தெங்குக் காணிகளின் விளைதிறனை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அத்துடன், தெங்கு, கித்துல் மற்றும் பனைசார்ந்த உற்பத்திகளை பல்வகைப்படுத்தல், பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளை ஊக்குவித்தல் மற்றும் ஏற்றுமதி சந்தை வாய்ப்புக்களை தெங்கு, கித்துல் மற்றும் பனைத் துறைகளுக்கு விஸ்தரிப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அத்துடன், தெங்கு, கித்துல் மற்றும் பனை பயிர்செய்கைத் துறையில் ஈடுபட்டுள்ள கைத்தொழிலாளர்களின் நலன்புரிக்காக அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தல் மற்றும் சமூக அங்கீகாரத்தை உறுதி செய்வதற்காக தகுந்த தொழில்சார் பயிற்சி வாய்ப்புக்கள் மற்றும் தொழில்நுட்ப அறிவைப் பெற்றுக் கொடுப்பதன் மூலம் உள்நாட்டிலும் மற்றும் வெளிநாடுகளிலும் உரிய ஆராய்ச்சிகளை மேற்கொள்வதன் மூலம் அதிகவிளைச்சல் தரும் கன்றுகளை அறிமுகம் செய்தல் மற்றும் தொழில்நுட்ப புத்தாக்கத்தின் மூலம் தெங்கு, கித்துல் மற்றும் பனைத் துறைகளில் அபிவிருத்திக்குப் பங்களிப்பு வழங்குவது போன்ற பணிகளுக்காக 2021 – 2025 ஐந்து வருட உபாயமுறையிலான திட்டமும் தயார் செய்யப்பட்டுள்ளது. பெருந்தோட்டக் அமைச்சர் கௌரவ டாக்டர் ரமேஷ் பத்திரண அவர்களின் வழிகாட்டலின் கீழ் 2021 ஆம் ஆண்டின் இலகுகளைப் பூர்த்தி செய்துகொள்வதற்கு வழங்கிய ஒத்துழைப்புக்காக தெங்கு, கித்துல் மற்றும் பனை பயிர்செய்கை மேம்பாடு மற்றும் அதுசார்ந்த பொருட்களின் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி பல்வகைப்படுத்தல் இரஜாங்க அமைச்சின் செயலாளர் மற்றும் மேற்படி இராஜாங்க அமைச்சின் மற்றும் சகல இணை நிறுவனங்களினதும் பதவியணியினருக்கும் எனது நன்றியையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ரவீந்திர ஹேவாவிதாரன
செயலாளர்,
பெருந்தோட்டக் அமைச

செயலாளரின் செய்தி



கௌரவ பெருந்தோட்ட அமைச்சர் மற்றும் விடயப்பொறுப்பு கௌரவ பெருந்தோட்ட இராஜாங்க அமைச்சரின் வழிகாட்டலின் கீழ் இயங்கிவந்த தெங்கு, கித்துல், பனை செய்கை மற்றும் அது சார்ந்த கைத்தொழில் பண்டங்கள் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி பன்முகப்படுத்தல் இராஜாங்க அமைச்சானது இன்று தமது பிரதான பெறுப்பொன்று என்ற வகையில் ஆராய்ச்சிசார் முறையியல்கள், புதிய தொழில்நுட்பக் கருவிகள், நிலம் மற்றும் தற்போது காணப்படுகின்ற பெருந்தோட்டங்களை நல்லமுறையில் பயன்படுத்திக் கொண்டு பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளை பன்முகப்படுத்துவதன் மூலம் ஏற்றுமதி சந்தையின் கவனத்தை ஈர்த்து அதனூடாக ஒட்டுமொத்த பெருந்தோட்டத்துறையையும் புதியதொரு பாதையில் இட்டுச் செல்வதை நோக்காகக் கொண்டுள்ள பெருந்தோட்ட அமைச்சின் விடயப்பரப்புக்கு அமைய தென்னை, கித்துல், பனை பயிர் செய்கைத் துறைகளை அபிவிருத்தி செய்வதை குறிப்பிட முடியும்.

அதற்கமைய, இராஜாங்க அமைச்சின் கீழுள்ள சகல நிறுவனங்களினதும் ஒத்துழைப்புடன் "சுபீட்சத்தின் நோக்கு" அரசாங்க கொள்கை சட்டகத்திற்கு அமைய, "மக்களை மையமாகக் கொண்ட பொருளாதாரம்" இனை கட்டியெழுப்புவது தொடர்பில் கவனம் செலுத்தி எமது இராஜாங்க அமைச்சின் விடயப்பரப்பு தொடர்பிலான நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்வதற்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருவதுடன், தென்னை, கித்துல் மற்றும் பனை பயிர்செய்கையை மேம்படுத்தல் மற்றும் அதுசார்ந்த கைத்தொழில் பொருட்களின் உற்பத்தி மற்றும் ஏற்றுமதியை பன்முகப்படுத்துவதன் மூலம் பெருந்தோட்டத்துறைக்கு பாரியதொரு பங்களிப்பை பெற்றுக் கொடுக்க முடிந்தது.

தென்னை, கித்துல் மற்றும் பனை பயிர் செய்கையை மேற்கொள்வதன் மூலம் நேரடியான மற்றும் மறைமுகமான வருமானம் அதிகரிப்பதன் மூலம் அவர்களின் வாழ்வாதாரத்தை அபிவிருத்தி செய்வதற்கு எமது அமைச்சு மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ள மற்றும் மேற்கொள்ளப்படவுள்ள பல நடவடிக்கைகள் காணப்படுகின்றன. பனை கைத்தொழில் மூலமும் நாட்டுக்கு கூடுதலான அந்நியச் செலாவணியை உழைத்துக் கொள்ள முடியும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. வடக்கு கிழக்கு பிரதேசம் யுத்தம் காரணமாக பாதிக்கப்பட்ட பிரதேசமாக உள்ள போதிலும் அங்குள்ள செழிப்பான தன்மை காரணமாக ஏனைய மாகாணங்களுடன் ஒப்பிடுகையில் பனை பயிர்செய்கைத்துறையில் வளர்ச்சியைக் காண முடியும் என்பதுடன், அதன் மூலம் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கு எமது இராஜாங்க அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது. இந்த இராஜாங்க அமைச்சானது, கிராமிய பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் உள்நாட்டு உற்பத்திகளை மேம்படுத்தும் அபிவிருத்திக் குழு மற்றும் தேசிய ஒருங்கிணைப்பு வாழ்வாதார துணைக்குழுவைப் பிரதிநித்துவம் செய்வதுடன், 2021-2025 ஐந்து வருட உபாயமுறையிலான திட்டத்தின் கீழ் அதற்குரிய நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துவதும் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளது.

பெருந்தோட்டத்துறை அமைச்சர் கௌரவ ரமேஷ் பத்திரண அவர்கள் மற்றும் தென்னை, கித்துல் மற்றும் பனை செய்கை மேம்பாட்டு மற்றும் அது சார்ந்த கைத்தொழில் பண்டங்கள் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி பன்முகப்படுத்தல் இராஜாங்க அமைச்சர் கௌரவ அருந்திக பெர்ணாந்து அவர்கள் உட்பட பெருந்தோட்டத்துறை அமைச்சின் வழிகாட்டலின் கீழ் 2021 ஆம் ஆண்டின் இலக்குகளை அடைந்துகொள்வதற்காக வழங்கிய ஒத்துழைப்பையிட்டு பெருந்தோட்ட அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட பதவியணியினருக்கும், எனது இராஜாங்க அமைச்சின் பதவியணியினருக்கும், அதன் கீழுள்ள நிறுவனங்களின் தலைவர்கள் உள்ளிட்ட மேற்படி நிறுவனங்களின் ஒட்டுமொத்த பதவியணியினருக்கும் எனது நன்றியையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திஸ்ஸ ஹேவாவிதான
செயலாளர்,
தெங்கு, கித்துல் மற்றும் பனை பயிர்ச்செய்கை மேம்பாட்டு மற்றும் அதுசார்ந்த கைத்தொழில் பண்டங்கள் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி பன்முகப்படுத்தல் இராஜாங்க அமைச்சு

2021 ஆம் ஆண்டிற்கான வருடாந்திர செயல்திறன் அறிக்கைகள்

தென்னை, கித்துல் மற்றும் பனை செய்கை மேம்பாட்டு மற்றும் அது சார்ந்த கைத்தொழில் பண்டங்கள் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி பல்வகைப்படுத்தல் இராஜாங்க அமைச்சு

செலவுத் தலைப்பு இலக்கம் 431

உள்ளடக்கம்

அத்தியாயம் 01 – நிறுவனத்தின் தோற்றப்பாடு / நிறைவேற்றுப் பொழிப்பு
அத்தியாயம் 02 – முன்னேற்றமும், எதிர்கால நோக்கும்
அத்தியாயம் 03 – ஆண்டுக்கான ஒட்டுமொத்த நிதிசார் செயலாற்றுகை
அத்தியாயம் 04 – செயலாற்றுகைச் சுட்டி
அத்தியாயம் 05 – நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை நிறைவேற்றிக் கொள்வதன் செயலாற்றுகை
அத்தியாயம் 06 – மனிதவளங்களின் தோற்றப்பாடு
அத்தியாயம் 07 – இயைபு அறிக்கை

உள்ளடக்கம்

1. தென்னை, கித்துல் மற்றும் பனை செய்கை மேம்பாட்டு மற்றும் அது சார்ந்த கைத்தொழில் பண்டங்கள் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி பல்வகைப்படுத்தல் இராஜாங்க அமைச்சு – ஆண்டறிக்கை - 2021

01 நிறுவனத்தின் தோற்றப்பாடு 01

1.1 அறிமுகம் 01
1.2 அமைச்சின் நோக்கு, செயற்பணி மற்றும் நோக்கங்கள் 02
1.3 அமைச்சின் பிரதான பணிகள் 04
1.4 அமைச்சின் நிறுவன ஒழுங்கமைப்பு 05
1.5. அமைச்சுக்குரிய நிறுவன மற்றும் சட்டரீதியான சட்டகம் 06

2. முன்னேற்றமும், எதிர்கால நோக்கும் 07
2.1 தெங்குத்துறை அபிவிருத்தி 07
2.1.1 தெங்குத்துறை – அறிமுகம் 07
2.1.2 தெங்குத்துறை அபிவிருத்திக்கான எதிர்கால நோக்கு 08
2.1.3. தெங்குத்துறை அபிவிருத்திகான சவால்கள் 13
2.1.4. தெங்குத்துறை ஒட்டுமொத்த முன்னேற்றம் 16
2.1.4.1 தெங்குத் துறையின் அபிவிருத்திக்கான நடவடிக்கைகள் 19
2.1.4.1.1 தெங்குப் பயிர்செய்கை சபை 29
2.1.4.1.2. தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை 25
2.1.4.1.3 தெங்கு ஆராய்ச்சி நிறுவகம் 32
2.1.5 தெங்குத்துறை – விசேட அபிவிருத்தி கருத்திட்டங்களின் முன்னேற்றம் 40

2.2 கித்துல் துறை 44

2.2.1. *கித்துல் துறை* – அறிமுகம் 44
2.2.2 *கித்துல் துறை* அபிவிருத்திக்கான எதிர்கால நோக்கு 45
2.2.3 *கித்துல் துறை* அபிவிருத்திகான சவால்கள் 47
2.2.4 *கித்துல் துறை* ஒட்டுமொத்த முன்னேற்றம் 51

2.3 பனை துறை 56

2.3.1 பனை துறை – அறிமுகம் 56
2.3.2 பனை *துறை* அபிவிருத்திக்கான எதிர்கால நோக்கு 57
2.3.3 பனை *துறை* அபிவிருத்திகான சவால்கள் 60
2.3.4 பனை *துறை* ஒட்டுமொத்த முன்னேற்றம் 62
2.3.5 பனை *துறை* அபிவிருத்திக்கான விசேட வசதிகளை செய்தல் 63

உள்ளடக்கம்

3. 2021 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டுக்கான ஒட்டுமொத் நிதிசார் செயலாற்றுகை **70**

3.1 நிதிசார் முன்னேற்றம் பற்றிய கூற்று 70

3.2 நிதி நிலைமைக் கூற்று 71

3.3 காசுப் பாய்ச்சல் கூற்று 72

3.4 நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் 73

3.5 வருமானம் சேகரிப்பதன் செயலாற்றுகை 74

3.6 ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகளின் பயன்பாடு பற்றிய செயலாற்றுகை 74

3.7 நிதி ஒழுங்குவிதிகள் 208 இற்கு அமைய ஏனைய அமைச்சுக்கள்.'.திணைக்களங்களின் பிரதிநிதியாக இத்திணைக்களம்.'.மாவட்ட செயலகம்.'.மாகாண சபைக்கு செலவிட ஒதுக்கியுள்ள நிதி ஏற்பாடுகள் 74

3.8 நிதியல்லாத சொத்துக்களை அறிக்கையிடுவதன் செயலாற்றுகை 75

3.9 கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 76

4. செயலாற்றுகைச் சுட்டிகள் **81**

4.1 நிறுவனத்தின் செயலாற்றுகைச் சுட்டிகள் (செயற்றிட்டத்தின் அடிப்படையில்) 81

5. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதன் செயலாற்றுகை **82**

5.1 இனங்காணப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் 82

5.2 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதன் வெற்றிகள் மற்றும் சவால்கள் 83

5.2.1 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்வதன் வெற்றிகள் 83

5.2.2 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதன் சவால்கள் 83

6. மனித வளத் தோற்றப்பாடு **84**

6.1 பதவியணி முகாமைத்துவம் 84

6.2 நிறுவனத்தின் செயலாற்றுகையில் மனிதவளப் பற்றாக்குறை தாக்கத்தை ஏற்படுத்தியுள்ள முறை 84

6.3 மனித வள அபிவிருத்தி 85

7. இயைபு அறிக்கை **88**

1 தெங்கு, கித்துள் மற்றும் பனை பயிர்ச்செய்கை மேம்பாடு மற்றும் அதுசார்ந்த கைத்தொழில் பண்டங்கள் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி பன்முகப்படுத்தல் இராஜாங்க அமைச்சு நிறுவனத்தின் தோற்றப்பாடு

1.1. அறிமுகம்

தற்போதைய அரசின் "சுபீட்சத்தின் நோக்கு" கொள்கை சட்டகத்திற்கு ஏற்ப, புதிய தொழில்நுட்ப கலப்பொன்றை ஏற்றுமதியை மையமாக் கொண்ட பெருந்தோட்ட கைத்தொழில் துறையொன்றை ஏற்படுத்துவதற்காக பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சரின் வழிகாட்டலின் கீழ் அமுல்படுத்துவற்கு 2020 செப்தெம்பர் மாதம் 25 ஆம் திகதி 2194/74 ஆம் இலக்க அரச அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் ஊடாக "தெங்கு, கிதுள் மற்றும் பனை பயிர்செய்கை மற்றும் அதுசார்ந்த கைத்தொழில் பொருட்களின் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி பன்முகப்படுத்தல் இராஜாங்க அமைச்சு" உருவாக்கப்பட்டுள்ளது.

ஆய்வு ரீதியான முறைகள், புதிய தொழில்நுட்ப உபகரணங்கள் மற்றும் உயர்மட்ட காணிப் பயன்பாடு ஊடாக பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்தி பன்முகப்படுத்தல் ஊடாக ஏற்றுமதிச் சந்தையை கவர்ந்து கொள்வதனை இலக்கு வைத்து முழுமையான பெருந்தோட்ட துறையை புதிய கோணத்தில் ஈடுபடுத்துவதை இலக்கு வைத்து பெருந்தோட்ட அமைச்சின் விடயப்பரப்பிற்கு ஏற்ப தெங்கு, கிதுள் மற்றும் தென்னை பயிர்ச் செய்கைத் துறையை அபிவிருத்தி செய்தல் இந்த அமைச்சினால் மேற்கொள்ளப்படும்.

அதற்கமைய, இராஜாங்க அமைச்சின் கீழ் காணப்படுகின்ற சகல நிறுவனங்களினதும் ஒத்துழைப்புடன் அரச கொள்கை சட்டகத்திற்கு இசைவாக மக்களை மையமாகக் கொண்ட பொருளாதாரத்தை கட்டியெழுப்புவது தொடர்பில் கவனம் செலுத்தி அரசின் விசேட முன்னுரிமைகளான தென்னை பயிர்செய்கையின் விளைச்சலை மேம்படுத்துதல் மற்றும் தற்போது தென்னை பயிர் செய்யப்படாதுள்ள மாகாணங்களில் தென்னை பயிர்செய்கையை ஊக்குவிப்பதன் மூலம் தென்னை காணிகளின் உற்பத்தித்திறனை மேம்படுத்தல், தென்னை, பனை மற்றும் கித்துல் கைத்தொழிலை மேம்படுத்தல் மற்றும் பெறுமதி சேர்ப்பதன் மூலம் உற்பத்திகளை பன்முகப்படுத்தல், உற்பத்தி ஏற்றுமதிக்கு வழிவகுத்தல், ஆராயச்சி மூலம் கூடுதல் விளைச்சலைத் தரும் கன்றுகளை அறிமுகம் செய்தல், தொழில்நுட்ப கண்டுபிடிப்புகளின் மூலம் தென்னை, பனை மற்றும் கித்துல் துறையின் கைத்தொழில் அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்தல் ஆகிய பணிகளுக்குச் சமாந்தரமாக இராஜாங்க அமைச்சினால் 2021-2025 ஐந்து வருட உபாயமுறையிலான திட்டம் தயார் செய்யப்பட்டுள்ளது.

இந்த இராஜாங்க அமைச்சினால் 2021.01.01 முதல் 2020.12.31 ஆம் திகதி வரையான கால எல்லைக்கு ஏற்ப தயார் செய்யப்பட்ட செயற்பாட்டுத் திட்டத்திற்கு ஏற்ப 2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளின் பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

1.2 அமைச்சின் நோக்கு, செயற்பணி மற்றும் நோக்கங்கள்

நோக்கு

"புதிய தொழில்நுட்பத்தின் மூலம் வலுவூட்டப்பட்ட பூகோள ரீதியாக போட்டித்தன்மைமிக்க தென்னை, கிதுள் மற்றும் பனை போன்றவற்றை சார்ந்த நிலையான கைத்தொழிலொன்றை இலங்கையில் உறுதிப்படுத்தல்"

செயற்பணி

"உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தையானது பலதரப்பட்ட தேவைகளுக்கும் பொருந்தும் வகையில் உற்பத்தித்திறன், தரம், வினைத்திறன் மற்றும் உயர் போட்டித்தன்மையை மேம்படுத்துவதற்காக நவீன விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்தை பயன்படுத்தல், காணி பயன்பாடு, நீர் வளம், மூலதனம் மற்றும் ஊழியத்தின் வினைத்திறனை மேம்படுத்தல் சம்பிரதாய பூர்வமான பயிற்றப்பட்ட விவசாயக் கைத்தொழிலை கவர்ச்சிமிக்க தொழில்துறையாக உருவாக்குவதற்கு விவசாயிகளின் மற்றும் கைத்தொழிலாளர்களின் வருமானம் மற்றும் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதை உறுதிப்படுத்தி மிகவும் அபிவிருத்தியடைந்த தெங்கு, கித்துள் மற்றும் பனை சார்ந்த துறையொன்றை கட்டியெழுப்புதல்"

அமைச்சின் நோக்கங்கள்

இந்த அமைச்சினால் "சுபீட்சத்தின் நோக்கு" கொள்கைச் சட்டகத்திற்கு அமைய தயார் செய்யப்பட்டுள்ள 2021-2025 உபாயமுறையிலான சட்டக்கத்தின் கீழ்,

- 2021 ஆம் ஆண்டளவில் தென்னை, பனை மற்றும் கித்துல் ஆகிய 03 துறைகளின் உற்பத்திகளின் மூலம் 01 பில்லியன் அமெரிக்க டொலர் ஏற்றுமதி வருமானத்தை உழைத்துக் கொள்ளல்.
- 2025 ஆம் ஆண்டளவில் தென்னை உற்பத்தி மட்டத்தை 3900 மில்லியன் வரை அதிகரித்தல்.
- 2025 ஆம் ஆண்டளவில் நல்ல முறையில் தாபிக்கப்பட்ட முறையான பயிர்செய்கையாக கித்துல் பயிர் செய்கையை மாற்றியமைத்தல்.
- 2025 ஆம் ஆண்டளவில் புதிய தொழில்நுட்பத்தை பயன்படுத்தி பெறுமதி சேர்க்கப்பட்ட புதிய உற்பத்திகள் மூலம் உள்நாட்டு வளங்களை அடிப்படையாகக் கொண்ட ஏற்றுமதியொன்றாக கித்துலை மேம்படுத்துவதன் மூலம் ஏற்றுமதி உழைப்பை 10% இனால் அதிகரித்தல்.
- 2021 ஆம் ஆண்டளவில் பனை ஏற்றுமதி வருமானத்தை 200 மில்லியனாக அதிகரித்துக் கொள்ளல்.

1.2 அமைச்சின் நோக்கு, செயற்பணி மற்றும் நோக்கங்கள்

பெறுமானங்கள்

- மனிதநேயம்மிக்கதென்பது
- சாதகமான மனப்பாங்கு
- சிறந்த நேர முகாமைத்துவம்
- தரமான மற்றும் வினைத்திறன்மிக்க சேவை ஆற்றல்
- சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறான தலைமைத்துவ அம்சங்கள்
- சமஅந்தஸ்து
- குழு உணர்வு
- பின்னூட்டல்

இலக்கு

- தென்னை, பனை மற்றும் கித்துள் துறைசார் சார்ந்த உற்பத்திகளை பன்முகப்படுத்துவதன் மூலம் சிறந்த ஏற்றுமதி வருமானத்தை அடைந்துகொள்ளல்.
- நுகர்வோருக்கு மற்றும் தென்னை, பனை மற்றும் கித்துள் பயிர் செய்கையாளர்களுக்கு சாதகமான நல்ல விலையில் பெற்றுக் கொள்ள முடியுமாதல்.
- எமது இராஜாங்க அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள நிறுவனங்களின் மனிதவளங்களின் மனப்பாங்கு அபிவிருத்தி மூலம் திருப்திகரமான அரசாங்க சேவையை சேவை பெறுநர்களுக்குப் பெற்றுக் கொடுத்தல்.

1.3 அமைச்சின் பிரதான பணிகள்


2020 செப்தெம்பர் மாதம் 25 ஆம் திகதி 2194/74 ஆம் இலக்க அரசாங்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைய அமைச்சின் பிரதான பணிகள்

பெருந்தோட்ட அமைச்சரின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் பிரகாரம் புதிய தொழில்நுட்பம் சேர்க்கப்பட்ட ஏற்றுமதியை மையமாகக் கொண்ட பெருந்தோட்ட கைத்தொழிலொன்றை ஏற்படுத்துவதற்காக உரிய சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு இணங்க தெங்கு, கிதுள் மற்றும் பனை பயிர்ச்செய்கை மேம்பாடு மற்றும் அதனோடு இணைந்த கைத்தொழிற் பொருட்கள் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி பன்முகப்படுத்தல் விடயம் சம்பந்தமான,

- கொள்கைகள் உருவாக்கத்திற்கு ஒத்துழைப்பு வழங்குதல்
- தேசிய வரவு செலவுத்திட்டம், அரச முதலீடு மற்றும் தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழான கருத்திட்டங்களை அமுல்படுத்தல் மற்றும்.
- அமைச்சின் கீழ் உள்ள நியாயாதிக்க நிறுவனங்களின் பணிகள் மற்றும் தொழிற்பாடுகள் மற்றும் அவற்றுக்குரிய கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை அமுல்படுத்தல், பின்னாய்வு செய்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்.
- அமைச்சுக்குப் பொறுப்பளிக்கப்பட்டுள்ள பின்வரும் விசேட முன்னுரிமைகளை அமுல்படுத்தல்.

  - தெங்கு ஆராய்ச்சி நிறுவகம் மற்றும் தனியார் ஆய்வு நிறுவனங்களுடன் இணைந்து அதிக விளைச்சல் தரும் தென்னை நாற்றுகளை அறிமுகப்படுத்துதல் மற்றும் தற்போது தென்னை பயிரிடப்படாத பகுதிகளுக்கு ஏற்ற தென்னங் கன்று வகைகளை அறிமுகப்படுத்துதல்.
  - ஒவ்வொரு பகுதியினதும் புவியியல் நிலைமைகளை கருத்தில் கொண்டு வீட்டுத் தோட்ட தென்னை பயிர்ச் செய்கை விரிவாக்கத்திற்காக அதிக விளைச்சல் தரும் தென்னை வகைகளை விநியோகிக்கும் திட்டத்தை செயல்படுத்துதல்.
  - பல்வேறு பூச்சிகளைக் கட்டுப்படுத்த உயிரியல் தொழில்நுட்ப தீர்வுகளை மேம்படுத்தல்.
  - நாற்றுப் பொருட்களை உற்பத்தி செய்வதற்கான நாற்று மேடைகளை உருவாக்க சிறு மற்றும் நடுத்தர தென்னை பயிர்செய்கையாளர்களை ஊக்குவித்தல்
  - தென்னைத் தோட்டங்களில் மிளகு, இஞ்சி, மஞ்சள், கற்றாழை, அன்னாசிப் பயிர்செய்கை மற்றும் பிற கால்நடை வளர்ப்பு போன்ற பண்ணைகளை மேற்கொள்வதை ஊக்குவித்தல்.
  - தேங்காய்க்கான உள்ளூர் தேவையை பூர்த்தி செய்வதற்கும், தேங்காய், செவ் இளனி, இளனி அவற்றோடு இணைந்த பெறுமதி சேர்க்கப்பட்ட பொருட்களை ஏற்றுமதி செய்வதற்கு உபாயமுறைகளை தயார் செய்தல்.
  - தென்னை தொடர்பான தொழில்களை மேம்படுத்துவதற்கு வசதி செய்தல்
  - பெறுமதி சேர்ப்பு மற்றும் புதிய தொழில்நுட்ப கண்டுபிடிப்புகளுக்கான ஆராய்ச்சிகளை மேற்கொள்ள ஆராய்ச்சியாளர்கள், விஞ்ஞானிகள் மற்றும் உற்பத்தியாளர்களை ஊக்குவித்தல்.

1.4 அமைச்சின் நிறுவன ஒழுங்கமைப்பு



1.5. அமைச்சுக்குரிய நிறுவன மற்றும் சட்ட ரீதியான சட்டகம்

திணைக்களங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள் அரச

1. பனை அபிவிருத்திச் சபை
2. தென்னை பயிர்ச்செய்கை சபை
3. தென்னை அபிவிருத்திச் அதிகாரசபை
4. கித்துல் அபிவிருத்திச் சபையை
5. வரையறுக்கப்பட்ட குருநாகல் பெருந்தோட்ட கம்பனி
6. வரையறுக்கப்பட்ட சிலாபம் பெருந்தோட்டக் கம்பனி

அமுல்படுத்த வேண்டிய சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் (கட்டளைகள்)

- தெங்கு அபிவிருத்திச் சட்டம் (1971 இன் 46 ஆம் இலக்கம்)
- கற்பகதரு நிதியச் சட்டம் (2005 இன் 31 ஆம் இலக்கம்)
- தெங்கு ஆராய்ச்சி கட்டளைச்சட்டம் (1928 இன் 29 ஆம் இலக்கம்)

2 முன்னேற்றமும், எதிர்கால நோக்கும்

2.1 தெங்குத் துறை அபிவிருத்தி

2.1.1 தெங்குத் துறை – அறிமுகம்

நாட்டைக் கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு – மக்களை மையமாகக் கொண்டு பொருளாதாரத்தின் கீழ் தெங்குத் துறை அபிவிருத்தி

பிரதான ஏற்றுமதிப்ப பயிர்களில் தேங்காய் ஒரு முக்கிய ஏற்றுமதிப் பயிராக உள்ளதுடன், புதிய தொழில்நுட்பம் மற்றும் பெறுமுதி சேர்க்கப்பட்ட தயாரிப்புகளை ஊக்குவிப்பதன் மூலம் தற்போதைய உலகளாவிய சந்தைக்கு ஏற்ப தேங்காய்க்கான சந்தை ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக புதிய திட்டமொன்றை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இது தொடர்பாக எதிர்வரும் ஐந்து வருடங்களில்:

- தேங்காய் பயிர்ச் செய்கையுடன் தொடர்புடைய நீண்டகாலமாக காணப்படும் பூச்சி (மைட்டா) மற்றும் தேங்காய் வண்டு தொற்றுநோயைத் தீர்ப்பதற்காக ஒரு உயிரி தொழில்நுட்ப தீர்வைக் கண்டுபிடிக்க இராஜதந்திர உதவியைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.
- தேங்காய் பறிக்கும் இயந்திரங்களை உற்பத்தி செய்தல் மற்றும் அதன் பயன்பாட்டை மேம்படுத்துவற்கு உதவி வழங்கப்படுகின்றது.
- வருடாந்திர தேங்காய் பயிர்ச் செய்கை தேவைக்கு ஏற்ற அதிக விளைச்சல் தரும் கலப்பின தேங்காய் நாற்றுகளை அறிமுகப்படுத்துதல் தேங்காய் ஆராய்ச்சி நிறுவனத்திற்கும், அதற்காக முன்வர விரும்பும் தனியார் ஆய்வக உரிமையாளர்களுக்கும் தேவையான வசதிகளை அரசு வழங்குகின்றது.
- தற்போது தேங்காய் பயிர்ச் செய்கை பரவலாக இல்லாத வடக்கு, கிழக்கு மற்றும் தெற்கு மாகாணங்களுக்கு பொருத்தமான தேங்காய் நாற்றுகளை அறிமுகப்படுத்த தேவையான ஆராய்ச்சி ஊக்குவிக்கப்படுகின்றது.
- சிறு மற்றும் நடுத்தர அளவிலான தேங்காய் பயிர்ச் செய்கையாளர்களுக்கு தேங்காய் நாற்று மேடைகளை அமைக்க வாய்ப்பு வழங்கப்படும்.
- தேங்காய் தோட்ட உரிமையாளர்களின் வருமானத்தை அதிகரிக்க தேங்காய் தோட்டங்களில் மிளகு, இஞ்சி, மஞ்சள் மற்றும் கற்றாழை போன்ற துணை பயிர்ச் செய்கை தொடர்பாக தேவையான ஊக்குவிப்புக்கள் வழங்கப்படுகின்றது.
- வீட்டுத் தோட்ட தேங்காய்ப் பயிர்ச் செய்கையை விரிவுபடுத்துவதற்கு அதிக விளைச்சல் தரும் கலப்பின தேங்காய் நாற்றுகளை வழங்குகின்ற பரந்தளவிலானதொரு திட்டம் அமுல்படுத்தப்படுகின்றது.

மூலம்: நாட்டைக் கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு பக்கம் 34

இலங்கை தேங்காய் உற்பத்தியில் முன்னணி வகிக்கிற நாடாக இருப்பதுடன் உலக் சந்தைக்கான தேங்காய விநியோகத்தில் பிரதானமாக துரிவல் தேங்காய் (Desiccated Coconut/DC) தொடர்பில் குறிப்பிடத்தக்க பங்கைக் கொண்டுள்ளது. இலங்கையின் தேங்காய் கைத்தொழில் முதன்மையாக 1971 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க தெங்கு அபிவிருத்திச் சட்டத்தினால் நிறுவகிக்கப்படுவதுடன், தெங்கு, கித்துள் மற்றும் பனை பயிரச் செய்கை மேம்பாடு மற்றும் அதனோடு இணைந்த கைத்தொழிற் பொருட்கள் மற்றும் ஏற்றுமதி பன்முகப்படுத்தல் அரச அமைச்சின் மேற்பார்வையின் கீழ் தேங்காய் ஆராய்ச்சி நிறுவனம் (CRI), தேங்காய் பயிர்ச் செய்கை சபை (CCB) மற்றும் தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை (CDA) ஆகியவற்றினால் இந்த ஆய்வுகளுடன் தொடர்புடைய பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மேலும், தேங்காய் கைத்தொழில் 1981 இன் தாவர பாதுகாப்பு கட்டளைச் சட்டம், 1999 இன் 35 ஆம் இலக்க தாவர பாதுகாப்புச் சட்டம் மற்றும் 2005 இன் 20 ஆம் இலக்க தென்னைக் காணிகளை துண்டாடும் கட்டுப்பாட்டுச் சட்டம் ஆகியவற்றால் பாதுகாக்கப்படுகிறது.

இலங்கையில் தென்னை பயிர்ச் செய்கையில் சுமார் 75% அளவில் 20 ஏக்கருக்கும் குறைவாக இருப்பதுடன், மீதமுள்ள பயிர்ச் செய்கைகள் அரசுக்கு சொந்தமான தோட்டங்கள் மற்றும் தனியார் துறை தோட்டங்களாகவும் உள்ளன. தேசிய தேங்காய் உற்பத்தியில் 70% சிறிய அளவிலான உற்பத்தியாளர்களிடமிருந்து கிடைக்கப் பெறுகின்றது. இலங்கையில் தேங்காய் பயிர்ச் செய்கை 443,536 ஹெக்ரயார் பரப்பளவைக் கொண்டுள்ளதுடன் சராசரி வருடாந்த தேங்காய் அறுவடை சுமார் 2,800 மில்லியன் காய்கள் ஆகும். இந்த அறுவடையில் சுமார் 70% முதல் 80% உள்நாட்டு நுகர்வுக்கு பயன்படுத்தப்படுகிறது. இலங்கையில் தேங்காய்களின் தனிநபர் நுகர்வு ஆண்டுக்கு 84 காய்களாகவும் தேங்காய் எண்ணெய்க்கான நுகர்வு 30 காய்களாகவும் உள்ளதுடன் மொத்த வருடாந்த தனியாள் தேங்காய் நுகர்வு 114 தேங்காய்கள் ஆகும். இது தினசரி உணவில் 15% கலோரியையும், 70% கொழுப்பையும், 5% புரதத்தையும் வழங்குகிறது.

2.1.2 . தெங்குத் துறையை அபிவிருத்தி செய்வதற்கான எதிர்கால நோக்கு

2.2. தெங்குத் துறைக்கான உபாயமுறையிலான சட்டகம் - 2021-2025

இலக்கு

2025 ஆம் ஆண்டாகும் போது தேங்காய் உற்பத்தி மட்டத்தை 3600 மில்லியன் தேங்காய்களாக அதிகரித்தல்.
2025 ஆம் ஆண்டாகும் போது தேங்காய் மற்றும் தெங்கு சார்ந்த உற்பத்திகளின் ஊடாக 1.5 பில்லியன் அமேரிக்க டொளர் ஏற்றுமதி வருமானமொன்றை உழைத்தல்.

உபாயமுறையிலான சட்டகம்

- தற்போதுள்ள தேங்காய் தோட்டங்களின் உற்பத்தித்திறனை மேம்படுத்துதல்
- தென்னங் காணிகளின் பயன்பாட்டின் உற்பத்தித்திறனை மேம்படுத்தல்
- உற்பத்திக்கு மூலப்பொருட்களின் உகந்த பயன்பாட்டை உறுதி செய்தல்
- தேங்காய் பொருட்களில் தொழில்நுட்ப ரீதியான புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் பெறுமதி சேர்ப்புக்களை மேம்படுத்துதல்
- தேங்காய் சந்தை மற்றும் தேங்காய் தொடர்பான தொழில்முயற்சிகளை மேம்படுத்துதல்
- தேங்காய் பயிர்ச் செய்கை / கைத்தொழில்துறை மேம்பாட்டுக்கான புதிய தொழில்நுட்பத்தை ஆராய்ச்சி மூலம் அறிமுகப்படுத்துதல்

தெங்குத்துறையின் வளர்ச்சிக்கான மூலோபாய கட்டமைப்பின் கீழ், தற்போதுள்ள தேங்காய் தோட்டங்களின் உற்பத்தித்திறனை அதிகரிக்க முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது. இதன் கீழ், உர பயன்பாட்டை ஊக்குவித்தல், தேங்காய் நிலங்களில் ஈரப்பதனைப் பாதுகாத்தல், மண்ணின் வளத்தை அதிகரிப்பதற்கான பரிந்துரைகளை வழங்குதல், தேங்காய் பயிரச் செய்கைக்கு ஏற்படுகின்ற நோய்களைக் கட்டுப்படுத்துதல் மற்றும் தேங்காய் விளைச்சலைப் பாதிக்கும் பூச்சிக் கட்டுப்பாடுகள் தொடர்பான திட்டங்களை அமுல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. அதே போன்று நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துவதை இலகுபடுத்துவதற்காக, தேங்காய் நிலங்களை தரம் பிரித்து, அவற்றை தென்னை பயிர்ச் செய்கை சபையின் கீழ் பதிவு செய்வதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. தேங்காய் உற்பத்தியை அதிகரிப்பதற்கான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்காக, தற்பொழுது இருக்கும் தென்னங்காணிகளின் உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்கான திட்டங்களை செயல்படுத்துவதற்கு 2021 ஆம் ஆண்டில் நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டன.

மேலும், தென்னைப் பயிர் செய்கையை நாடு முழுவதும் விஸ்தரிப்பதற்கும், பயிரிடப்படாத நிலங்களை தேங்காய்ப் பயிர்ச் செய்கைக்கு பயன்படுத்துவதற்கும், உயர்தர நாற்றுப் பொருள்களைத் தயாரிப்பதற்கும், தேங்காய் நில விநியோகம் மற்றும் நில பயன்பாட்டு உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்கும் துணைப் பயிர்களை பயிரிடுவதற்கான திட்டங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இந்த நோக்கத்திற்காக, தீவில் அடையாளம் காணப்பட்ட காலியான நெல் நிலங்களை உற்பத்தி வணிக அலகுகளாக மாற்றவும் தேங்காய் பயிர்ச் செய்கைக்காக பயன்படுத்துவதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. உயர்தர நடவுப் பொருள்களை உற்பத்தி செய்ய விதை தேங்காய் உற்பத்தியை 20% அதிகரிக்கும் திட்டங்களுக்கும் வரும் ஆண்டில் ஏற்பாடுகள் எதிர்பார்க்கப்படுகின்றன. தென்னை நிலங்களில் வணிக விவசாயத்தை மேம்படுத்துவதில் முதலீடுகளை ஊக்குவிப்பதன் மூலம் தேங்காய் நிலங்கள் தொடர்பான நிலையான வளர்ச்சியைக் கொண்டுவர உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதே போன்று உயர் தரத்திலான நாற்றுப் பொருட்களைத் தயார் செய்வது தொடர்பாக விதைத் தேங்காய் உற்பத்தியை 20 சதவீதத்தால் அதிகரிப்பதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பாக எதிர் வரும் வருடங்களில் நிதி ஏற்பாடுகள் எதிர்பார்க்கப்படுகின்றன. தேங்காய் காணிகளில் வர்த்தக விவசாயத்தின் மேம்பாடு தொடர்பாக முதலீடுகளை மேம்படுத்துவதன் ஊடாக தேங்காய் காணிகளை அண்டிய நிலையான அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன் கீழ், புதிய தேங்காய் பயிர்ச்செய்கை, மீள் பயிரிடல், இடை பயிர் போன்றவற்றுக்கு சலுகை அடிப்படையில் நிதி வசதிகள் வழங்கப்பட்டுள்ளன. இதன் ஊடாக தேங்காய் நில அபிவிருத்தி தொடர்பாக முதலீடுகளை ஊக்குவித்து அதன் மூலம் தேங்காய் காணிகளின் நிலப் பயன்பாட்டை மேம்படுத்தி உச்ச வினைத்திறனை பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.
வீட்டுத்துறை தேங்காய் துருவல் கழிவுகளை குறைப்பதன் மூலமும், அகற்றப்பட்ட தேங்காய் மட்டைகளை பெறுமதி சேர் உற்பத்திகள் தொடர்பாக ஈடுபடுத்துவதன் ஊடாக மூலப் பொருட்களை உச்ச அளவில் பயன்படுத்தப்படுவதனை உறுதிப்படுத்தப்படுகின்றது. கைத்தொழில் மற்றும் ஏற்றுமதி தொடர்பாக பயன்படுத்தப்படுவது எஞ்சிய 20 – 30 சதவீதத்திற்கு இடையேயான தேங்காய் அளவேயாகும்.

தேங்காய் தொடர்பான தயாரிப்புகளில் தொழில்நுட்ப கண்டுபிடிப்புகள் மற்றும் பெறுமதி சேர்க்கப்பட்ட தயாரிப்புகளை அதிகரிப்பதற்கான ஆய்வுகளை நடத்துதல், தேங்காய் எண்ணெய், தேங்காய் துருவல், தேங்காய் நார் சார்ந்த உற்பத்தித் கைத்தொழில்கள் ஆகியவற்றின் வளர்ச்சிக்கான ஆராய்ச்சியின் மூலம் பெறப்பட்ட அறிவை முதலீட்டாளர்களுக்கு பரப்புதல், இது போன்ற கண்டுபிடிப்புகளை ஊக்குவித்தல், உற்பத்தித் தொழில் தொடர்பான தரங்களை பராமரித்தல். கையகப்படுத்துதலுக்கான சர்வதேச தரங்களை அறிமுகப்படுத்துதல், ஆய்வுகூட வசதிகளை விரிவுபடுத்துதல், ஆய்வுகூட சேவைகளை வழங்குதல் போன்ற திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.
தேங்காய் சந்தை மற்றும் தேங்காய் தொடர்பான தொழில்முயற்சிகளை மேம்படுத்துவதற்காக உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டகளை நடாத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதே போன்று உள்ளூர் மற்றும் வெளிநாட்டு ஊடக விளம்பரம், விளம்பர அம்சங்கள் (துண்டுப் பிரசுரங்கள், வீடியோக்கள்) ஆகியவையும் தயாரிக்கப்பட்டுள்ளன. இதன் கீழ், மாதிரி விவசாய தோட்டங்களை நிறுவுவதற்கும், மாவட்ட அளவில் விற்பனை நிலையங்களை நிர்மாணிப்பதற்கும் எதிர்பார்க்கப்படுகிறது.

புதிய வகைகளை அறிமுகப்படுத்துவதற்கான ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல், காலநிலை மாற்றம், மண் வளம் மற்றும் நோய்கள் மற்றும் பூச்சிகள் குறித்த ஆராய்ச்சி மற்றும் பரிந்துரைகளை மேற்கொள்ளல் மற்றும் சிபாரிசுகளை வழங்குதல் மற்றுமல்லாது தெங்குக் கைத்தொழிலில் பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளை அறிமுகப்படுத்துவதற்கான ஆராய்ச்சி, சிபாரிசுகள் மற்றும் தேவையான தொழில்நுட்பங்களை வழங்குவதன் ஊடாக கிராமிய மக்களுக்கு நலன்களை பெற்றுக் கொடுக்கும் வகையில் தேங்காய் துறையை அபிவிருத்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

தெங்குத்துறை 2021 - இலக்குகள்

தெங்குத்துறையின் அபிவிருத்திக்காக 2021 இல் பின்வரும் கருத்திட்டங்களை மேற்கொள்ள ரூ.மி. 1000 ஆன தொகை அமைச்சுக்கு ஒதுக்கப்பட்டுள்ளதுடன் நிறுவனங்களுக்கு ரூ.மி. 1130 ஒதுக்கப்பட்டுள்ளது.


	அமுல்படுத்தும் கருத்திட்டம்	2021 ஏற்பாடு (ரூ.மி.)	கருத்திட்டத்தின் நோக்கங்கள்	உத்தேச பெறுபேறு/இலக்கு	அமுல்படுத்தும் நிறுவனம்
வரவு செலவுத்திட்ட பிரேரணைகள் மூலம் ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகள்					
1	லங்கையில் தற்போது காணப்படுகினற் தென்னை காணிகளின் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதன் மூலம் 2021 இல் தெங்கு விளைச்சலை 2800 மில்லியன் தேங்காயில் இருந்து 10% இனால் அதிகரித்தல்	152.00	தென்னங் காணிகள் மற்றும் தேங்காய் உற்பத்தியின் விளைச்சல மேம்படுத்தல்	• காணப்படுகின்ற தென்னைப் பயிர் செய்கைகளின் தென்னை அருவடையின் விளைச்சலை மேம்படுத்துவதற்காக தென்னங்காணிகளை விருத்தி செய்வதற்காக பயனாளிகள் இரண்டாயிரம் பேருக்கு நிவாரண உதவி வழங்குதல். • தென்னங் காணிகள் 6000 ஏக்கருக்கு உரம் இடுவதை மேம்படுத்துவதற்காக வெளிக்கள மட்டத்தில் 200 நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தல். • விதைகளுக்கான கேள்வியை அதிகரித்தல் மற்றும் வீட்டுத் தோட்டங்களில் தென்னை பயிர் செய்கையை விஸ்தரிப்பதற்காக ஒவ்வொரு வலயத்தினதும் பூகோள அம்சங்களை கவனத்தில் கொண்டு உயர் விளைச்சலைக் கொண்ட தென்னை வகைகளை பகிர்ந்தளித்தல். • தரப்பினர்களுக்கு மிகச் சரியான துரித ஆராய்ச்சி முடிவுகள் மற்றும் சேவைகளை ஆற்றுவதற்காக சாதாரண ஆய்வுகூட பகுப்பாய்வுகளை துரிதப்படுத்தல்	தெங்கு பயிர் செய்கை சபை தென்னை ஆராய்ச்சி நிறுவகம்

	அமுல்படுத்தும் கருத்திட்டம்	2021 ஏற்பாடு (ரூ.மி.)	கருத்திட்டத்தின் நோக்கங்கள்	உத்தேச பெறுபேறு/இலக்கு	அமுல்படுத்தும் நிறுவனம்
வரவு செலவுத்திட்ட பிரேரணைகள் மூலம் ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகள்					
2	நாடு முழுவதிலும் காணப்படுகின்ற பயன்படுத்தப்படாத வயற் காணிகளை பயன்வாய்ந்த வணிக அலகுகளாக மாற்றியமைப்பதற்கு தென்னை பயிர்செய்கையை மேற்கொள்ளல்	248.00	பயன்படுத்தாத வயற் காணிகளை வணிக தென்னை பயிர் செய்கை அலகுகளாக மாற்றியமைப்பதன் மூலம் புதிய தென்னை பயிர் செய்கை காணி அளவை மேம்படுத்தல்	• நிவாரண உதவி வழங்குதல் (சாதாரண காணிகளின் அளவு 2 ஏக்கர் / பயனாளிகள் 15,000 பேர்) • கடன் வழங்குதல் (சராசரி கடன் தொகை ரூ.மி. 0.25 வீதம் பயனாளிகள் 800 பேர்) • பயனாளிகள் 16000 பேருக்கு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் 100 ஐ நடாத்தல் • வெளிக்கள மாதிரிகளை தாபித்தல் • (மாதிரிகள் 90 x 0.2 mn) பயனாளிகள் 36 பேர்)	தெங்கு பயிர் செய்கை சபை
3	தென்னை பயிர்செய்கைக்கு துளிநீர் வழங்கல்	300.00	நீர் வழங்கல் வசதிகளை செய்து கொடுப்பதன் மூலம் தென்னை பயிர்செய்கைக்கு வரட்சியின் பாதிப்பை குறைத்தல்	• நுண் நீர்ப்பாசன கட்டமைப்பு அல்லது குழாய் மூலமான நீர்ப்பாசனக் கட்டமைப்புக்கள் 597 ஐ தாபித்தல் • நீர் களஞ்சிய அலகுகள் 355 ஐ நிர்மாணித்தல் / நீர் மூலங்கள் அபிவிருத்தி அலுவலர்கள் மற்றும் பயனாளிகளுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் 30 ஐ நடாத்தல் • கருத்திட்டங்கள் மற்றும் பிரச்சார நிகழ்ச்சித்திட்டங்கள் 28 ஐ நடாத்தல் • வெளிக்களத்தில் 15 மாதிரிகளை தாபித்தல் • வெளிக்கள நடவடிக்கை கொள்ளளவு அபிவிருத்தி	தெங்கு பயிர் செய்கை சபை
மொத்தம்		**700.00**			

இல.	அமுல்படுத்தும் கருத்திட்டம்	2021 ஏற்பாடு (ரூ.மி.)	கருத்திட்டத்தின் நோக்கங்கள்	உத்தேச பெறுபேறு/இலக்கு	அமுல்படுத்தும் நிறுவனம்
விசேட அபிவிருத்திக் கருத்திட்டங்கள்					
1	வெலிகம இலை வாடும் நோய் ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டம்	105.00	நோய் பரவுவதை குறைத்தல் மற்றும் பாதிக்கப்படும் பிரதேசங்களில் நோய் முகாமைத்துவம் செய்தல்	• நோய் மரங்களை அடையாளப்படுத்தி அகற்றல் • அகற்றிய மரங்களுக்கு நட்டீடு செலுத்தல் • விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் • காணி உரிமையாளர்களின் பொருளாதார மட்டத்தை பாதுகாத்தல் • பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தல்	தெங்கு பயிர் செய்கை சபை தெங்கு ஆராய்ச்சி நிறுவகம்
2	கலப்பின தேங்காய் உற்பத்திக் கருத்திட்டம் (கினியம விதை தேங்காய் பூங்கா)	8.00	தேசிய தென்னை பயிர் செய்கை நிகழ்ச்சித்திட்டத்திற்கு கலப்பின பயிர் செய்கையை மேம்படுத்த விதை தேங்காய் உற்பத்தி	• உலர்த்தும் இயந்திரங்கள் 2 ஐ கொள்வனவு செய்தல் • வடிகட்டி தொகுதிகள் 2 ஐ கொள்வனவு செய்தல் • குழாய் நீர்ப்பாசன கட்டமைப்புக்கு பம்பி அலகை தாபித்தல் • மகரந்த சேர்க்கை ஆய்வுகூடத்திற்கு தளபாடம் கொள்வனவு • PCR இயந்திரம் கொள்வனவு • எஸ்ஆர் மற்றும் ஜீட் விதை கன்று கொள்வனவு மற்றும் வெற்றிடங்களை நிரப்புதல்	தெங்கு ஆராய்ச்சி நிறுவகம்
3	தென்னை பயிர் செய்கையின் கலை ஒழிப்பு கொள்ளைப் பூச்சு		கொள்ளைப் பூச்சு கட்டுப்படுத்துவதற்காக மாற்று கொள்ளைப் பூச்சு உற்பத்தி மற்றும் விஸ்தரித்தலும், விநியோகமும்	• மாற்று கொள்ளைப் பூச்சு உற்பத்திக்கான ஆய்வுகூடம் தாபிக்கவென கட்டிடங்களை புனரமைத்தல் • களஞ்சிய வசதிகளை செய்துகொடுக்க கட்டிடங்களை புனரமைத்தல் • பூச்சுகளை விநியோகிக்கும் வலையமைப்பை விஸ்தரித்தல் • ஆய்வுகூட உபகரணம் மற்றும் வளிச்சீராக்கி கொள்வனவு • பூச்சுக் கட்டுப்பாட்டு நிகழ்ச்சித்திட்டத்தை கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்ய உபகரணம் கொள்வனவு செய்தல் • பிரச்சாரமும், நிருவாகமும்	தெங்கு பயிர் செய்கை சபை
4	ஈர வலய கலப்பின விதை	6.00	இடை ஈரவலயத்துக்கு கலப்பின தென்னை உற்பத்திக்காக புதிய தென்னை விதை பூங்காவை தாபித்தல்	• விதை வகைகளை உற்பத்தி செய்வதற்கு கையினாலான மகரந்த சேர்க்கை • விதை கன்று உற்பத்தி • ஆரம்ப காணி ஒழுங்குபடுத்தல் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி, விதை கன்றுகள் 650 ஐ நாட்டல் • உபகரணம் கொள்வனவு • மகரந்த சேர்க்கை ஆய்வுகூடம் நிர்மாணித்தல்	தெங்கு ஆராய்ச்சி நிறுவகம்
மொத்தம்		134.00			

2021 தெங்கத் துறையின் இலக்குள் சுட்டிகள் விரிவாக..

விபரம்	2021 இன் இலக்கு
தெங்க விளைச்சல் (காய் மில்லியன்)	3224
ஏற்றுமதி வருமானம் (ரூ.பி.)	161
விளைச்சல் (காய்/ஹெக்ரயார்)	7036
தென்னங் கன்று உற்பத்தி (கன்று மில்லியன்)	4.0
புதிய பயிர்செய்கை (ஹெக்.)	3840
மீள் பயிர்செய்கை (ஹெக்.)	256
உப பயிர்செய்கை (ஹெக்.)	3025
வீட்டுத் தோட்டப் பயிர்செய்கை (கன்று)	2,732,000
பயிரிடாத வயற்காணிகளில் தென்னை பயிர்செய்கை (கன்று)	160,000



	2020 සත්‍ය	2021 පුරෝකථනය	2022 පුරෝකථනය	2023 පුරෝකථනය	2024 පුරෝකථනය	2025 පුරෝකථනය
පරිභෝජනය සඳහා පොල් ගෙඩි අවශ්‍යතාවය	1827	1827	1827	1827	1827	1827
කර්මාන්ත සඳහා පොල් ගෙඩි අවශ්‍යතාවය	1125	1397	1556	1669	1796	2084
සමස්ථ පොල් ගෙඩි අවශ්‍යතාවය	2952	3224	3383	3496	3623	3911

2.1.3 தெங்குத் துறையின் அபிவிருத்தி செய்வதிலுள்ள சவால்கள்

உலகில் தேங்காய் பயன்பாடு நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்லும் போக்கு காணப்படுகின்றது. மேலும் கொவிட் 19 தொற்றுக்கு மத்தியில் உலக மக்களின் பொருளாதார, சமூக தேவைகள் மாற்றமடைந்து வருவதுடன் காலநிலை மற்றும் வானிலையும் துரிதமாக மாற்றமடைந்து வருகின்றன. எனவே தெங்குத் துறை மூலம் உள்நாட்டு பொருளாதாரத்திற்கும், சர்வதேச சந்தைக்கும் சமர்ப்பிக்கப்படும் உற்பத்திகளும் காலத்திற்கு ஏற்றவாறு மாற்றமடைய வேண்டும் என்பதுடன், தெங்கு ஆராய்ச்சி நிறுவகம், தென்னைப் பயிர் செய்கை சபை மற்றும் தென்னை அபிவிருத்தி அதிகரசபை ஆகிய நிறுவனங்கள் மூலம் வழங்கப்படும் சேவைகளும் காலத்தின் தேவைகளுக்கு அமைய மாற்றமடைய வேண்டும்.

தெங்கு ஆராய்ச்சி நிறுவகம், தென்னை பயிர் செய்கை சபை, தென்னை அபிவிருத்தி அதிகாரசபை ஆகிய நிறுவனங்களிடமிருந்து பெற்றுக் கொண்ட தரவுகளுக்கு அமைய பின்வரும் சிக்கல்கள் தெங்குத் துறையில் இனங்காணல முடிந்தது.

தெங்குப் பயிர் செய்கை சம்பந்தமான சிக்கல்கள்

- ஒரு ஹெக்ரயாரிலிருந்து கிடைக்கும் சராசரி தேங்காய விளைச்சல் குறைந்த பெறுமானத்தைக் கொண்டிருத்தல்
- தென்னை பயிர் செய்கைக்கு மேற்கொள்ளும் முதலீடு நீண்டகால அடிப்படையிலானதாக இருப்பதனால் அதற்கு பயிர் செய்கையாளர்கள் ஊக்கம் கொள்ளாமை.
- இலங்கையில் பெரும்பாலும் தென்னை காணிகள் புனரமைக்க வேண்டிய மட்டத்தில் காணப்படுகின்றது. குறிப்பாக மண் பாதுகாப்பு மற்றும் ஈரத்தன்மையை பாதுகாப்பது முக்கயிமானதாகும். இதற்காக கூடுதல் நிதி செலவாவதனால் பயிர் செய்கை மேற்கொள்வோர் கூடுதல் அக்கரை காட்டுவதில்லை.
- தென்னை காணி முகாமைத்துவம் மிகவும் பலவீனமான நிலையில் காணப்படுவதுடன், உரம் இடுவது இடம்பெறுவது 30%-40% ஆன காணிகளுக்கு மாத்திரமாகும்.
- உரம், விவசாய இரசாயனம் போன்றவற்றுக்கு சந்தையில் பற்றாக்குறை நிலவுகின்றது.
- தென்னை தனிப் பயிராக பயிரிடப்படுகின்றது. மேற்படி காணிகளில் துணை பயிர் செய்கைகளை பிரபல்யப்படுத்த ஒரு சில விவசாயிகள் ஊக்கம் கொள்வதில்லை.
- சீரற்ற காலநிலை மற்றும் வானிலை மாற்றங்கள், தொடர்ச்சியாக இட்பெறும் வரட்சி நிலைமை காரணமாக தெங்கு விளைச்சலில் கடும் பாதிப்பு ஏற்படுவதுடன், அதன் மூலம் தென்னை பயிர் செய்கை பலவீனமடைய ஆரம்பித்துள்ளது.
- தென்னை செய்கையில் ஏற்பட்டுள்ள விலங்குகளின் பாதிப்பு காரணமாக குறிப்பாக முள்ளம்பன்றி, காட்டுப் பன்றி, மர அணில், செங்குரங்கு போன்றவற்றினால் பயிர் செய்கைக்கு கடும் பாதிப்பு ஏற்படுதல்.
- தென்னை பயிருக்கு பயன்படுத்தப்பட்டுள்ள பயிர் செய்கைக்கு உகந்த காணிகள் வேறு பணிகளுக்காக துண்டாடப்படுதல்.
- பிரதான தெங்கு பயிர் செய்யப்படும் மாவட்டங்களில் காணப்படுகின்ற பெரும்பாலான பயிர் செய்கைகள் 50 வருடங்களை தாண்டியதாக உள்ளதுடன், ஒவ்வொரு பயிர் செய்கையும் மீளமைக்கப்பட வேண்டியுள்ளன.
- ஊழியப் பற்றாக்கு மற்றும் அதிகரிக்கும் ஊழியச் செலவினம் காரணமாக தென்னங் காணிகளை பராமரிப்புச் செய்வது கடினமாக உள்ளது.
- வெலிகம தென்னை ஓலை வாடும் நோய், கறுப்பு பூச்சி, சிவப்புப் பூச்சி நோய் காரணமாக வருடாந்தம் பெரும் எண்ணிக்கையான தென்னங் கன்றுகளையும், மரங்களையும் இழக்க நேரிடுதல்.

தென்னப் பயிர் செய்கையாளர்களுக்குள்ள சிக்கல்கள்

- சிறு தென்னந் தோட்ட உரிமையாளர்கள் மத்தியில் காணப்படுகின்ற தொழில்முயற்சிசார் அறிவுக் குறைவு.
- சிறு தென்னந் தோட்ட உரிமையாளர்களின் சந்தைப்படுத்தல் அறிவுக் குறைவு.
- முறையாக ஒழுங்குபடுத்தப்பட்ட நிலைபேறான சமுதாய அடிப்படையிலான அமைப்புக்கள் இல்லாமை.

தெங்கு சம்பந்தமான கைத்தொழில் சம்பந்தப்பட்ட சிக்கல்கள்

- தேங்காய் சம்பந்தமான உற்பத்தி பல்வகைப்படுத்தலுக்குத் தேவையான இயந்திரசாதனங்கள் மற்றும் உபகரணங்களுக்கான பற்றாக்குறை காணப்படுகின்றது.
- உற்பத்தில் பல்வகைப்படுத்துதல் மற்றும் பெறுமதி சேர்க்கப்பட்ட பொருட்களின் உற்பத்திக்குத் தேவையான திறமைகள் குறைவாக உள்ளமை.
- தேங்காய் பற்றாக்குறை காரணமாக கைத்தொழிலுக்குத் தேவையான மூலப்பொருட்கள் (தேங்காய் எண்ணெய், துருவல் தேங்காய், தேங்காய் பால்) போதியளவில் கிடைக்காமை காரணமாக இந்தக் கைத்தொழில்களை பேணிவருதல் மற்றும் சர்வதேச ரீதியில் போட்டியிடுவதற்கான ஆற்றல் குறைவாகியுள்ளது.
- பூகோள சந்தையின் கேள்விக்கு ஏற்றவாறு பெறுமதி சேர்கக்ப்பட்ட உற்பத்திகள் மற்றும் சர்வதேச தரநியம தேவைகளுக்கு அமைய உற்பத்திகள் சந்தையில் சமர்ப்பிக்கப்படாமை.
- வீட்டில் பயன்படுத்தப்படும் தேங்காயின் சிரட்டை மற்றும் தும்புகள் போதியளவில் கைத்தொழிலுக்கு கிடைக்காமை.
- தேங்காய் நீர் சம்பந்தமான கைத்தொழிலை மேம்படுத்துவதில் சட்டரீதியான தடைகள் காணப்படுதல்.
- தேங்காய் விலை மாற்றமடைவதும் கைத்திலுக்கு பாதகமான பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.
- கைத்தொழிலை பேணிவருவதற்கு உயர் மட்ட உகந்த தொழில்நுட்பத்தைப் பெற்றுக் கொள்வதிலுள்ள சிக்கல்கள்.
- கைத்தொழில் தொடர்பில் ஆரம்ப மூலதனத்தைப் பெற்றுக் கொள்வதிலுள்ள சிக்கல்கள்.

சந்தை சம்பந்தமான சிக்கல்கள்

- தேங்காய்க்கு காணப்படுகின்ற பண்ணை விலை நிலையற்றதாகவும், குறைவாகவும் உள்ளதனால் கிடைக்கும் வருமானம் குறைவாக இருப்பதனால் புதிய தொழில்நுட்ப முறைகளைப் பயன்படுத்த விவசாயிகள் விரும்புவதில்லை.
- சந்தைப்படுத்தல் அறிவு குறைவாக உள்ளதனால் சிறிய தேங்காய் தோட்ட உரிமையாளர்களுக்கு கிடைத்துள்ள சந்தைப்படுத்தல் வாய்ப்புக்கள் குறைவு.
- உற்பத்தி செய்யப்பட்ட தேங்காயில் கூடுதலானவை உள்நாட்டு நுகர்வுக்கு பயன்படுத்தப்படுவதனால் நாட்டில் தேங்காய் விலையை கட்டுப்படுத்த பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதனால் தேங்காய் உற்பத்திக்கு கிடைக்கும் சந்தையின் இலாபம் குறைவாக உள்ளமை.
- தேங்காயை விநியோகிக்கும் கட்டமைப்பின் மூலம் இடைத்தரகவர்கள் கூடுதல் இலாபம் உழைத்தல்.
- உரிய தரம் இன்றி உற்பத்திகள் சந்தைக்கு விடப்படல்.
- தேங்காய் எண்ணெய்க்கு மாற்றீடாக பாம் எண்ணெய் இறக்குமதி, பாம் எண்ணெய்யுடன் தேங்காய் எண்ணை கலக்கப்பட்டு தரக்குறைவான எண்ணை சந்தைக்கு விடப்படுதல்.

நிறுவனம்சார் சிக்கல்கள்

- தேங்காய் கைத்தொழில் சம்பந்தமான தரப்பினர்களின் தேவைகளை நிறைவேற்றப் போதுமான வெளிக்கள அலுவலர்கள் இல்லாமை.

- தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் தென்னைப் பயிர்செய்கை சபையின் பிராந்திய சேவை கட்டமைப்பு சமநிலையானதாக இல்லாமை மற்றும் போதியளவு உள்ளக அலுவலர்கள் இல்லாமை.

- தற்போது பேணிவரப்படுகின்ற கருத்திட்டச் சேவைகளுக்கான பிரவேசம் சகல தரப்பினர்களினதும் சிக்கல்களைத் தீர்ப்பதற்குப் போதியளவானதாக இல்லாமை.

- தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் தென்னைப் பயிர்செய்கை சபை மற்றும் கற்பகதரு நித முகாமைத்துவ சபை ஆகிய மூன்று நிறுவனங்களினாலும் முறையற்ற தேங்காய் கைத்தொழில் சம்பந்தமான அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதனால் உற்பத்தித்திறன், வினைத்திறன் மற்றும் முதலீட்டு விளைதிறன் குறைந்த மட்டத்தில் காணப்படுதல்.


- தற்போது காணப்படுகின்ற விஸ்தரித்தல் சேவையின் வினைத்திறன் குறைவாக உள்ளமை.

- பாரியளவில் கைத்தொழில் பரந்துள்ள பிரதேசங்களுக்கு அலுவலர்கள் பகிரப்படுவதிலுள்ள முரன்பாடுகள் மற்றும் தற்போது சேவையாற்றி வருகின்ற வெளிக்கள் அலுவலர்களின் வசதிகள் குறைவாக உள்ளமை.


2.1.4 தெங்கு துறையின் - ஒட்டுமொத்த முன்னேற்றம்

தெங்கு ஏற்றுமதி


ஏற்றுமதி செயலாற்றுகை அ.டொ.மி. (2010 முதல் 2021 வரை)



வருடாந்த தெங்கு ஏற்றுமதி வருமானம் ஒட்டுமொத்த வருமானத்தின் விகிதமாக (2010 முதல் 2020 வரை)



தெங்கு ஏற்றுமதி உற்பத்தியின் ஒழுங்கமைப்பு ஏற்றுமதி வருமானத்தின் පොල් කඹිகிதமாக – 2021 ஆம் ஆண்டு



தரவு மூலம் : இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை

தெங்குக் கைத்தொழில் மூலம் உள்நாட்டு உணவுத் தேவையை பூர்த்தி செய்வதற்கு மேலதிகமாக 2021 ஆண்டு டொலர் பில்லியன் 0.834 ஏன ஏற்றுமதி வருமானம் உழைக்கப்பட்டதுடன், மொத்த தேசிய உற்பத்திக்கு 1% ஆன பங்களிப்பு வழங்கப்பட்டது. மேலும் தேங்காய் உற்பத்தி நாட்டின் ஒட்டுமொத்த விவசாய உற்பத்தியில் சுமார் 12% ஆகும்.

தெங்கு சார்ந்த உற்பத்திகளின் ஏற்றுமதியை கவனத்தில் கொள்ளும் போது இலங்கை உலகின் பாரிய நான்காவது ஏற்றுமதியாளராக இருப்பதுடன், துருவல் தேங்காய், தேங்காய் நார் சார்ந்த உற்பத்தி, தேங்காய் எண்ணெய், தேங்காய் நீர் பிரதான ஏற்றுமதி உற்பத்திகளாகும்.

2010 ஆம் ஆண்டு தேங்காய் சார்ந்த ஏற்றுமதி வருமானம் 277.63 மி.அ.டொ. ஆகும் என்பதுடன், 2021 ஆம் ஆண்டளவில் மேற்படி பெறுமதி 834.12 மி.அ.டொ. ஆக, அதாவது 2010 – 2021 ஆண்டின் நடுப்பகுதி வரையான காலப் பகுதியில் ஏற்றுமதி வருமானம் மூன்று மடங்கை விடவும் அதிகரித்துள்ளது.


மேலும், கைத்தொழில் ஏற்றுமதி வருமானத்தில் தெங்கு சார்ந்த உற்பத்தி வருமானம் 2010 ஆம் ஆண்டில் 3.3% ஆக இருந்ததுடன், இது 2021 ஆம் ஆண்டில் 6.7% ஆன பெறுமதியை வெளிப்படுத்தியுள்ளது.

தெங்கு சார்ந்த உற்பத்தி ஏற்றுமதி

2021 ஆண்டு தெங்கு சார்ந்த 40 வகை உற்பத்திகள் 150 நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன.

தெங்குத் துறையின் ஒட்டுமொத்த செயலாற்றுகை – வருடாந்த

விபரம்	Mz;L 2019	Mz;L 2020	Mz;L 2021 ,yf;F
தெங்கு விளைச்சல் (மில். காய்)	3085.567	2792.202	3224
ஏற்றுமதி வருமானம் (ரூ.பி.)	108	122.5	161
விளைச்சல் (காய்/ஹெக்.)	5655	4827	7036
தென்னங் கன்று உற்பத்தி (கன்று மில்லி.)	2.74	1.52	7.5
புதிய பயிர்செய்கை (ஹெக்.)	5110	4004	4340
மீள் பயிர்செய்கை (ஹெக்.)	106	318	620
உப பயிர்செய்கை (ஹெக்.)	2819	3340	1240
வீட்டுத் தோட்ட பயிர்செய்கை (ஹெக்.)	719,723	835,122	6,530,000
பயிர்செய்யாத வயலில் தென்னை பயிர்செய்கை (மரம்)			32,000



மூலம் - தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை

ஏற்றுமதி வருமானம்

உற்பத்தி வகை	ஏற்றுமதி வருமானம் சனவரி முதல் டிசம்பர் 31 வரை (ரூ,மி.)		
	2020 ((&>kp.)	2021 ((&>kp.)	tsh;r;rp %
தேங்காய் சம்பந்தமான	63,292.56	86,437.00	37
நார்	5,307.67	5,777.68	9
நார் முடிவுப் பொருட்கள்	32,898.36	43,736.46	33
சிரட்டை சம்பந்தமான	20,678.17	29,371.97	42
ஏனையன	337.49	710.92	111
மொத்தம்	**122,514.26**	**166,034.02**	**36**

ஏற்றுமதி மாற்றமடைதல்

உற்பத்தி வகை	சனவரி முதல் டிசம்பர் 31 வரை					
	அளவு (மெ.தொ.)			வருமானம் (ரூ.மி.)		
	2020	2021	tpj;jpahrk; %	2020	2021	tpj;jpahrk; %
தேங்காய் எண்ணெய் (மெ.தொ.)	5,180	3,825	-26	2,637.90	2,319.74	-12
சுத்தமான தேங்காய் எண்ணெய் (மெ.தொ.)	14,584	14,960	3	11,944.55	14,744.20	23
தேங்காய் நீர் (மெ.தொ.)	17,910	26,414	47	2,781.21	4,485.30	61
செவ்இளனி (காய்)	5,924,087	9,548,368	61	598.61	900.00	50
தேங்காய் (காய்) '000	15,838	14,565	-8	1,226.20	1,213.90	-1
பெரிஸ்ரல் நார் (மெ.தொ.)	1,231	1,785	45	322.29	475.38	47

தேங்காய் ஏலம் சராசரி விலை

விலை வகை	அலகு	2020 ஆண்டின் விலையின் சராவரி	2021 ஆண்டின் விலையின் சராவரி	வித்தியாசம்%
ஏலம் (கொழும்பு)	1000 காய்களின் சராசரி விலை ரூபா	48,891	56,513	16
மொத்த * பாரியளவில்	1000 காய்களின் சராசரி விலை ரூபா	64,154	76,226	19
சிறியளவில்	ஒரு காயின் சராசரி விலை ரூபா	57,946	67,531	17
சில்லறை * பாரியளவில்		75.7	92.38	22
சிறியளவில்		61.3	74.87	22

**மூலம் - ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவகம் குறிப்பு – கொவிட் தொற்று காரணமாக 2021 இன் சில மாதங்களுக்கு விலை வெளியிடப்படவில்லை*

2.1.4.1 தெங்குத் துறையின் அபிவிருத்திக்கான நடவடிக்கைகள்

2.1.4.1.1 தெங்கு பயிர்செய்கை சபை

நோக்கு

"இலங்கையை உலகின் மிகவும் உயர் வினைத்திறனுடைய தெங்கு உற்பத்தியாளராக மாற்றுதல்"

செயற்பணி

"இலங்கையில் உள்நாட்டு நுகர்வுக் கேள்வி மற்றும் ஏற்றுமதித் தேவைகளை நிறைவு செய்து, தன்னிறைவு நிலைமையை அடைந்து கொள்வதற்காக வினைத்திறனான ஆலோசனை மற்றும் செயற்திட்ட சேவையொன்றின் ஊடாக தெங்கு உற்பத்தியை உயர்வடையச் செய்வதன் ஊடாக தெங்கு பயிர்ச் செய்கையாளர்களுக்கு உயர் வாழ்வாதார தரமொன்றை அடையச் செய்தல்"

தெங்கு பயிர்ச் செய்கைக் சபையின் சேவைகளின் ஊடாக தெங்குப் பயிரச் செய்கைக்குத் தேவையான தொழில்நுட்ப மற்றும் வசதியளிப்புக்களை பயிர்ச் செய்கையாளர்களுக்கு வழங்கப்படுகின்றத. அதன் கீழ் கீழ் குறிப்பிட்ட சேவைகள் தெங்கு பயிர்ச் செய்கைச் சபையிலிருந்து பெற்றுக் கொள்ள முடியும்.

- தொழில்நுட்ப ஆலோசனைகள்
- நிதிக் கடன் உதவிகள்
- நிதி உதவிகள்
- வசதியளிப்புக்கள்
- நன்கொடையாக பயிர்ச் செய்கையாளர்களுக்கு வருடாந்தம் வழங்கப்படுகின்ற தென்னங் கன்றுகளின் அளவு 2 – 3 மில்லியன் அளவாகும்.

- .

ஒவ்வொரு கன்றுக்கும் ரூ. 100.00 உதவு தொகையொன்று பயிர்ச் செய்கையாளர்களுக்கு வழங்கப்படுகின்றது. அதன் பிரகாரம் நாற்றொன்று ரூ. 75.00 இற்கும் பொலிதீன் பையில் உள்ள நாற்றொன்று ரூ. 150.00 இற்கும் பயிர்ச் செய்கையாளருக்கு பெற்றுக் கொள்ள முடியும்.

மேற்படி சேவைகளை வழங்குவதற்காக தெங்கு பயிர்ச் செய்கைச் சபையின் துறைகளில் கடமையாற்றுகின்ற கள அலுவலர்கள் 200 இற்கு மேற்பட்ட அளவில் இருப்பதுடன் அவர்கள் நாடு பூராகவும் பிரதேச அலுவலகங்கள் 19 இன் மேற்பார்வையின் கீழ் துறையில் பணியாற்றுகின்றனர்.

தெங்கு பயிர்ச் செய்கைச் சபையின் கீழ் தற்பொழுது காணப்படுகின்ற நிவாரண நிகழ்ச்சித்திட்டங்கள்

- பலதரப்பட்ட புனரமைப்பு முறைமைகளின் கீழ் தெங்குக் காணிகளை புனரமைப்புச் செய்தல் - ஒரு ஏக்கருக்கு ரூ. 30,000.00
- தெங்குப் பயிருக்கு நீர் விநியோகத்தை மேம்படுத்துவதற்காக குழாய் நீர் தொடர்பான உதவு தொகை நிகழ்ச்சித்திட்டம் - ஒரு ஏக்கருக்கு ரூ. 20,000.00
- புதிய / மீள் / கீழ் பயிரிடல் நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் 2017, 2018, 2019 ஆம் ஆண்டுகளில் நாற்றப்பட்ட தென்னங் கன்றுகளை மேற்பார்வை மற்றும் தற்பொழுதுள்ள கன்றுகளின் பராமரிப்புக்கு உதவுதொகைகளை வழங்குதல் - ஒரு கன்றுக்கு ரூ. 50.00
- உதவுதொகையின் கீழ் தென்னங் காணிகளில் உபபயிர்செய்கைகளை மேற்கொள்ளல் - ஒரு ஏக்கருக்கு ரூ. 10,000.00
- காட்டு மிருகங்களினால் தெங்குப் பயிர்ச் செய்கையை பாதுகாக்கும் உதவுதொகை நிகழ்ச்சித்திட்டம் - நாற்றொன்றுக்கு ரூ. 200.00

தெங்கு பயிர்ச் செய்கை சபையினால் தெங்குத் துறையின் முன்னேற்றத்திற்காக அமுல்படுத்தப்பட்டுள்ள விசேட நிகழ்ச்சித்திட்டங்கள்

உத்தேச பெறுபேறுகள்

தெங்குப் பயிர்செய்கையின் வினைத்திறனை மேம்படுத்தி நாடு பூராகவும் தெங்குப் பயிர்ச் செய்கையை விஸ்தரித்தல் மற்றும் நோயற்ற பயிர்ச் செய்கையொன்றை பேணிச் செல்வதற்காக வசதிகளை வழங்குதல்.

விசேட செயற்பாடுகள்

- ஊழியர் படை நிகழ்ச்சித்திட்டம்
- தென்னங் கன்று உதவுதொகை
- விஸ்தரிப்புச் செயற்பாடுகளுக்கு தகவல் தொழில்நுட்ப முறைமைகளின் பயன்பாடு
- பூச்சுகளுக்கு எதிரான நுண்ணங்கி விநியோக வலையமைப்பை விஸ்தரித்தல்
- தெங்கு பயிர்ச் செய்கையில் பிரதான கிருமிச் சேதத்தை வரைபடப்படுத்தல்.

- **ஊழியர் படை நிகழ்ச்சித்திட்டம்**

தெங்குக் காணிகளில் விஞ்ஞான ரீதியான பணிகளை மேற்கொள்ளும் போது தேவையான பயிற்சி உழைப்பினை விநியோகிப்பதற்காக தெங்கு பயிர்ச் செய்கை சபையின் ஊடாக களச் செயற்பாடுகள் தொடர்பாக பயிற்சி வழங்கப்பட்ட ஊழியர்களை இத் துறைக்கு விடுவிக்கப்பட்டுள்ளனர். அதன் பிரகாரம் தெங்கு பயிர்ச் செய்கையாளர்களுக்கு நியாயமான தொகையொன்றைச் செலுத்துவதன் மூலம் மேற்படி ஊழியர்களின் சேவைகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.

தென்னை நாற்றுக்கள் நிவாரணமாக வழங்குதல்.

தென்னை பயிர்ச் செய்கைச் சபையிலிருந்து தென்னங் கன்றுகளை கொள்வனவு செய்கின்ற எந்தவொரு பயிர்ச் செய்கையாளருக்கும் இதன் கீழ் சலுகை விலைக்கு தென்னங் கன்றுகளைப் பெற்றுக் கொள்ள முடியும். இங்கு நிலத்தில் உள்ள நாற்றொன்றுக்கு ரூ. 75.00 இற்கும் மேலும் பொலிதீன் பையில் உள்ள தென்னங்கன்றொன்றை ரூ. 150.00 போன்ற குறைந்த விலையில் கொள்வனவு செய்து கொள்வதற்கான வசதிகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், எந்தவொரு பயிர்ச் செய்கையாளருக்கு மேற்படி சலுகை விலையின் கீழ் எந்தவொரு தடையுமின்றி தென்னை பயிர்ச் செய்கை சபைக்குரிய எந்தவொரு நாற்று மேடையிலிருந்து அல்லது பிரதேச அலுவலகத்திலிருந்து கொள்வனவு செய்து கொள்ள முடியும். எதிர்காலத்தில் நாற்றுக்களை விநியோகிக்கும் வலையமைப்பை கமநலசேவை மன்றம் வரை விரிவு படுத்தப்படும்.

விரிவாக்க செயற்பாடுகளுக்கு தகவல் தொழில்நுட்பப் பயன்பாடு

பரவல்படுத்தல் செயற்பாடுகள் தொடர்பாக தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பப் பயன்பாடு

தென்னை பயிர்ச் செய்கையில் தொழில்நுட்ப தகவல்களை இலகுவாக பயிர்ச் செய்கையாளர்களுக்கு வழங்குவதற்கு கையடக்க தொலைபேசியில் பதிவிறக்கம் செய்யக் கூடிய மென்பொருளொன்று (Coconut App) தற்பொழுது தென்னை பயிர்ச் செய்கைச் சபையின் மூலம் உருவாக்கப்பட்டுள்ளது. அதன் ஊடாக தென்னை பயிர்ச் செய்கைச் சபையின் தொழில்நுட்ப அலுவலரொருவரின் ஒத்துழைப்பின்றி தமது தென்னங் காணிக்கு உரமிடல், கால் நடைகளை ஈடுபடுத்தல் போன்ற விஞ்ஞான செயற்பாடுகளை மேற்கொள்ளத் தேவையான அறிவு அந்த மென்பொருள் ஊடாக பெற்றுக் கொள்ள முடியும். அந்த தொலைபேசி மென்பொருள் குகுள் Google Play Store பிளே ஸ்டோர் மற்றும் எப்பல் எப் ஸ்டோர் App store ஊடாக பதிவிறக்கம் செய்ய முடியும்.

- **பூச்சு நுண்ணங்கிகளை அழிக்கும் நுண்ணங்கிகளை விநியோகிக்கும் வலையமைப்பை விரிவுபடுத்தல்.**

தெங்கு விளைச்சலுக்கு பிரபல்யமான பாதிப்பொன்றை மேற்கொள்ளும் மைட்டாக்களின் கட்டுப்பாட்டுக்கா தென்னை ஆராய்ச்சி நிறுவனத்தின் சிபாரிசின் படி மைடாவுக்கு எதிரான மைட்டாக்களை உற்பத்தி செய்து விநியோகிக்கும் வலையமைப்பை விஸ்தரிப்புச் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. அதன் பிரகாரம் 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் மைட்டாக்களை அழிக்கும் நுண்ணங்கிகளின் களஞ்சியசலைகள் 4 நிறுவப்பட்டுள்ளன. அதன் ஊடாக பயிர்ச் செய்கையாளர்களுக்கு இலகுவாக மைட்டாக்களுக்கு எதிரான நுண்ணங்கிகளை பெற்றுக் கொள்வதற்கான இயலுமை கிடைக்கப் பெற்றுள்ளது.

- **தெங்கு பயிர்களில் பிரதான கிருமிகளின் பாதிப்புக்களை வரைபடப்படுத்தல்**

தென்னைப் பயிர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்துகின்ற பிரதான கிரிமிகளின் பரவல் மற்றும் அவற்றின் பாதிப்பின் தீவிரத்தன்மை பற்றி கவனத்திற் கொள்ளப்பட்டது. அதன் ஊடாக பயிர்ச் செய்கையாளர்களுக்கு இலகுவாக மைட்டாக்களுக்கு எதிரான நுண்ணுயிர்களை பெற்றுக் கொள்வதற்கான இயலுமை கிடைக்கப் பெறுகின்றன. இந்த வரைபடங்களில் உள்ள தகவல்கள் கிரிமிக் கட்டுப்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பாக பயன்படுத்தப்படுவதுடன் அந்த நிகழ்ச்சித்திட்டங்களின் வினைத்திறன் தன்மையை மதிப்பீடு செய்வதற்காக இந்த வரைபடங்கள் பயன்படுத்திக் கொள்ளப்படுகின்றன.

தெங்குப் பயிர்ச் செய்கைச் சபையினால் அமுல்படுத்தப்பட்ட செயற்றிட்டங்களின் நிதிசார் மற்றும் பௌதீக முன்னேற்றம்

2021.12.31 ஆம் திகதிக்கு விசேட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றம்

தென்னங் கன்று விநியோக உதவுதொகை நிகழ்ச்சித்திட்டம்

நிகழ்ச்சித்திட்டம்	அலகு	பௌதீக இலக்கு (வருடாந்தம்)	**2021.12.31** ஆம் திகதியில் முன்னேற்றம்	நிதிச் செயலாற்றுகை (ரூ.மி)
புதிய/மீள்/ உப பயிர் செய்கை நிகழ்ச்சித்திட்டம்	தென்னங் கன்றுகள்	745,500	846,027	232.80
வீட்டுத்தோட்ட நிகழ்ச்சித்திட்டம்		100,000	124,274	
இறந்து போன கன்றுகளுக்கான மீள் நடுகை நிகழ்ச்சித்திட்டம்		241,800	192,216	
விசேட வீட்டுத் தோட்ட நிகழ்ச்சித்திட்டம்		2,183,700	615178	
மொத்தம் (உதவுதொகை)		2,600,000	1,777,695	

தெங்கு அபிவிருத்தி பயிற்சி நிலையத்தின் விஸ்தரிப்பு, பயிற்சி மற்றும் ஊடக நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றம்

நிகழ்ச்சித்திட்டம்	அலகு	பௌதீக இலக்கு (வருடாந்தம்)	2021.12.31 திகதிக்கு பௌதீக முன்னேற்றம்	நிதி முன்னேற்றம் (ரூ.மி)
பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்	நிகழ்ச்சித்திட்டம்	164	55	47.619
தேசிய மட்டத்தில் கண்காட்சிகள்	கண்காட்சிகள்	5	5	
பயிற்சி உதவுகைகளை தயார் செய்தல்	துண்டுப்பிரசுரங்கள்	1,320,000	374,700	
கூட்டங்களை நடாத்தல்	கூட்டங்கள்	4	8	
குழு வியாபித்தல் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தல்	நிகழ்ச்சித்திட்டம்	700	638	
தனி நபர் சந்திப்பு	பயிரிடுவோர்	30000	71131	
10 ஏக்கருக்கு மேற்பட்ட தென்னை காணி அபிவிருத்தி	பயிரிடுவோர்	500	596	
தென்னை பயிர் செய்கையின் வியாபித்தல் நடவடிக்கைகளுக்கு ஊடகங்களை பயன்படுத்திக் கொள்ளல்	ஒன்று	90	102	

நோய் மற்றும் பீடைக் கட்டுப்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்கள்

நிகழ்ச்சித்திட்டம்	அலகு	பௌதீக இலக்கு (வருடாந்தம்)	2021.12.31 திகதிக்கு பௌதீக முன்னேற்றம்	நிதி முன்னேற்றம் (ரூ.மி)
விழிப்பூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள்	நிகழ்ச்சித்திட்டம்	12	14	11.037
மைட்டா எதிர் நுண்ணங்கிகளை மரங்களுக்கு இடுதல்	பக்கட்கள்	460000	246386	
சிவப்பு மற்றும் கறுப்பு குறுமினி கட்டுப்பாட்டுக்காக தென்னங் காணிகளுக்கு பெமோன் மருந்து இடல்	பெரமோன் வயல் (மருந்து)	31000	11274	
தென்னங் காணிகளில் புழுக் கட்டுப்பாட்டுக்கு தென்னும் புழு கட்டுப்பாட்டு எதிர் இனங்களை அக் காணிகளுக்கு விடுவித்தல்	மருந்து	2500	735	
சிவப்பு குருமினி கட்டுப்பாட்டுக்கு மொனொக்டோஸ் விற்பனை	லீட்டர்	2000	555	

தென்னங் கன்று உற்பத்தி மற்றும் நாற்றுக்களை பயிரிடல்

2021 ஆம் ஆண்டு 4 மில்லியன் தென்னங் கன்றுகளை நாட்ட தெங்கு பயிர் செய்கை சபை திட்டமிட்டிருந்ததுடன், ஒவ்வொரு கன்றையும் பயிர் செய்கையாளர்களுக்கு நிவாரண விலையில் விற்பனை செய்ய திட்டமிடப்பட்டிருந்தது. அதற்கமைய ஒரு பொலி பேக் கன்று ரூ. 150 இற்கும், பயிர்நில கன்று ரூ. 75 இற்கும் விற்பனை செய்யப்பட்டது. இவை புதிய/மீள்/ கீழ் பயிர் செய்கையின் கீழ் தென்னை பயிர் செய்கையாகவும், வீட்டுத் தோட்டமாகவும் பயிர் செய்யப்படலாம்.







தென்னங் கன்று உற்பத்தி மற்றும் நாற்றுக்களை பயிரிடல்

விபரம்	2020 ஆம் ஆண்டின் முன்னேற்றம்	2021 ஆண்டுக்கான இலக்கு	2021.12.31 திகதிக்கு முன்னேற்றம்
நாட்டப்பட்ட நாற்றுக்களின் எண்ணிக்கை (மில்)	1.98	4.00	2.5
தென்னங் கன்று உற்பத்தி (மில்)	1.48	4.00	3.2
விதைத் தேங்காய் விநியோகம் (மில்)	2.217	5.7	4.6

ஏனைய நிவாரண நிகழ்ச்சித்திட்டங்கள்

இதன் கீழ் தென்னங் காணி புனர்நிர்மாணம், நீர்விநியோகம், துணைப் பயிர்ச் செய்கை போன்ற அபிவிருத்தி யெற்பாடுகளுக்காக கீழ் உள்ளவாறு நிதி உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

நிகழ்ச்சித்திட்டம்	அலகு	அதற்குரிய இலக்கு (வருடாந்தம்)	2021.12.31 ஆம் திகதிக்கு பௌதீக முன்னேற்றம்	செலுத்தப்பட்ட தொகை (ரூ. மி.)
காட்டு மிருகங்களிலிருந்து பாதுகாத்தல்	கன்று	93543	87508	17.37
துணைப் பயிர் உதவி நிகழ்ச்சித்திட்டம்	ஏக்கா	2723	2569	37.86
புதிய /மீள் / கீழ் பயிர்களின் கீழ் நாற்றப்பட்ட தென்னங் கன்றுகள் பராமரிப்புக்கு உதவுதொகை வழங்குதல்	கன்று	668000	517866	33.4

நோய் மற்றும் பீடைக் கட்டுப்பாட்டு நிகழ்ச்சித்திட்டம்

நோய் மற்றும் பீடைக் கட்டுப்பாட்டின் ஊடாக தேங்காய் விளைச்சலை அதிகரித்துக் கொள்வதற்காக தென்னை பயிர்ச் செய்கை சபை நோய் மற்றும் பீடைக் கட்டுப்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துகின்றது. இங்கு தென்னைப் பயிர்ச் செய்கையின் பிரதான பீடையான சிவப்பு குருமினி, கறுப்பு குருமினி, தென்னை மைட்டா மற்றும் தென்னை இலை துளைப்பான் போன்றவற்றின் கட்டுப்பாடு தொடர்பாக விசேட நிகழ்ச்சித்திட்டங்கள் தென்னை பயிர்ச் செய்கைச் சபையின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றது. இவற்றில் சிவப்பு குருமினி, கறுப்புக் குருமினி மற்றும் தென்னை இலை துளைப்பான் கட்டுப்பாடு தொடர்பாக ஒருங்கிணைந்த பீடை கட்டுப்பாட்டு முறைமைகளை கடைப்பிடிக்கும்.

மேலும் பிரதான கிரிமிப் பாதிப்பு வரைபடப்படுத்தும் விசேட செயற்திட்டமொன்றின் கீழ் மைட்டா பாதிப்பு, சிவப்பு குருமினி பாதிப்பு, கறுப்பு குருமினிப் பாதிப்பு மற்றும் தென்னை இலை துளைப்பான் பாதிப்பு ஆகியன பிரதான பீடைப் பாதிப்புக்களின் தீவிரத்தன்மை இலங்கையில் மாவட்ட மட்டத்தில் வரைபடப்படுத்தப்பட்டுள்ளது.







நோய் மற்றும் பீடைக் கட்டுப்பாட்டு நிகழ்ச்சித்திட்டமொன்று

மாதிரி தென்னந் தோட்ட நிகழ்ச்சித்திட்டம்

தென்னை பயிர்ச் செய்கைச் சபைக்கு உரிய மாதிரி தென்னந் தோட்டங்கள் 12 ஊடாக 2021.01.01 முதல் 2021.12.31 வரை 6,116,282 தேங்காய்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. 2021.12.310 ஆம் திகதியாகும் போது தேங்காய் ஒன்றின் உற்பத்திக் கிரயம் ரூ. 19.52 சத குறைந்த மட்டத்தில் பராமரித்துக் கொள்வதற்கும் N.S.A பெறுமதியை ரூ. 50.76 உச்ச மட்டத்தில் பேணிக் கொள்வதற்கும் தென்னை பயிர் செய்கை சபைக்கு இயலுமாகியுள்ளது.

2021.01.01 முதல் 2021.12.31 ஆம் திகதி வரை மாதிரி தென்னந் தோட்டத்திற்கு ஏற்ப விளைச்சல் கீழே அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

மாதிரி தென்னந் தோட்டம்	மொத்த தென்னை விளைச்சல்	மாதிரி தென்னந்தோட்டம்	மொத்த தென்னை விளைச்சல்
போபிடிய	292249	පාසිකුඩා	219402
டெசிவெலி	881327	කොහොඹා	196273
மஹுயாய	870795	කොරේයි	235293
முந்தலம	73320	පලෙයි	250610
காட்லேன்ட்	854331	රන්දෙණිය	617767
லேனவ	857368	නාගන්ඩෝල	767547

கற்பகதரு முதலீட்டு கடன் நிகழ்ச்சித்திட்டம்

இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தென்னங் காணி 2109 ஏக்கர் அபிவிருத்தி தொடர்பாக ரூபா 66.847 மில்லியன் கடன் தொகை வங்கியினால் விடுவிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் பயன்பெறுநர்கள் 451 பேருக்கு கடன் வசதிகள் வழங்கப்பட்டுள்ளன.

தென்னை பயிர்ச் செய்கைச் சபை - 2021.12.31 ஆம் திகதியில் மொத்த நிதிச் செயலாற்றுகை

நிதிச் செயலாற்றுகை	மதிப்பீட்டுத் தொகை மில்லியன் (2021.12.31)	பெற்ற தொகை (2021.12.31)	2021.12.31 திகதியில் முன்னேற்றம் மில்லியன்	%
மூலதனம்	735.00	734.294	734.294	100
மீண்டெழும்	500.00	500.000	500.00	100

தென்னை பயிர்ச் செய்கை சபையினால் 2021.12.31 வரை செயற்படுத்தப்பட்ட செயற்திட்டங்களின் 100% சதவீத நிதி முன்னேற்றமொன்று அடையப் பெற்றுள்ளது.

2.1.4.1.2 தென்னை அபிவிருத்தி அதிகாரசபை

நோக்கு

" தெங்குக் கைத்தொழிலின் மொத்த தேசிய உற்பத்தி தொடர்பாக பெருந்தோட்டத் துறையில் உயர் பங்களிப்பை வழங்குகின்ற துறையாகவும் உற்பத்தி சந்தைப்படுத்தல் பன்முகப்படுத்தலில் பூகோள தலைவராதல்"

செயற்பணி

"வீட்டு நுகர்வு மற்றும் கைத்தொழிலுக்கு தேங்காய் மற்றும் தேங்காய் உற்பத்திகளின் விநியோகத்தை உறுதி செய்வதன் மூலம் தேங்காய் கைத்தெழிலை நீண்டகால வணிக விளைதிறன், நிலைபேறான தன்மை மற்றும் தேசிய பொருளாதாரத்திற்கு பங்களிப்பை நோக்கி கொண்டுவர வசதிகள் செய்தல்"

தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையானது (தெ.அ.அ.) 1971 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க தெங்கு அபிவிருத்திச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் நிறுவப்பட்ட நியதிச்சட்ட முன்னுரிமை அமைப்பாகும். இலங்கையில் தெங்குக் கைத்தொழில் அபிவிருத்திக்கான பொறுப்பு வகிக்கின்ற இந்நிறுவனமானது தெங்கு, கித்துல் மற்றும் பனை செய்கை மேம்பாடு மற்றும் அது சார்ந்த கைத்தொழில் பண்டங்களின் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி பல்வகைமை என்பன இராஜாங்க அமைச்சின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன. தெங்கு சார்ந்த உற்பத்தி ஏற்றுமதியாளர்களுக்கு வெளிநாட்டு கொள்வனவாளர் வலையமைப்புடன் தொடர்பினை ஏற்படுத்துவதற்கு வசதியளிக்கின்றது. அனைத்துத் தரப்பினருக்கும் நியாயமான தெங்கு விலையொன்றினைப் பெற்றுக்கொள்வதனை உறுதிப்படுத்தும் பொருட்டு தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையினால் கொப்பரா மற்றும் தூய தேங்காய் எண்ணெய் ஏல விற்பனை நாளாந்தம் நடாத்தப்படுகின்றது.

தெங்கு அபிவிருத்தி அதிகாரசபைப் பிரிவு பெற்றுக் கொண்ட வெற்றிகள்

இலங்கை தரநிர்ணய சபையின் ஊடாக தென்னை உற்பத்தி ISO /IEC 17025 : 2017 நியமத்திற்கு ஏற்ப இரசாயன மற்றும் நுண்ணுயிர் பரிசோதனைகளை மேற்கொள்வதற்காக நடாத்தப்பட்ட ஆரம்ப கணக்காய்வு 2023 யூன் 23 வரை ISO 17025 : 2017 தரநிர்ணய நிலைமை நீடிக்கப்பட்டது.
மேலும், தென்னை உற்பத்தி பரிசோதனைக்கு ISO 17020:2012 சர்வதேச தரச் சான்றிதழ் 2020.03.02 ஆம் திகதி பெற்றுக் கொள்ளப்பட்டது.

தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையின் மூலம் அமுல்படுத்தப்பட்ட கருத்திட்டங்களின் நிதிசார் மற்றும் பௌதீக முன்னேற்றம்

தரக் கட்டுப்பாடு மற்றும் தரப் பாதுகாப்புப் பிரிவு

	செயற்பாடு	அலகு	2021.12.31 வரை பௌதீக முன்னேற்றம்	%
01.	நாளாந்த மாதிரிகளின் பரீசோதனை	மாதிரிகளின் எண்ணிக்கை		
	· நுண்ணுயிர்களைப் பகுப்பாய்வு செய்தல்		7687	118%
	· பௌதீக இரசாயன பரிசோதனைகளை மேற்கொள்ளல்		7749	119%
02.	தும்புச்சோறுடன் இணைந்த உற்பத்தி பரீட்சிப்பு	மாதிரிகளின் எண்ணிக்கை	2153	94%
03.	தெங்குத் துறையின் தேவையின் பிரகாரம் பரிசோதனை சேவைகளை வழங்குதல்	பரிசோதனைகள்	778	104%
04.	ISO 17025 தர நிர்ணயத்தை பேணிவருதல் மற்றும் அடைந்து கொள்ளும் பணிகள்	மேற்கொள்ளப்பட்டுள்ள செயற்பாடுகள்	• ISO 17025 தர நிர்ணயத்தை பேணிவருதல் மற்றும் அடைந்து கொள்ளும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (தேங்காய் பால் சம்பந்தப்பட்ட உற்பத்திகளின் மற்றும் தேங்காய் எண்ணெய்யின் micro biology testing) தேங்காய் எண்ணெய் மற்றும் தேங்காய் நீரின் - chemical testing மற்றும் துருவல் தேங்காய், நீர், தேங்காய் பால் சார்ந்த உற்பத்திகள், தேங்காய் எண்ணெய், தும்பின் நுண்ணுயிரியல் பரிசோதனைக்கான தர நியமங்களை தொடர்ச்சியாக பேணிவருதல் • துருவல் தேங்காய்கான இரசாயன தரநியம நடவடிக்கைகளை ஆரம்பிப்பது மேற்கொள்ளப்பட்டுள்ளது.	100%
	பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்	நிகழ்ச்சித்திட்டங்கள்	9	113%
	தெங்கு கைத்தொழிலுக்கான பருமட்டான ஒழுங்குவிதிகளை தயார் செய்தல்		பருமட்டான ஒழுங்குவிதிகள் தயார் செய்து முடிக்கப்பட்டுள்ளன.	100%
05.	துருவல் தேங்காய் உற்பத்தி செயற்பாட்டின் தரத்தைப் பாதுகாப்பதற்கு பரிசோதனை சேவைகளை வழங்குதல்.	பரிசோதனைகள்	399	200%
	ஆலைகளை மேற்பார்வை செய்தல்			
	துருவல் தேங்காய் உற்பத்தி பரிசோதனை		214	119%
	· நீர் பகுப்பாய்வுப் பரிசோதனைகள்		140	140%

தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையின் மூலம் அமுல்படுத்தப்பட்ட செயற்திட்டங்களின் நிதிசார் மற்றும் பௌதீக முன்னேற்றம்

தரக் கட்டுப்பாடு மற்றும் தரப் பாதுகாப்புப் பிரிவு

	செயற்பாடு	அலகு	2021.12.31 வரை பௌதீக முன்னேற்றம்	%
	B) தேங்காய் எண்ணெய் கைத்தொழில் 1) தேங்காய் எண்ணெய் மாதிரி பரிசோதனை மசகு எண்ணெய் பரிசோதனை 1) மூலப்பொருள் (கொப்பரா, உலர்ந்த தேங்காய்) மாதிரி பரிசோதனை 2) எஞ்சும் பகுதிகளின் மாதிரி பரிசோதனை C) தும்பு/ தும்புச்சோறு கைத்தொழில் 1) தும்பு/ தும்புச்சோறு மாதிரி பரிசோதனை		74 11 44 62 45 49	148% 88% 124% 90% 98%
01.	நாளாந்த துருவல் தேங்காய் மாதிரிகளின் பரிசோதனை	மாதிரிகளின் எண்ணிக்கை		
06.	தயாரிப்பு அபிவிருத்திப் பிரிவின் செயற்பாட்டுக்கு ஏற்ப தெங்கு உற்பத்தி பகுப்பாய்வு	பரிசோதனைகள்		
	அ. தேங்காய் எண்ணை கைத்தொழில் தொடர்பான பரிசோதனை வசதிகள்			
	• தூய தேங்காய் எண்ணை		57	104%
	• தேங்காய் எண்ணை		173	157%
	ஆ. தும்புக் கைத்தொழில் தொடர்பான பரிசோதனை வசதிகள்			
	· தும்புச் சோறு உபஉற்பத்திகள்		187	72%
	· துப்புடன் இணைந்த மாதிரிகள்		134	67%
	இ. தேங்காய் பால் கைத்தொழில் தொடர்பான பரிசோதனை வசதிகள்			
	·தேங்காய் பால் மற்றும் பவுடராக்கப்பட்ட தேங்காய் பால்		150	107%
	· கொளுப்பு ஓரளவு நீக்கப்பட்ட துருவல் தேங்காய்		99	50%
	· தேங்காய் நீர் பரீட்சிப்பு		0	0
	· தேங்காய் சிரட்டைநிலக்கரி		13	50%

தயாரிப்பு அபிவிருத்திப் பிரிவு

செயற்பாடுகள்	2021.12.31 வரை பௌதீக முன்னேற்றம்
ஆலை அபிவிருத்தி நிதியத்திலிருந்து துருவல் தேங்காய் உற்பத்தி நிறுவன அபிவிருத்திக்கு நிதி வசதிகளை வழங்குதல்.	2021 ஆம் ஆண்டுக்கு துருவல் தேங்காய் உற்பத்தி 25,225 மெ.தொ. தொடர்பாக ரூ. 6.0 மில்லியன் தொகையை ஒவ்வொரு தேங்காய் ஆலை அபிவிருத்திக் கணக்குகளுக்கு செலவு வைத்தல்.
நிதி நிவாரணம் தொடர்பாக வங்கிக் கடன் வசதிகளை வழங்குதல்.	2021 ஆம் ஆண்டுக்கு கைத்தொழிலாளர்கள் 54 பேருக்கு கடன் நிதி ஏற்பாடு வழங்கி, அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களுக்கு ரூ.மி. 1.15 ஆன தொகை செலவு செய்யப்பட்டுள்ளது.
உயர் தரம் கொண்ட தேங்காய் எண்ணையைசந்தையை அறிமுகம் செய்யும் செயற்பாட்டை தாபித்தல்	உயர் தரம்மிக்க பொதியுடன் கூடிய தேங்காய் எண்ணையை உள்நாட்டு சந்தைக்கு அறிமுகம் செய்வதன் கீழ் தேங்காய் எண்ணெய் மாதிரிகள் 172 பரிசோதிக்கப்பட்டன. தேங்காய் எண்ணெய் கைத்தொழிலில் உலர்த்தும் முறையை அபிவிருத்தி செய்வதற்கு 34 நிறுவனங்களுக்கு உலர்த்தும் இயந்திரங்களைப் பெற்றுக் கொள்வதற்காக முதலீட்டு உதவிகள் வழங்கப்பட்டதுடன், இலட்சியை வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நிறுவனங்கள் பரிசோதிக்கப்பட்டன. இதற்காக ரூ.மி. 20.5 செலவிடப்பட்டது. 2021 ஆண்டு 07 நிறுவனங்களுக்கு இலட்சினைகள் வழங்கப்பட்டன.
(அ) தும்பு கைத்தொழிலாளர்கள் தொடர்பாக GMP சான்றிதழை பெற்றுக் கொள்வதற்கு நிதி உதவிகளை வழங்குதல். (ஆ) தும்பு உற்பத்தி நிறுவனம் தொடர்பாக தும்பு உலரச் செய்யும் மா தயார் செய்து கொள்வதற்கு நிதி உதவி வழங்குதல்.	(அ) 2021 ஆம் ஆண்டில் தும்புக் கைத்தொழிலாளர்கள் 02 பேருக்கு GMP சான்றிதழ் பெற்றுக் கொள்வதற்கு நிதி நிவாரணம் வழங்குவதற்கு மற்றும் விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் 04 நடாத்த ரூபா 0.3 மில்லியன் தொகை செலவிடப்பட்டது. (ஆ) தும்பு கைத்தொழிலை அபிவிருத்தி செய்வதற்காக தும்பு உலர்த்துவதுவதற்கு உலர்த்தும் மா 43 வழங்கப்பட்டது. இதற்கு ரூ.மி. 17.23 செலவானது.
அ) தெங்கு சார்ந்த உற்பத்தி கைத்தொழிலின் தரத்தை உயர்த்துவதற்காக வள பங்களிப்பு வழங்கும் நோக்கில் தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையின் அலுவலர்களுக்கு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல். (ஆ) தயாரிப்பு அபிவிருத்திப் பிரிவிற்கு ISO 17020:2012 தரநிர்ண சான்றிதழ் பெற்றுக் கொள்ளல் தொடர்பான கணக்காய்வினை மேற்கொள்ளல்.	(அ) தயாரிப்பு அபிவிருத்திப் பிரிவின் அலுவலர்கள் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்திற்கு ஈடுபடுத்துவதற்கு ரூ. 2.31 மில்லியன் செலவு செய்யப்பட்டுள்ளது. (ஆ) துருவல் தேங்காய் நிறுவன பரிசோதனை தொடர்பாக ISO 17020:2012 தரநிர்ணய சான்றிதழை பெற்றுக் கொள்ளல். சான்றிதழைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் நடைபெற்ற முதலாவது கணக்காய்வு செயற்பாடுகள் செப்தெம்பர் மாதம் நடாத்தப்பட்டது.
நாளாந்த உற்பத்தி மாதிரி பகுப்பாய்வுக்கு ஈடுபடல் மற்றும் பகுப்பாய்வு அறிக்கை அனுப்புதல் / துருவல் தேங்காய் உற்பத்தி ஏற்றுமதியாளர்களினால் மேற்கொள்ளப்பட்ட கோரிக்கையின் படி, தரவுகள் மற்றும் தகவல்களை பரிசோதனை செய்ததன் பின்னர் உரிய சான்றிதழை வழங்குவதை பதிவு செய்தல். நிறுவனங்களை பரிசோதனை செய்தல்.	நாளாந்த துருவல் மாதிரிகள் பெறுதல் - 7749 பௌதீக தரச் சான்றிதழ், செல்மோனெல்லா அற்ற சான்றிதழ் -, எப்லடொக்சீன் அற்ற சான்றிதழ், சல்பர் டயொக்சைட் அற்ற சான்றிதழ் மற்றும் ஏனைய ஏற்றுமதி சான்றிதழ்கள் 1170 ஐ பதிவு செய்தல். நிறுவன பரீசோதனைகள் சுமார் 10,000 ஐ மேற்கொள்ளல்.
அறிவுறுத்தும் / பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை ஏற்பாடு செய்தல் மற்றும் உபகரணங்கள் வழங்குதல்..	19 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன. செலவிடப்பட்ட தொகை ரூபா மில்லின் 2.14
தேங்காய் சிரட்டை கரி உற்பத்தி முறைமையை அபிவிருத்தி செய்வதற்கான முதலீட்டு ஒத்துழைப்பு வழங்குதல்.	தேங்காய் சிரட்டை எரிப்பதற்குரிய அடுப்பு வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட 12 நிறுவனங்களுக்கு முதலீட்டு உதவி வழங்கப்பட்டது. ரூ.மி. 1.33
முறையற்றவாறு கைத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கான உற்பத்தி அலகை தாபித்தல்	2021 ஆம் ஆண்டின் இறுதியளவில் உற்பத்தி அலகுகள் 08 ஐ தாபிக்க முடிந்தது. அதற்காக ரூ.மி. 5.48 ஆன தொகை செலவிடப்பட்டது.

சந்தைப்படுத்தல் அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு

செயற்பாடு	அலகு	2021.12.31 வரை முன்னேற்றம்
தெங்கு மற்றும் தெங்கு தொடர்பான ஏற்றுமதியாளர்களை பதிவு செய்தல்.	ஏற்றுமதியாளர்கள்	704
தென்னந் தோட்ட பதிவு	தென்னந் தோட்டங்கள்	99
ஏல விற்பனைக்கான தரகர்களை பதிவு செய்தல்	தரகர்கள்	17
தென்னை / கொப்பரா கொள்ளவனவாளர்களின் பதிவு	கொள்வனவாளர்கள்	31
தற்காலிக ஏற்றுமதி அனுமதிப்பத்தரம் வழங்குவதற்கு செயற்படல்	அனுமதிப்பத்திரம்	3379 29998
நாளாந்த அறிக்கை வெளியிடல்	அறிக்கை	233
வாரந்த அறிக்கை வெளியிடல்	அறிக்கை	48
மாதாந்த அறிக்கை வெளியிடல்	அறிக்கை	12
வருடாந்த அறிக்கை வெளியிடல்	அறிக்கை	1
கொழும்பு தென்னை ஏலவிற்பனையை நடாத்துதல்	ஏலவிற்பனை	33
அறிவித்தல் பலகைகளை தாபித்தல்	அறிவித்தல் பலகைகள்	3
உள்நாட்டு கண்காட்சிகளில் பங்கேற்றல்	வர்த்தக கண்காட்சிகள்	3
தென்னை விரயத்தை குறைக்கும் நோக்கத்துடன் தேங்காய் பால் பயன்பாட்டை மேம்படுத்தல், தென்னஞ் சிரட்டை மற்றும் மட்டைகளை சேகரிப்பது பற்றி அறிவுறுத்தல்	வானொலி நிகழ்ச்சிகள் /தடவைகள்	1890
தென்னை விரயத்தை குறைக்கும் நோக்கத்துடன் தேங்காய் பால் பயன்பாட்டை மேம்படுத்தல், தென்னஞ் சிரட்டை மற்றும் மட்டைகளை சேகரிப்பது பற்றி அறிவுறுத்தல்	சிங்களம் மற்றும் தமிழ் பத்திரிகைகளில் அறிவித்தல்களை வெளியிடல்	18
எதிர்காலத்தில் தேங்காய் சார்ந்த உற்பத்திகள் தொடர்பில் மக்களை அறிவுறுத்தத் தேவையான தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், விவரண நிகழ்ச்சிகளை தயார் செய்தல்	நிகழ்ச்சித்திட்டங்கள்	31
சமூக ஊடகங்கள் மூலம் தெங்குக் கைத்தொழிலின் இலங்கை பொருளாதாரத்திற்குள்ள முக்கத்தியத்துவம் மற்றும் தெங்கு சார்ந்த உற்பத்திகளின் முக்கியத்துவம் பற்றி மக்களை அறிவுறுத்தல்	அறிவித்தல்	25
சர்வதேச தெங்கு தினத்தை முன்னிட்டு Zoom தொழில்நுட்பம் மூலம் அறிவுறுத்தும் நிகழ்ச்சித்திட்டமொன்று நடாத்தப்பட்டது.	மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டங்கள்	1
வெளிநாட்டு ஏற்றுமதி மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்களுடன் இணைந்துகொள்ளல் - யப்பான் இலங்கை தூதரகத்துடன் இணைந்து தேங்காய் சார்ந்த உற்பத்திகளை காட்சிப்படுத்தல்	வெளிநாட்டு கண்காட்சிகள்	1
சர்வதேச சந்தைப்படுத்தல் மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்களுக்கு தேவையான மேம்படுத்தல் ஆவணத்தை வடிவமைத்தல்	விற்பனை மேம்பாட்டு கருவிகள்	வரைவு தயார் செய்யப்பட்டுள்ளது.
இணைய தளத்தின் ஊடாக தெங்கு தொடர்பான உற்பத்தி ஏற்றுமதி / இறக்குமதி மற்றும் அத்தியவசிய தகவல்களை வழங்குதல்.	இணைய தளத்தை இற்றைப்படுத்தல்	தேவையான சந்தர்ப்பங்களில் இற்றைப்படுத்தப்பட்டுள்ளது. ஆகக் குறைந்தது இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை
கிடைக்கின்ற வர்த்தக விசாரணைகளின் ஊடாக வெளிநாட்டு கொள்ளவனவாளர்கள் மற்றும் உள்நாட்டு உற்பத்தியாளர்களுக்கிடையில் தொடர்புகளை ஏற்படுத்தல்	வர்த்தக விசாரணைகள்	73
தேங்காய் / கொப்பரா ஏலவிற்பனை தொடர்பாக ஏற்படுகின்ற பிணக்குகளை தீர்த்து வைத்தல்.	தீர்வு வழங்கல் அமர்வுகள்	8
தெங்கு உற்பத்திகளை ஏற்றுமதி செய்யும் போது ஏற்படுகின்ற பிணக்குகளை தீர்த்து வைததல்	தீர்வு வழங்கல் அமர்வுகள்	6
சந்தை ஆராய்ச்சி / சாத்தியக்கூறு கற்கைகளை நடாத்தல்	சந்தை ஆராய்ச்சி / சாத்தியக்கூறு கற்கை	தகவல்கள் சேகரிக்கப்பட்டன.






2021 ஆண்டு அக்டோபர் மாதம் 6-8 வரை யப்பானில் நடைபெற்ற **Health Ingredients – Japan** கண்காட்சியில் யப்பானிலுள்ள இலங்கை தூதரகத்தின் உதவியுடன் தேங்காய் சார்ந்த உற்பத்திகள் காட்சிப்படுத்தப்பட்டன.







தேங்காய் கைத்தொழிலின் முன்னேற்றம், எதிர்கால நோக்கு பற்றி மக்களை அறிவுறுத்துவதற்காக வானொலி நேர்முகக் கலந்தரையாடல்கள் தென்னை தினத்தை முன்னிட்டு நடாத்தப்பட்டது.



2021 சர்வதேச தென்னை தினத்தை முன்னிட்டு **Zoom** தொழில்நுட்பம் மூலம் நடாத்தப்பட்ட அறிவுறுத்தல் நிகழ்ச்சித்திட்டம்





தேங்காய் தும்பு நார் உற்பத்தி நிறுவனங்களின் உட்கட்டமைப்பு வசதிகளுக்கான முதலீட்டு உதவி வழங்கப்பட்டமை.





2021 ஆண்டில் நடாத்தப்பட்ட பயிற்சியளிக்கும் நிகழ்ச்சித்திட்டங்கள்



2021 ஆண்டில் நடாத்தப்பட்ட
விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள்



2021 ஆண்டில் தாபிக்கப்பட்ட உற்பத்தி அலகுகள்

தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை- 2021.12.31 திகதியில் மொத்த நிதிசார் முன்னேற்றம்

விடயம்	அங்கிகரித்த நிதியேற்பாடு (ரூ.மி) 2021.12.31	2020.12.31 வரை நிதிசார் இலக்கு	செலவினம்			
			தொகை (ரூ.மி)	அனுமதித்த தொகையின் %	இலக்கு %	கட்டுநிதி கிடைத்தது %
மூலதனம்	110	7	7	6.3%	100%	100%
மீண்டெழும்	190	134.5	7	71%	100%	100%

2.1.4.1.3 தெங்கு ஆராய்ச்சி நிறுவகம்

நோக்கு

"தெங்குடன் இணைந்த ஆராய்சிகளை மேற்கொள்ளல், தொழில்நுட்ப அபிவிருத்தி மற்றும் தொழில்நுட்ப பரிமாற்றம் தொடர்பில் பிராந்தியத்தில் உள்ள சிறந்த நிறுவனமாதல்"

செயற்பணி

"ஆராய்சிகளின் சிறப்பின் ஊடாக தெங்குடன் தொடர்புடைய உற்பத்திகள் மற்றும் இலாபத்தன்மையும் அதிகரிப்பதற்குத் தேவையான அறிவு மற்றும் தொழில்நுட்பங்களை உருவாக்குதல்"

தெங்கு ஆராய்ச்சி நிறுவகமானது, என்பது 1929 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க தெங்கு ஆராய்ச்சி கட்டளைச் சட்டத்தின் கீழ் தெங்கு ஆராய்ச்சி திட்டமாக ஆரம்பிக்கப்பட்ட தேசிய நிறுவனமாகும். இந்த திட்ட முறைமை, அதன் தலைமையகம் லுனுவில (வடமேல் மாகாணத்தின்) பந்திருப்புவ தோட்டத்தில் தாபிக்கப்பட்டு ஆராய்சி செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தெங்கு பயிரச் செய்கை பற்றிய தொழில்நுட்ப தகவல்களுடன் தெங்கு பயிர் செய்கையாளர்களுக்கு உதவுவதற்காக இழைய விஞ்ஞானம், இரசாயனவியல் மற்றும் மண் இரசாயன விஞ்ஞானம் போன்ற தொழில்நுட்ப பிரிவுகள் மூன்றுடன் 1950 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க தெங்கு ஆராய்சி சட்டத்தை வலுப்படுத்தியதன் பின்னர் அதனை இலங்கையில் தெங்கு ஆராய்ச்சி நிறுவனம் ஆக பெயரிடப்பட்டுள்ளது. அது ஆரம்பிக்கப்பட்ட தினம் முதல் இலங்கையில் தெங்கு பற்றிய சகல விஞ்ஞான ரீதியான ஆராய்சிகளை மையப்படுத்தியதுடன் தெங்கு ஆராய்சி தொடர்பாக தேசிய மற்றும் சர்வதேச புகழினையும் பெற்றுள்ளது. 1971 ஆம் ஆண்டு பிரகடணப்படுத்திய 46 ஆம் இலக்க தெங்கு அபிவிருத்தி சட்டத்தின் கீழ், தெங்கு ஆராய்சி நிறுவனத்தின் முகாமைத்துவச் சபையாக பணியாற்றுவதற்காக தெங்கு ஆராய்ச்சி சபை 1972 இல் தாபிக்கப்பட்டது.

தெங்கு ஆராய்ச்சி நிறுவகம் அதன் ஆராய்ச்சி அபிவிருத்திக்கு உதவி புரிவதற்காக நவீன பகுப்பாய்வு வசதிகளுடன் சிறந்த, சுறுசுறுப்புடன் பணியாற்றுகின்ற நவீன விஞ்ஞானிகள், தகைமை பெற்ற தொழில்நுட்ப உதவியணியொன்று மற்றும் திரவத்தன்மையுடன் கூடிய நிறுவனமாகும். இந்த நிறுவனம் வேறு தேசிய நிறுவனம் மற்றும் தனியார் பிரிவின் அமைப்புக்களுடன் ஒத்துழைப்புடன் ஆராய்சிகளை மேம்பாடு செய்யும். நிறுவனத்திற்கு ஆராய்சி பிரிவுகள் ஒன்பது மற்றும் சேவை பிரிவுகள் ஐந்தும் காணப்படுகின்றன.

2021 ஆம் ஆண்டு தெங்கு ஆராய்ச்சி நிறுவகத்தினால் அமுல்படுத்தப்பட்ட செயற்திட்டங்களின் நிதிசார் மற்றும் பௌதீக முன்னேற்றம்

புதிய தென்னை வகையை அறிமுகம் செய்தல் மற்றும் விதை தேங்காய் உற்பத்தி

- ✓ கூடுதல் தேங்காய் விளைச்சாலை பெற்றுத்தருகின்ற மற்றும் விரைவில் பூக்கும் புதிய கலப்பின தேங்காய் வகை CRISL 2020 (இலங்கை உயரம் x மலாயா சிவப்பு குந்திரா) அறிமுகம் செய்யப்பட்டதுனட், 2021 ஆண்டு 753 செடிகள் பயிர் செய்கையாளர்களுக்கு வழங்கப்பட்டன.
- ✓ கட்டுப்படுத்தப்பட்ட இனப்பெருக்க மற்றும் கைமூலமான இனப்பெருக்கத்தைப் பயன்படுத்தி மரபணு ரீதியாக உயர் வகை கலப்பின் விதை தேங்காய் CRIC 60 187,597 உம், CRIC 65 28,145 உம் CRISL 98 10,888 உம், கப்சுவய 3,064 உம், கப்செத்த 1,908 உம் மற்றும் கப்ருவன 3,978 உம் ஆக விதை பூங்காங்கள் மூன்று உற்பத்தி செய்யப்பட்டன.
- ✓ கப்ருவன கலப்பின் விதை உற்பத்திக்கு சிலாபம் பெருந்தோட்டக் கம்பனியுடன் இணைந்து கினியம விதை பூங்காவில் குந்திரா மற்றும் சென்ராமன் பயிர் செய்யப்பட்டன.
- ✓ கப்சுவய கலப்பின் தேங்காய் வகையை உற்பத்தி செய்வதற்காக குருநாகல் பெருந்தோட்டக் கம்பனியுடன் இணைந்து புதிய விதை பூங்காவை ஆரம்பிப்பதற்கான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. புதிய விதை பூங்காவை சுற்றி வேலி நிர்மாணிக்க நீர்ப்பாசன கட்டமைப்பு தாபிக்கப்பட்டது. 650 கன்றுகளை நாட்டுவதற்கான ஆரம்ப நிலத்தை ஆயத்தப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. மழை காரணமாக கன்றுகளை நாட்ட முடியவில்லை.

அதிக விளைச்சல் தரக்கூடிய வேகமாக பூக்கும் தேங்காய் வகைகளை பயிரிடுவோருக்கு அறிமுகம் செய்தல்.



Tall x Brazilian Green dwarf
பயிர் வகை

காலநிலை மாற்றங்களுக்கு ஒத்திசைவாக செயற்படுதல்/ புதிய விஞ்ஞான

- ✓ நகர கழிவுகளிலிருந்து தயார் செய்யப்படும் சேதனப் பசளைகளில் உலோகப் பதார்த்தங்கள் குறைவாக இருப்பதனால் சேதனப் பசளையாக தேங்காய்க்கு பயன்படுத்துவது உகந்ததல்ல என்பது ஆராயப்பட்டது. எவ்வாறாயினும், இதனை தேங்காய் பயிர் செய்யும் மண்ணை மேம்படுத்தும் சேதனப் பசளை மூலமொன்றாக சிபாரிசு செய்ய முடியும்.
- ✓ தேங்காய் பயிர் செய்கை மேற்கொள்ளும் மண்ணின் மண் போசாக்கு பயன்பாட்டின் வினைத்திறனை மேம்படுத்தவும், ஈரத்தன்மையை பேணிவருவதை அதிகரிப்பதற்கும் நுண் உயிர்களின் செயற்பாட்டை மேம்படுத்தவும் மண் சந்தர்ப்பப் பொருளாக சேதன செடி (Bio char) அம்சங்களை பயன்படுத்தவும் உள்ள போக்கு பற்றிய கற்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சேதன செடி அம்சங்களை உருவாக்கப் பயன்படுத்தும் அலகு தற்போது தெங்கு ஆராய்ச்சி நிறுவகத்தின் உப ஆராய்ச்சி நிலையமொன்றில் தாபிக்கப்பட்டுள்ளது.
- ✓ அரசின் புதிய உரக் கொள்கைக்கு அமைய தென்னை பயிர்செய்கைக்கு பல்வேறு சேதனப் பசளை மூலங்களை உட்புகுத்தி சேதனப் பசளை பக்கேஜ் அறிமுகம் செய்யப்பட்டது. இது தெங்கு ஆராய்ச்சி நிறுவகத்தினால் இதற்கு முன்னர் அறிமுகம் செய்யப்பட்ட சோதன, சேதனமல்லாத மற்றும் சோதன+சேதனமல்லா உர சிபாரிசுகளுக்கு மேலதிகமான சிபாரிசாகும்.

சேதன அம்சங்களை பயன்படுத்துவது பற்றிய (உயிரியல் நிலக்கரி) கற்கை

தெங்கு ஆராய்ச்சி நிறுவகத்திற்கு உரித்தான ரத்மலாகார உப நிலையத்தில் 5 ஏக்கர் காணியில் தென்னங் கன்று பயிர் செய்கைக்கு மண் ஈரத்தன்மையை பாதுகாக்கும் உபாயமுறையாக சேதன அம்சங்களை பயன்படுத்துவது பற்றிய (உயிரியல் நிலக்கரி) கற்கைக்கு வெளிக்கள ஆய்வுகூடம் ஆரம்பிக்கப்பட்டமை.



உயிரியல் நிலக்கரி பயன்பாடு

பூச்சுக்கள் மற்றும் நோய்களை ஒழித்தல்

- ✓ *சிவப்பு வண்டு அச்சுறுத்தலைக் கட்டுப்படுத்த 595 பெரமோன் குழாய்கள் மற்றும் 50 ஜெலிசார் பெரமோன் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது.*
- ✓ வெலிகம தேங்காய் ஓலை சுருட்டும் நோயினால் சேதமடைந்த பிரதேசங்களிலிருந்து மேலும் பரவுவதை தவிர்ப்பதற்காக பாதுகாப்பான வலயமொன்று பேணிவரப்பட்டது. இந்த பாதுகாப்பு வலயத்தில் 9839 காணிகள் பரீட்சிக்கப்பட்டதுடன், இங்கு நோய் தொற்றுக்கு உள்ளான 694 மரங்கள் இனங் காணப்பட்டதுடன், இதில் 255 மரங்கள் அப்புறப்படுத்தப்பட்டுள்ளன.
- ✓ தென்னை புழு பரவுதல் (புத்தளம் மற்றும் குருநாகல் மாவட்டம்) வெட்டுக்கிளி பரவுதல் (குருநாகல் மற்றும் கேகாலை மாவட்டம்) மற்றும் வெண்நிற பூச்சுக்களின் பாதிப்பு (கேகாலை, கண்டி, கம்பஹா, குருநாகல் மாவட்டங்கள்) என்பவற்றை கட்டுப்படுத்த தென்னை பயிர் செய்கை சபையுடன் இணைந்து நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன. தென்னை புழு பரவுவது உயிரியல் முறைகள் ஊடாக முழுமையாக கட்டுப்படுத்தப்பட்டது.

தேங்காய் சார்ந்த உற்பத்திகளை உற்பத்தி செய்யும் தொழில்நுட்பத்தை பிரபல்யப்படுத்தல்

- ✓ தேங்காய் எண்ணெய் உற்பத்தி மேம்படுத்தப்பட்டது.
- ✓ பெறுமதிசேர்க்கப்பட்ட தேங்காய் மூலமான உற்பத்தியாக தேங்காய் பட்டர் ஸ்ப்ரெட் (Coconut butter spread) உற்பத்தி செய்யப்பட்டது.
- ✓ தேங்காய் மா மற்றும் கோதுமை மா உள்ளடங்கும் உணவுகளை ஆரோக்கியமான உணவுகளாக மேம்படுதப்பட்டமை.
- ✓ தேங்காய் புரம் மூலம் உயிரியல்சார் பொதி உற்பத்தி செய்யப்பட்டது.
- ✓ மரபுரீதியாக சேகரிக்கப்பட்ட தென்னை கருநீர் மூலம் தயார் செய்யப்பட்ட தென்னங் கட்டிகளின் கிலைசமிக் அளவு நிர்ணயிக்கப்பட்டது.
- ✓ கொழுப்பு நீக்கப்பட்ட தேங்காய் மா சேர்க்கப்பட்ட உணவுகள் (ரொட்டி, பிட்டு) மேம்படுத்தப்பட்டன.
- ✓ தேங்காய் மாவில் பினொலிக் மற்றும் பிலெவனொயிட் கலவை நிர்ணயிக்கப்பட்டது.
- ✓ சிறிய மற்றும் நடுத்தர எல்சைமர் நோய்க்கு சிகிச்சையளிக்க புதிய தேங்காய் எண்ணெயின் தாக்கம் பரிசீலிக்கப்பட்டது.
- ✓ நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்ட மற்றும் நீரிழிவு நோய் இல்லாத எலிகளுக்கு வெள்ளை தேங்காய் எண்ணெய் அல்லது சோயா எண்ணெயை உண்பதற்கு கொடுப்பதன் மூலம் ஏற்படும் குளுகோஸ் tolerance தாக்கத்தை நிர்ணயிக்க கற்கையொன்று மேற்கொள்ளப்பட்டது.
- ✓ இறப்பர் பால் மற்றும் தேங்காய் நார் கலந்த சுசன் மற்றும் மெத்தை உற்பத்தி செய்யும் ஆற்றல் பற்றி ஆராய்வதற்கான கற்கை மேற்கொள்ளப்பட்டது.
- ✓ தேங்காய் மட்டையை ஊரவைக்கும் தொழில்நுட்பத்தை மேம்படுத்தும் கற்கை மேற்கொள்ளப்பட்டது.
- ✓ இறப்பர் பாதணி உற்பத்திக்கு தேங்காய் நாரை மூலப்பொருளாக பயன்படுத்துவது பற்றிய கற்கை மேற்கொள்ளப்பட்டது..



தேங்காய் பட்டர்

தொழில்நுட்பத்தை பரிமாற்றிக் கொள்ளும் செயற்பாடுகள்

- ✓ புதிய ஆராய்ச்சித் துறைகளை இனங்காணல், தெங்கு ஆராய்ச்சி நிறுவகத்தின் சிபாரிசுகள் பற்றி பயிர்செய்கையாளர்களின் கருத்துக்களை அறிந்துகொள்ளல் மற்றும் தென்னை அபிவிருத்தி அலுவலர்களை பயிற்றுவித்தல் மற்றும் தொழில்நுட்ப அறிவை இற்றைப்படுத்தும் நோக்கத்துட்ன, இருவழி தொடர்பாடல் முறையாக தெங்கு ஆராய்ச்சி நிறுவகத்தின் ஆராய்ச்சி அலுவலர்கள் மற்றும் தென்னை அபிவிருத்தி அலுவலர்களுக்கு இடையே ஆராய்ச்சி விஸ்தரித்தல் கலந்துரையாடல்கள் இரண்டு (Research extension dialogues) நடாத்தப்பட்டன.
- ✓ பயிர் செய்கையாளர்கள் மற்றும் மாணவர்களுக்கு அறிவை பகிர்வதற்காக தொழில்நுட்ப பூங்கா அபிவிருத்தி செய்யப்பட்டதுடன், பயிரிடுவோருக்கு அறிவை வழங்குவதற்கான நிலையம் (crop clinic) இங்கு பேணிவரப்பட்டது.
- ✓ தொலைக்காட்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் வானொலி நிகழ்ச்சித்திட்டங்கிலும் வளவாளர்கள் பங்கேற்றார்கள்.
- ✓ தெங்குப் பயிர்செய்கை முகாமைத்துவம் பற்றிய 3 ஆவது சர்வதேச சான்றிதழ் பாடநெறி வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டது.
- ✓ தென்னை பயிர்செய்கை பற்றிய பல்வேறு தலைப்புக்களின்ஊடாக 81250 துண்டுப் பிரசுரங்கள் பத்திரிகைகளுடன் விநியோகிக்கப்பட்டன.
- ✓ 'சுபாரதீ' நிகழ்ச்சிகள் 4 இலும், 'கொவிதெனட்ட பெயக்' நிகழ்ச்சியொன்றிலும் பங்குபற்றியமை.
- ✓ தென்னை பயிர்செய்கை பற்றிய வானொலி விளம்பரங்கள் 620 மற்றும் தொலைக்காட்சி விளம்பரம் ஒன்று பிரச்சாரம் செய்யப்பட்டது.
- ✓ சௌபாக்யா கப்ருக்க நிகழ்ச்சிகள் 2 சுயாதீன தொலைக்காட்சி மற்றும் தேசிய தொலைக்காட்சியில் பிரச்சாரம் செய்யப்பட்டன.

கொள்கை சிபாரிசுகளை தயார் செய்யத் தேவையான அறிக்கைகளை தயாரித்தல்

- ✓ தேங்காய் எண்ணெய் மற்றும் பாம் எண்ணைய்களின் விசேட பண்ட வரியை மாற்றம் செய்ய சிபாரிசுகள் சமர்ப்பிக்கப்பட்டன.
- ✓ தேங்காய் கைத்தொழிலுக்கான உரத்தின் தேவை பற்றிய அறிக்கை கொள்கை வகுப்பாளர்களிடம் சமர்ப்பிக்கப்பட்டது.
- ✓ பெருந்தோட்ட அமைச்சு, சனத்தொகை, புள்ளிவிபரவியல் திணைக்களம், திறைசேரி, மத்திய வங்கி மற்றும் பயிர்செய்கையாளர்களுக்கு தென்னை சார்ந்த புள்ளிவிபரங்கள் வழங்கப்பட்டன.
- ✓ பல்வேறு அமைச்சுக்கள் மற்றும் பயிர்செய்கையாளர்களின் கோரிக்கைகளின் பேரில் தென்னை பற்றிய விலை மதிப்பு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டன.

தெங்கு விளைச்சலை எதிர்வுகூறல் மற்றும் தேங்காய் உற்பத்தியை மதிப்பிடு செய்தல்

- ✓ 2021 ஆம் ஆண்டுக்கு எதிர்வுகூறப்பட்ட தேங்காய் விளைச்சல் காய்களின் எண்ணிக்கை மில்லியன் 3353.2 ± 29.3 ஆகும். 8 மாதங்களுக்கு முன்னர் எதிர்வுறுப்பட்டதுடன், சகல தேங்காய் பயிரிடும் மாவட்டங்களிலும் தெரிவு செய்யப்பட்ட மாதிரிகளிலிருந்து இரண்டு மாத அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்ட தரவுகளின் மூலம் உண்மையான தேங்காய் உற்பத்தி மதிப்பீடு செய்யப்படுகின்றது.
- ✓ 2021 ஆம் ஆண்டு 3389 மில். காய்கள் உற்பத்தி செய்யப்பட்டதுடன், இது தேசிய தேங்காய் உற்பத்தி எதிர்வுகூறலின் 1%ஆன வித்தியாசமாகும். 2022 முதல் 6 மாதங்களுக்கான எதிர்வுகூறப்பட்ட தேங்காய் விளைச்சல் 510.6 மில். காய் ஆகும். (சனவரி – பெப்ருவரி) மற்றும் 603 (மே- யூன்) ஆகும். இதற்கமைய 2022 முதல் ஆறு மாதங்களில் 1677 மில். காய்கள் எதிர்பார்க்கப்படுகின்றன..

தெங்குக் கைத்தொழிலுக்காக வழங்கப்படும் சேவைகள்

- ✓ மைட்டா இனப்பெருக்க ஆய்வுகூடத்தை பேணிவருதல் மற்றும் மைட்டா உள்ள பொதிகள் 30398ஐ உற்பத்தி செய்தல்.
- ✓ தேங்காய் புழுக்களை கட்டுப்படுத்துவதற்காக 634,790 எதிர்ப்பு புழுக்களை உற்பத்தி செய்தல்
- ✓ சிவப்பு பூச்சுக்களை கட்டுப்படுத்துவதற்காக சிவப்பு பூச்சு ஜெல் பெரமோன் பொதிகள் 595 உற்பத்தி செய்து வழங்குதல்.
- ✓ சிவப்பு பூச்சு பாதிப்பை இனங்காணத் தேவையான உபகரணங்கள் 50 ஐ உற்பத்தி செய்து விநியோகித்தல்.
- ✓ செவ்விளனி ஏற்றுமதி செய்ய நீண்டகாலத்திற்கு வைத்திருப்பதற்காக பின்பற்ற வேண்டிய நடைமுறை பற்றிய தொழில்நுட்ப அறிவை புதிய தொழில்முயற்சியாளர்கள் 40 பேருக்கு பெற்றுக் கொடுத்தல்.
- ✓ பயிர் செய்வோர் 16 பேருக்கு மண் பொருத்தப்பாடு பற்றிய சிபாரிசுகளை வழங்குதல்.
- ✓ வழங்கப்பட்ட பகுப்பாய்வு அறிக்கைகள் : தும்பு அடிப்படையிலான உற்பத்திகளுக்கு ஏற்றுமதிச் சான்றிதழ்கள் 241, சேதனமற்ற பசளைகளின் தரம் பற்றிய 15 அறிக்கைகள், சேதன பசளைகளின் தரம் பற்றிய 15 அறிக்கைகள் மற்றும் தென்னை பயிர் செய்கையாளர்களுக்கான உரம் பற்றிய சிபாரிசுகளுக்கான 19 அறிக்கைகள் வழங்கப்பட்டமை.
- ✓ வழங்கப்பட்ட தரச் சான்றிதழ் அறிக்கைகள் : புதிய தேங்காய் எண்ணெய் பற்றிய 29 அறிக்கைகள், வெள்ளை தேங்காண் எண்ணெய் அறிக்கைகள் 29, துருவல் தேங்காய் பற்றிய அறிக்கைகள் 17, புண்ணாக்கு பற்றிய 5 அறிக்கைகள், துருவப்பட்ட தேங்காய் பற்றிய 5 அறிக்கைகள் வைன் அறிக்கை 1, வினாக்கிரி அறிக்கை 2 தென்னங்கள்ளு பற்றிய அறிக்கைகள் 493 வழங்கப்பட்டமை.





“சிறந்த வியாபார வசதிகளை வழங்குவதற்கான” மையம்

தேங்காய் தொடர்பான தயாரிப்புகளில் ஆர்வமுள்ள தொழில்முனைவோருக்காக “உகந்த வணிக வசதிகளுக்கான” மையம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. சர்வதேச தென்னை பயிர்ச் செய்கை தினத்தை முன்னிட்டு இந்த மையத்தை 2020 செப்டம்பர் 02 ஆம் திகதி கௌரவ பெருந்தோட்ட அமைச்சர் திறந்து வைத்தார். இதுவரை இரண்டு செயலமர்வுகள் இங்கு நடத்தப்பட்டுள்ளன.



சிறந்த தொழில் வசதிகள் நிலையம்

தேங்காய் பயிரச் செய்கையை மேம்படுத்துவதற்காக செயல்படுத்தப்பட்ட பிற சிறப்புத் நிகழ்ச்சித்திட்டங்கள் / செயற்திட்டங்கள் / செயற்பாடுகள் - தெங்கு ஆராய்ச்சி நிறுவகம்

தேங்காய் கம்பளிப்பூச்சியின் பரவலைக் கட்டுப்படுத்தல்.

புத்தளம் மற்றும் குருநாகல் மாவட்டங்களில் இருந்து கடுமையான தேங்காய் கம்பளிப்பூச்சி பரவல் அறிக்கையிடப்பட்டதுடன், ஹம்பாந்தோட்டை, திருகோணமலை மற்றும் அம்பாறை மாவட்டங்களில் இருந்து சிறிய சேதம் ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தேங்காய் ஆராய்ச்சி நிறுவனம் கடுமையான பரவலைக் கட்டுப்படுத்த தண்டுகளை துளைத்து மோனோக்ரோட்டோபாஸைப் பயன்படுத்த பரிந்துரைத்துள்ளது. தேங்காய் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் தேங்காய் பயிர்ச் செய்கைச் சபையின் கீட்டா நிலையங்களில் வளர்க்கப்படும் ஒட்டுண்ணிகளை விடுவிப்பதன் மூலம் சிறு சேதம் கட்டுப்படுத்தப்பட்டது. 2021 ஆம் ஆண்டு தேங்காய் ஆராய்ச்சி நிறுவனம் எதிர்தளிக்கும் 634,790 ஒட்டுண்ணிகளை இந்த துறைக்கு விடுவித்துள்ளது.



தேங்காய் கம்பளிப்பூச்சுகளை கட்டுப்படுத்தல்

வெண் பூச்சி சேதத்தினைக் கட்டுப்படுத்தல்.

2019 ஆம் ஆண்டு முதற் தடவையாக அறிக்கையிடப்பட்ட வெண் பூச்சுக்களின் பாதிப்பு 2021 ஆம் ஆண்டு முழுவதிலும் கொழும்பு, கம்பஹா மாவட்டங்களில் கூடுதலாக பதிவானது. இதனைக் கட்டுப்படுத்த 3 கிருமி நாசினிகள் சிபாரிசு செய்யப்பட்டதுடன், வெண் பூச்சு வகைகள் 3 இனங்காணப்பட்டன.



கொழும்பு பிரதேசத்தில் தேங்காய் மற்றும் ஓலைகளில் கடும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ள வெண் பூச்சிகள்

செவ்இளணி ஏற்றுமதியில் தொழில்நுட்பத்தை மேம்படுத்துதல்

தேங்காய் ஆராய்ச்சி நிறுவனத்தின் விஞ்ஞானிகள் தெரண தொலைக்காட்சி மற்றும் சுயாதீன தொலைக்காட்சி அலைவரிசைகளில் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு செவ்விளநீர் மற்றும் பிற தேங்காய் தொடர்பான பொருட்களின் ஏற்றுமதி குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தினர். 40 புதிய தொழில்முனைவோர் தேங்காய் ஆராய்ச்சி நிறுவனத்திலிருந்து செவ்விளநீர் ஏற்றுமதி குறித்த தொழில்நுட்பத்தைப் பெற்றுள்ளனர்.

வெலிகாமாவில் தேங்காய் ஓலை வாடும் நோயைக் கட்டுப்படுத்த புதிய ஆய்வுகள்

வெலிகாமா தேங்காய் ஓலை வாடும் நோயைக் கட்டுப்படுத்த நோயை எதிர்க்கும் இரசாயனங்களின் பயன்பாடு குறித்து ஒரு ஆய்வு முன்னெடுக்கப்பட்டது.

தெங்கு ஆராய்ச்சி நிறுவகம் 2021.12.31 ஆம் திகதிக்கு நிதிசார் முன்னேற்றம் (ரூ.மி.)

	ஏற்பாடு	பெறுகை	நிதிசார் முன்னேற்றம்	கையிலுள்ள பட்டியல்கள்
மூலதனம்	70	70	100%	--
மீண்டெழும்	287	257.3	92%	-

2.1.5 தெங்குத் துறை – வரவு செலவுத்திட்டம் மூலம் ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகளின் கீழான அபிவிருத்தி கருத்திட்டங்களின் முன்னேற்றம்

2021.12.31 ஆம் திகதிக்கு நிதிசார் முன்னேற்றம்

தொ. இல	கருத்திட்டம்	2021 நிதிசார் இலக்கு (ரூ. மி.)	2021.12.31 திகதிக்கு திருத்திய வருடாந்த இலக்கு ரூ.மி.	நிதிசார் முன்னேற்றம் (ரூ. மி.)	கையிலுள்ள பட்டியல்கள்
01	இலங்கையில் தற்போது காணப்படும் தெங்குக் காணிகளின் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதன் மூலம் 2021 ஆம் ஆண்டில் தெங்கு விளைச்சாலை 2800 மில்லியன் காய்களிலிருந்து 10% இனால் அதிகரித்தல்	152.00	146	146	-
02	நாட்டில் உள்ள பயன்படுத்தாத வயற் காணிகளை பயன்வாய்ந்த வர்த்தக அலகுகளாக மாற்றியமைக்க தெங்கு பயிரிடல்	248.00	100	17.69	-
03	தெங்கு பயிர்செய்கைக்கு துளி நீர் வழங்கல்	300.00	278.3	270.33	-

2021.12.31 ஆம் திகதிக்கு பௌதீக முன்னேற்றம்

இலங்கையில் தற்போது காணப்படும் தெங்குக் காணிகளின் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதன் மூலம் 2021 ஆம் ஆண்டில் தெங்கு விளைச்சாலை 2800 மில்லியன் காய்களிலிருந்து 10% இனால் அதிகரித்தல்

- நிவாரண உதவி செலுத்துவதை சிபாரிசு செய்தல் - ஏக்கர் 9983
- தாய் செடிகள் 1000 ஐ தெரிவு செய்தல் மற்றும் 30,000 கயிறுகளை கொள்வனவு செய்வது நிறைவு செய்யப்பட்டது. தாய் செடிகள் 750 ஐ கட்டுவது முடிக்கப்பட்டு இனப்பெருக்கம் செய்யப்படுகின்றது. இனப்பெரக்க பொதிகளுக்கு பிடவை கொள்வனவு செய்ய கொள்வனவு கட்டளை விநியோகிக்கப்பட்டது.

நாட்டில் உள்ள பயன்படுத்தாத வயற் காணிகளை பயன்வாய்ந்த வர்த்தக அலகுகளாக மாற்றியமைக்க தெங்கு பயிரிடல்

- கொடுப்பனவு சிபாரிசு செய்தல் 3.25 ஏக்கர், பெற்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கை 753 (959 ஏக்கர்)
- ஆரம்ப காணிப் பரிசோதனை – 907 ஏக்கர் (மாதிரிகளை நிர்மாணிக்க அங்கீகாரம் பெற்றுக் கொள்ள கமநல சேவைகள் திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.)

தெங்குத் துறை – வரவு செலவுத்திட்டம் மூலம் ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகளின் கீழான அபிவிருத்தி கருத்திட்டங்களின் முன்னேற்றம்

2021.12.31 ஆம் திகதிக்கு பௌதீக முன்னேற்றம்

தெங்கு பயிர்செய்கைக்கு துளி நீர் வழங்கல்

- நிவாரண உதவியின் கீழ் நீர் வழங்கும் கட்டமைப்புக்களை நிர்மாணித்தல். 3540 ஏக்கர்
- கடன் அடிப்படையில் நீர் வழங்கல் கட்டமைப்புக்களை நிர்மாணித்தல் - 660
- நீர் மூலங்களை நிர்மாணித்தல் - ஏக்கர் 1196

தெங்குத் துறை – விசேட அபிவிருத்தி கருத்திட்டங்களின் முன்னேற்றம்

நிதிசார் முன்னேற்ற பொழிப்பு

தொ. இல	கருத்திட்டம்	2021 நிதிசார் இலக்கு (ரூ. மி.)	2021.12.31 திகதிக்கு திருத்திய வருடாந்த இலக்கு ரூ.மி.	நிதிசார் முன்னேற்றம் (ரூ. மி.)	கையிலுள்ள பட்டியல்கள்
01	வெலிகம தென்னையோலை வாடும் மற்றும் அழுகும் நோய் கட்டுப்பாட்டு நிகழ்ச்சித்திட்டம் (2018 முதல்)	105	62.59	48.06	-
02	தெங்கு மீள் பயிரிடல் தேசிய செயற்திட்டத்திற்காக கலப்பு விதை தேங்காய் உற்பத்தி செய்யும் கருத்திட்டம் (கினியம தெங்குத் தோட்டம்)	8	8.00	8.00	-
03	மைட்டா சேதத்தை தடுப்பதற்காக எதிர் மைட்டா உற்பத்தி மற்றும் விநியோக வலையமைப்பை விஸ்தரிப்புச் செய்யும் கருத்திட்டம்	15	15	10	-
04	ஈர வலய கலப்பின விதைக் கருத்திட்டம்	6	6	06	-

வெலிகம தென்னையோலை வாடும் மற்றும் அழுகும் நோய் கட்டுப்பாட்டு நிகழ்ச்சித்திட்டம்

பௌதீக முன்னேற்றம்

நிகழ்ச்சித்திட்டத்தின் குறிக்கோளுக்கு ஏற்ப, நோய் வலயத்தில் நோய் வெற்றிகரமாக முகாமை செய்யப்பட்டுள்ளது. நோய் வலயத்திற்கு வெளியில் நோய் பரவல் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. நோய் வலயத்தின் மற்றும் நோய் மூல பிரதேசத்தின் தென்னை மரங்களை பரீட்சிக்கும் போது கண்டறியப்பட்ட மரங்களின் எண்ணிக்கை கிரமமாக குறைவடைந்துள்ளது.

2021.12.31 ஆம் திகதிக்கு பௌதீக முன்னேற்றம்

- 202 கிராம அலுவலர் பிரிவுகள் பரிசோதித்து முடிக்கப்பட்டுள்ளன.
- நோய் மரங்கள் 8,389 அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.
- நோய் மரங்கள் 656 தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளன.
- நோய் மரங்கள் 4,863 நீக்கப்பட்டுள்ளன.

தெங்கு மீள் பயிரிடல் தேசிய செயற்திட்டத்திற்காக கலப்பு விதை தேங்காய் உற்பத்தி செய்யும் கருத்திட்டம் (கினியம தெங்குத் தோட்டம்)

2021.12.31 ஆம் திகதிக்கு பௌதீக முன்னேற்றம்

- மகரந்த சேர்க்கை தயாரிப்பு ஆய்வுகூடத்திற்கு மகரந்த சேர்க்கை இயந்திரங்கள் 02 ஐ கொள்வனவு செய்தல்
- மகரந்த சேர்க்கை க தயாரிப்பு ஆய்வுகூடத்துக்கு வடிகட்டி தொகுதியை கொள்னவு செய்தல்.
- மகரந்த சேர்க்கை ஆய்வுகூடத்திற்கு தளபாடம் கொள்வனவு செய்தல்.
- சென்ராமன் மற்றும் பச்சை குள்ள கன்றுகள் 850 ஐ நிரப்புதல்

மைட்டா சேதத்தை தடுப்பதற்காக எதிர் மைட்டா உற்பத்தி மற்றும் விநியோக வலையமைப்பை விஸ்தரிப்புச் செய்யும் கருத்திட்டம்

2021.12.31 ஆம் திகதிக்கு பௌதீக முன்னேற்றம்

- எதிர் மைட்டா பக்கட் 219,145 பயிர்செய்கையாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.
- 3 களஞ்சியங்கள், 2 ஆய்வு கூடங்களின் நிர்மாண பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. 26 உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. 3 Autoclave கிடைக்க வேண்டியுள்ளன.

ஈர வலய கலப்பின விதைக் கருத்திட்டம்

2021.12.31 ஆம் திகதிக்கு பௌதீக முன்னேற்றம

- 2021 ஆம் ஆண்டு 650 கன்றுகளை நடுவதற்கு குழிகளை அடையாளப்படுத்தல், வெட்டுதல் மற்றும் நிரப்புவதற்குத் தேவையான விலை மனுக்களை கோரி முடித்தல்.
- விதை தென்னந் தோட்டத்தை சுற்றி வேலி நிர்மாணிக்க விலை மனுக் கோரல்.
- மகரந்த சேர்க்கை ஆய்வுகூடத்திற்கு வடிகட்டி தொகுதியை கொள்வனவு செய்தல்
- மகரந்த சேர்க்கை ஆய்வுகூடத்திற்கு மகரந்த சேர்க்கை இயந்திரமொன்றை கொள்வனவு செய்வதற்கு கொள்வனவு கட்டளை அனுப்புதல்
- விதை தென்னை தோட்டத்தில் 2021 இல் நாட்டத் தேவையான தாய் மரங்களை உற்பத்தி செய்தல்.
- 2021 ஆண்டு நாட்டப்படவுள்ள தாய் மரங்களை உற்பத்தி செய்வதற்கு கையினால் மகரந்த சேர்க்கை செய்யும் நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்தல்.

2.2 கித்துல் துறை

2.2.1 கித்துல் துறை – அறிமுகம்

கித்துல் மரத்தின் பொருளாதாரப் பாவனை



இலங்கைக்குத் தனிச்சிறப்புமிக்க கைத்தொழில் ஒன்றாக கித்துல் சார்ந்த உற்பத்திக் கைத்தொழிலை உள்ளூர் ரீதியிலும் வெளிநாட்டு ரீதியிலும் உயர் ஆற்றல்மிக்க கைத்தொழில் ஒன்றாக இனங்காணப்பட்டுள்ளது. கித்துல் கிராம அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம், கித்துல் கைத்தொழிலுக்கான 2010 ஆம் ஆண்டிலே வெளியிடப்பட்ட மூன்றாண்டு தேசியத் திட்டம் ஆகிய நிகழ்ச்சித் திட்டங்களின் ஊடாக கித்துல் கைத்தொழிலை கட்டியெழுப்புவதற்கு பாரிய பங்களிப்பு அரச துறையினால் வழங்கப்பட்டுள்ளது.

கைத்தொழில் அமைச்சின் கீழ் இராஜாங்க அமைச்சு ஒன்றாக தென்னை, கித்துல், பனை மற்றும் றப்பர் செய்கை மேம்பாட்டு மற்றும் அது சார்ந்த கைத்தொழில் பண்டங்கள் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி பல்வகைப்படுத்தல் இராஜாங்க அமைச்சு நிறுவப்பட்டதன் ஊடாக உள்ளூர் உற்பத்திகளை மேம்படுத்தியதன் ஊடாக உள்ளூர் உற்பத்தி மேம்பாட்டின் ஊடாக மக்களை மையப்படுத்திய பொருளாதாரம் ஒன்றினை உருவாக்கும் பொருட்டு அவதானம் செலுத்தப்பட்டுள்ளமையால் "கித்துல் பயிர்" சார்ந்த பொருளாதார ஆற்றலினை இனங்கண்டு அதனை விஸதரிப்பு தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

கித்துல் மரத்திலிந்து பாணி, கருப்பட்டி, கள்ளு, வினாகிர், கித்துல் மா மற்றும் கித்துல் எண்ணெய் என்பன உணவிற்கும் கித்துல் மரம் பலகைக்கும், கித்துல் ஓலை கைப்பணிப் பொருட்களுக்கும் பயன்படுத்தப்படுகின்றன. அவ்வாறே கித்துல் தாவரம் சுற்றாடல் ரீதியில் பண்ணறிப்பைத் தடுப்பதற்கும் பயன்படுத்தப்படுகின்றன. கித்துலானது பல்வேறு நோய்களுக்கான சிகிச்சையளிப்பதற்கு மருந்தாகவும் இனங்காணப்பட்டுள்ளன. அது மட்டுமன்றி அழகுக் கலை, உடல் வளர்ச்சி என்பவற்றிற்கான மருந்தாகவும் சுதேச மருத்துவத்துறையில் பயன்படுத்தப்படுகின்றன. மேலும் மாடு, யானை என்பவற்றின் நோய்களுக்கான மருந்தாகவும் பயன்படுத்தப்படுகின்றன.

அவ்வாறே கித்துல் நார் மற்றும் கள்ளு சார்ந்த உற்பத்திகள் ஏற்றுமதி செய்யப்படுவதுடன், அதற்கு பாரிய உள்ளூர் சந்தையொன்றும் காணப்படுகின்றது. கித்துல் கைத்தொழிலானது நாடளாவிய ரீதியில் 18 மாவட்டங்களில் விஸ்தரிக்கப்பட்டு காணப்படுவதுடன், மொத்த கித்துல் மரங்களின் எண்ணிக்கையில் சுமார் 27மூ அரசாங்கத்திற்குச் சொந்தமான காணிகளில் உள்ளன. ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவகம் மேற்கொண்ட ஆராச்சித் தரவுகளின் பிரகாரம் கித்துல் பூவிலிருந்து பாணி எடுப்போரில் அதிகமானவர்கள் இரத்தினபுரி மாவட்டத்திலும், கித்துல் கைத்தொழிலை வாழ்வாதாரமாகக் கொண்டியங்கும் அதிகமான குடும்பங்கள் நுவரெலியா மாவட்டத்திலும் உள்ளதுடன், கண்டி, பதுளை, மொனராகலை, மாத்தறை, கேகாலை, நுவரெலியா, களுத்துறை, காலி, குருநாகல், மாத்தளை, ஹம்பாந்தோட்டை, கொழும்பு உள்ளிட்ட 13 மாவட்டங்களிலும் கித்துல் கைத்தொழிலை ஆரம்பிக்க முடியும்.

2.2.2 கித்துல் துறை அபிவிருத்திக்கான எதிர்கால நோக்கு

கித்துல் துறை உபாயமுறையிலான சட்டகம் 2021-2025

இலக்கு

➢2025 ஆம் ஆண்டளவில் நன்கு வேரூன்றிய முறைசார்ந்த ஒரு பயிர்ச்செய்கையாக கித்துள் பயிர்ச்செய்கையை மாற்றியமைத்தல்.

➢2025 ஆம் ஆண்டளவில் புதிய தொழில்நுட்பத்தை ஈடுபடுத்தி பெறுமதி சேர்க்கப்பட்ட புதிய உற்பத்திகளினூடாக சுதேச வளங்களை அடிப்படையாகக்கொண்டதோர் ஏற்றுமதியாக கித்துள் துறையை அபிவிருத்திசெய்வதன் மூலம் ஏற்றுமதி வருவாயை 10% ஆல் அதிகரித்தல்.

உபாயமுறையிலான சட்டகம்

- கித்துல் துறைக்கு முறையான நிறுவனக் கட்டமைப்பை அறிமுகம் செய்தல்
- ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி ஊடாக காணக் கிடைக்கும் கித்துள் மரங்கள் மற்றும் கித்துள் கைத்தொழிலாளர்களின் அதிசிறப்பான பாவனையை உறுதிப்படுத்துதல்.
- கித்துளை அடிப்படையாகக்கொண்ட உற்பத்திகளைச் சந்தைப்படுத்தலும் தர நியமங்களை முன்னேற்றுதலும்.
- கித்துள் கைத்தொழிலாளர்களின் வருவாயையும் வாழ்க்கைத்தரத்தையும் முன்னேற்றுதலும், அவர்களின் சமூக அங்கீகாரத்தை உறுதிப்படுத்துதலும்.
- கித்துள் பயிரிடப்படும் நிலங்களை விஸ்தரித்தலும், காணிக் கையாளலின் விளைத்திறனை அதிகரித்தலும்.
- கித்துள் உற்பத்தியின் பெறுமானச் சங்கிலியை நவீனமயப்படுத்தலும், உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்திசெய்தலும்.
- கித்துள் உற்பத்தி பல்வகைப்படுத்தலும், பெறுமதி சேர்ப்புக்களை முன்னேற்றுதலும்.
- கித்துள் கைத்தொழிலாளர்களின் வாலிப வகுப்பொன்றைக் கட்டியெழுப்புதல்.

கித்துள் துறையை அபிவிருத்திசெய்வதற்கான உபாயமுறைத் திட்டத்தின் கீழ் கித்துள் துறைக்குரிய நிறுவனம்சார் பணிச்சட்டமொன்றை அறிமுகப்படுத்த எதிர்பார்க்கப்படுகிறது. 1971 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க தெங்குப் பயிர்ச்செய்கைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் கித்துள் துறையை முறைவலுப்படுத்துவதற்கென தனிவேறானதோர் அரச நிறுவனமாக 'கித்துள் அபிவிருத்திச் சபையை' நிறுவுவதற்கும், கித்துள் பயிர்ச்செய்கையை பிரதான பயிரொன்றாக மாற்றுவதற்கும் இதன் கீழ் எதிர்பார்க்கப்படுகிறது. எதிர்வரும் ஆண்டில் இதற்கான நிதிஒதுக்கீடுகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியின் ஊடாக தற்போதைய கித்துள் பயிர்ச்செய்கை மற்றும் கித்துள் கைத்தொழிலாளர்களின் அதிசிறந்த பாவனையை உறுதிப்படுத்துவதற்கு சம்பிரதாய கித்துள் கைத்தொழிலாளர்கள் பற்றிய விரிவான தரவுத்தளமொன்றைத் தயாரித்தல், தற்போதைய கித்துள் பயிர்ச்செய்கை மற்றும் மூல வளவாய்ப்புள்ள பயிர் நிலங்கள் பற்றிய பரந்தளவிலான தரவுத்தளமொன்றைத் தயாரித்தல், வருடாந்தம் நிகழ்நிலைப்படுத்தல், ஆராய்ச்சிகள், தரக் கட்டுப்பாட்டு அபிவிருத்திக்கான ஆய்வுகூட வசதிகளை முன்னேற்றுதல் என்பன மேற்கொள்ளப்படுகிறது.

அதேபோல், கித்துல் அடிப்படையாகக்கொண்ட உற்பத்திகளின் சந்தைப்படுத்தல் தர நியமங்களை ஏற்படுத்துதல், உண்ணாட்டு மற்றும் சர்வதேச சந்தைப்படுத்தலுக்கான இ-வாணிப முறைமையொன்றை அறிமுகப்படுத்துதல், உண்ணாட்டு மற்றும் சர்வதேச சந்தைப்படுத்தல் வாய்ப்புகளை விஸ்தரித்தல், ஏற்றுமதிக்கான நன்மதிப்புச் சின்னங்கள், நன்மதிப்புச் சின்னமிடல் மற்றும் கித்துள் உற்பத்திகளை கவர்ச்சிகரமாக பொதிசெய்தல், பூகோள இடங்களை உறுதிப்படுத்துதல் முறைமையொன்றை - Geographical Location Certification System உருவாக்குதல் (உதாரணமாக: மீமுரே கித்துள், நெளுவை கித்துல்.... முதலான), சம்பிரதாய கித்துள் உற்பத்திகளுக்கு சந்தை வாய்ப்புகளை அதிகரிப்பதற்கான வர்த்தகக் கண்காட்சிகளை ஒழுங்குசெய்தல் என்பன எதிர்பார்க்கப்படுகின்றன.

கித்துள் கைத்தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றுவதற்காக கித்துள் கைத்தொழிலாளர்களுக்கான விசேட நிதிப் பாதுகாப்பு முறையொன்றை அறிமுகப்படுத்தல், கித்துள் கைத்தொழிலாளர்களுக்கு ஓய்வூதியத் திட்டமொன்றை அறிமுகப்படுத்தல், கித்துள் கைத்தொழிலுக்கு தனிச்சிறப்பான சம்பிரதாய அறிவுடன்கூடிய கித்துள் சீவலை வரவேற்புள்ள ஒரு தொழிலாக மாற்றி சமூகமயப்படுத்தல், கித்துள் உற்பத்திகள் தர நியமப்படுத்தல் பொறிமுறையொன்றை ஏற்படுத்துதல், சமூக அங்கீகாரத்தை உறுதிப்படுத்தல் முதலான நிகழ்ச்சித்திட்டங்களை முன்னெடுக்க எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், குறை பயன்பாட்டு கித்துள் பயிர்ச்செய்கைகளை அடையாளம் காண்பதன் மூலம் கித்துள் கைத்தொழிலின் மூல வளவாய்ப்பை திரட்டிக்கொள்ளல், தற்போது அடையாளம் காணப்பட்டுள்ள உயர் அறுவடையுடன்கூடிய கித்துள் வகையறாக்களின் நாற்றுமேடைகளை ஏற்படுத்துதல், கித்துள் பயிர்ச்செய்கைக்கு மூல வளவாய்ப்புள்ள புதிய மாவட்டங்களை அடையாளம் காண்பதன் மூலம் பயிர் நிலங்களை விஸ்தரித்தல், காணிக் கையாளலின் விளைத்திறனை அதிகரித்தல் என்பன எதிர்பார்க்கப்படுகின்றன.

உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதன் மூலம் கித்துள் உற்பத்தியின் பெறுமானச் சங்கிலியை நவீனமயப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. அனுமதித்த கித்துள் பெறுமானச் சங்கிலி நவீனமயப்படுத்தல் கருத்திட்டத்தின் கீழ் பெறுமானச் சங்கிலியின் தரப்பினர்களைப் பயிற்றுவித்தல், அரச தனியார் பங்காண்மையின் கீழ் கித்துள் சாறு மற்றும் கித்துள் பாணி சேகரிப்பு நிலையமொன்றை நிறுவுதல், உத்தரவாதப்படுத்திய கித்துள் பதனிடல் நிலையங்களை நிறுவுதல், விற்பனைக்கூடங்களையும் கித்துள் சுற்றுலாப் பூங்காக்களையும் நிறுவுதலும் இதன்கீழ் எதிர்பார்க்கப்படுகிறது.

கித்துள் உற்பத்தி பல்வகைப்படுத்தலையும் பெறுமதி சேர்ப்பையும் முன்னேற்றுவதனூடாக பெறுமதி சேர்க்கப்பட்ட உணவு உற்பத்திகளை மேம்படுத்துதல், ஊக்குவித்தல் மற்றும் கித்துளை அடிப்படையாகக்கொண்ட வேறு உற்பத்திகளை மேம்படுத்துதன் மூலம் கித்துள் கைத்தொழிலை அபிவிருத்திசெய்ய எதிர்பார்க்கப்படுகிறது. எதிர்வரும் ஆண்டில் இதற்கான நிதிஒதுக்கீடு எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், கித்துள் கைத்தொழிலாளர்களின் வாலிப வகுப்பொன்றைக் கட்டியெழுப்புவதற்கு அடையாளம் காணப்பட்ட சம்பிரதாய அறிவுடன்கூடிய கித்துள் கைத்தொழிலாளர்கள் மூலம் கித்துள் கைத்தொழில் தற்போது பரவலாகக் காணக்கூடிய பிரதேசங்களில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல், கித்துள் கைத்தொழிலை பாடசாலை பாடவிதானத்தில் உட்சேர்த்தல், கித்துள் சம்பந்தமான தொழிற்பயிற்சி அதிகாரசபை மூலம் பயிற்சிப் பாடநெறிகளை நடாத்துதல், ஊடகங்கள் வாயிலாக விழிப்புணர்வை அதிகரிப்பதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல் முதலியவற்றின் மூலம் கித்துள் துறையை அபிவிருத்திசெய்ய எதிர்பார்க்கப்படுகிறது.

கித்துல் துறை 2021 - இலக்கு

கித்துல் துறையின் அபிவிருத்திக்காக 2021 ஆண்டில் பின்வரும் கருத்திட்டங்களை அமுல்படுத்தல் ரூ.மி. 120 அமைச்சுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

தொ. இல..	அமுல்படுத்தும் கருத்திட்டம்	2021 இன் ஏற்பாடு (ரூ.மி.)	கருத்திட்டத்தின் நோக்கம்	உத்தேச பெறுபேறு/ இலக்கு	அமுல்படுத்தும் நிறுவனம்
வரவு செலவுத்திட்ட பிரேரணை மூலம் ஒதுக்கப்பட்ட ஏற்பாடு					
1	கித்துல் உற்பத்தி மற்றும் பெறுமதி மேம்படுத்தல் கருத்திட்டம்	**100.00**	கித்துல் துறையை அபிவிருத்தி செய்வதற்கு முறையான நிறுவனச் சட்டகத்தை தயார் செய்தல். கித்துல் உற்பத்திக்கு வசதிகளை செய்தல் மற்றும் கைத்தொழிலாளர்களை ஊக்குவித்தல்	• ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி மூலம் கித்துல் தற்போதுள்ள கித்துல் மரங்கள் மற்றும் கித்துல் கைத்தொழிலாளர்களின் சிறந்த பயன்பாட்டை உறுதிப்படுத்தல். • கித்துல் அடிப்படையிலான உற்பத்திகளை சந்தைப்படுத்தல் மற்றும் தரத்தை மேம்படுத்தல் • கித்துல் கைத்தொழிலாளர்களின் உழைப்பு மற்றும் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தல், அவர்களின் சமூக அங்கீகாரத்தை உறுதி செய்தல். • கித்துல் பயிர் செய்கை நிலங்களை விஸ்தரித்தல், காணிப் பயன்பாட்டை அதிகரித்தல். • கித்துல் உற்பத்தியின் பெறுமதி சேர்ப்பத நவீனமயப்படுத்தல் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்	கித்துல் அபிவிருத்தி சபை

தொ. இல..	அமுல்படுத்தும் கருத்திட்டம்	2021 இன் ஏற்பாடு (ரூ.மி.)	கருத்திட்டத்தின் நோக்கம்	உத்தேச பெறுபேறு/ இலக்கு	அமுல்படுத்தும் நிறுவனம்
விசேட அபிவிருத்திக் கருத்திட்டம்					
1	கித்துல் அபிவிருத்தி	20.00	கித்துல் துறையை அபிவிருத்தி செய்தல்	• கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்துடன் தரமான கித்துள் உற்பத்தியை தயார் செய்தல் மற்றும் கித்துள் மரத்தை பாதிக்கும் நோய்கள் தொடர்பான ஆய்வுக் கருத்திட்டங்களை நடாத்தல்.	கித்துல் அபிவிருத்தி சபை

2.2.3 கித்துல் துறையை அபிவிருத்தி செய்வதிலுள்ள சவால்கள்

கித்துல் பயிர் செய்கை தொடர்பிலான சிக்கல்கள்

- கித்துல் முறையான பயிர் செய்கையாக வியாபிக்கப்படாதுள்ளமை மற்றும் பயிர்செய்கை பற்றிய தரவுகள் இல்லாமை.
- கித்துல் மரங்கள் வனப்பகுதி மற்றும் சென்றடைய முடியாத மலைகளில் பரவலாக காணப்படுகின்ற போதும் அம்மரங்களை சென்றடைவது கடினமாக உள்ளமை.

கித்துல் கைத்தொழிலாளர்களுக்குள் சிக்கல்கள்

- சம்பிரதாயபூர்வமான அறிவை அடிப்படையாகக் கொண்ட உள்நாட்டுக் கைத்தொழில் ஒன்றான கித்துல் கைத்தொழில் பற்றிய அறிவு சமூகமயப்படுத்தப்படாமை காரணமாக கைத்தொழில் பற்றிய அறிவு பிரபல்யமடைவது மந்தகதியில் இடம்பெறுகின்றது.
- சம்பிரதாயபூர்வமான அறிவை பாதுகாக்கும் முறையியல் இல்லாமை.
- புதிய தொழில்நுட்ப முறையியலாக கெஸ்பர் தொழில்நுட்பம் அறிமுகம் செய்யப்பட்ட பொதும் மேற்படி தொழில்நுட்பத்தை பிரதேச மட்டத்தில் பகிரும் முறையில் இல்லாமையும், கெஸ்பர் உற்பத்தி போதியளவாக இல்லாமையும்.
- கித்துல் பூ வெட்டும் போது இடம்பெறும் விலங்குகள் மூலமான பாதிப்பை குறைத்துக் கொள்ளும் முறையியல் இல்லாமை.
- இளம் சமுதாயத்தினர் கித்துல் கைத்தொழிலில் பிரவேசிக்காமை.
- கித்துல் மரம் மிக உயரமானதாக உள்ளமை, மரம் ஏறுவதற்கு பாதுகாப்பான அம்சங்கள் இல்லாமை.
- கித்துல் மரம் உயரமாக உள்ளதனால் மரம் ஏறுவது உயிருக்கு ஆபத்தானதாக உள்ளமை, எனவே கித்துல் கைத்தொழிலாளர்களின் வீடுகளில் பெண்கள் இந்த கைத்தொழிலுக்கு பிரவேசிக்க ஊக்கமில்லாமை.
- இறக்கப்பட்ட கித்துல் கள்ளை கொண்டு செல்லும் போது சட்ட ரீதியான தடைகள் உள்ளதனால் கைத்தொழில் வளர்ச்சியடைவதில் தடை இருத்தல், கித்துல் கள்ளு தற்போது வைத்திருக்க முடிவது ஐந்து போத்தல் மாத்திரமாகும் என்பதும் இதன் வளர்ச்சிக்குத் தடையாக உள்ளது.
- அபாயம் அதிகமான தொழிலாக உள்ளதுடன், பூவெட்டும் போது இடம்பெறும் விபத்துக்களுக்கான காப்புறுதி முறையொன்று தற்போது இல்லை.

சந்தை தொடர்பிலான சிக்கல்கள்

- தரக் குறைவான உற்பத்திகள் சந்தைக்கு வருதல்.
- கித்துல் உற்பத்தியின் தரத்தைக் குறைப்பதற்கு மேற்கொள்ளப்படும் சீனியை கலத்தல் போன்ற நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துவதற்கான சட்டரீதியான சட்டம் அமுலில் இல்லாமை.
- கித்துல் பாணிகளின் தரத்தை பரிசோதிக்கும் உபகரணம் அறிமுகம் செய்யப்பட்டுள்ள போதும் அவற்றைக் கொள்வனவு செய்வதற்கான முறையில் இல்லாமையும், பரவலாக இல்லாமையும்.

நிறுவன ரீதியான சிக்கல்கள்

- உத்தேச கித்துல் அபிவிருத்தி சபையை முறையாக தாபித்து துரிதமாக பதவியணியினரை ஆட்சேர்ப்புச் செய்ய வேண்டியுள்ளது.
- கித்துல் உற்பத்தி தேசிய நிகழ்ச்சித்திட்டம் பற்றி சமூகத்தில் உள்ள அங்கீகாரம்
- பயன்களை பெற்றுக் கொடுக்கும் போது பயனாளிகள் சகலரையும் உள்ளடக்கும் வகையில் பயன்களைப் பெற்றுக் கொடுப்பதற்கு போதியளவு ஏற்பாடுகள் கிடைக்காமை.

கித்துல் துறை அபிவிருத்திக்கான வசதிகளை அளித்தல்

"கித்துல் அபிவிருத்திச் சபையை" நிறுவுதல்

பணிகள்

சம்பிரதாய கித்துல் கைத்தொழிலில் ஈடுபடுவோர் பற்றிய முறைசார் ஆய்வை மேற்கொள்ளல், தற்போது இக்கைத்தொழிலில் ஈடுபட்டுள்ளோரை அடையாளம் காணலும், பதிவும்
தொழில்நுட்ப தன்மையிலான அனைத்து விடயங்கள் குறித்து கித்துள் கைத்தொழிலுக்கு ஆலோசனைகளை வழங்குதலும் வழிகாட்டுதலும்
கித்துள் கைத்தொழிலுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கு ஆலோசனை மற்றும் கருத்திட்ட வேலையாட்களைப் பயிற்றுவித்தல்
கித்துள் உற்பத்திச் சங்கங்களை நிறுவுதல், பாதுகாப்பு உபகரணத் தொகுதிகளை அறிமுகப்படுத்தல், தொழில்சார் ஆடைத் தொகுதிகளை அறிமுகப்படுத்தல், காப்புறுதி உத்தரவாதங்களை வழங்குதல்.
கித்துள் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களைப் பதிவுசெய்தலும், அடையாள அட்டைகளை வழங்குதலும்.
கித்துள் உற்பத்திகளை மேற்கொள்ளலும், அவை தொடர்பில் உதவுதலும், ஊக்கப்படுத்தலும், முறைவலுப்படுத்தலும்
கித்துள் உற்பத்திகளைப் பதனிடுவதற்கான முன்னோடி பொறியமைப்புகளை நிறுவுதல், பராமரித்தல், பரீட்சார்த்த பதனிடல் உபகரணங்களை உருவாக்குதல்
கித்துள் உற்பத்திகளைச் சேகரிக்கும் நிலையங்களை ஏற்படுத்துதல்
கித்துள் உற்பத்திகளைப் பதனிடல் சம்பந்தமான நவீன தொழில்நுட்பத்தை ஊக்குவித்தல்
கித்துள் உற்பத்திகள் மேற்கொள்ளப்படும் நிறுவனங்களின் விளைத்திறனை அதிகரிப்பதில் உதவுதலும், அவற்றின் நவீனமயப்படுத்தலை ஊக்குவித்தலும் வழிப்படுத்தலும்
உள்ளிட்ட கித்துள் துறையை அபிவிருத்தி செய்வதற்காக அடையாளம் காணப்பட்ட கருமங்கள் நிறைவேற்றப்படும்.

இலங்கையில் கித்துள் பயிர்ச்செய்கை மற்றும் கைத்தொழிலை அபிவிருத்தி செய்வதற்காக அதற்கே உரிய தாபனக் கட்டமைப்பொன்றை நிறுவும் தேவை இனங்காணப்பட்டுள்ளது. பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் வழிகாட்டலின் பேரில் இந்த இராஜாங்க அமைச்சினால் ஏலவே இது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 1971 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க தெங்கு அபிவிருத்திச் சட்டத்தின் 2(1) பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு பெருந்தோட்டத்துறை அமைச்சருக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைப் பிரயோகித்து **கித்துல் துறைக்கு உரிய நிறுவனச் சட்டமொன்றை நிறுவுவதற்காக** 'கித்துள் அபிவிருத்திச் சபை' நிறுவப்படும். இதற்காக வர்த்தமானி அறிவித்தல் வரைவு இசைவு உத்தரவைப் பெற்றுக்கொள்வதற்காக சட்டவரைஞர் திணைக்களத்திற்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளதுடன், 'கித்துள் அபிவிருத்திச் சபையை' நிறுவுவதற்கான அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.

கித்துல் பயிரை பிரதான பெருந்தோட்டப் பயிரொன்றாக பெயரிடுதல்

கித்துல் உற்பத்திகளை ஸ்திரிப்படுத்துவதற்கு விசேட மூல வளவாய்ப்புள்ளதுடன், கித்துல் கைத்தொழிலை ஊக்குவிப்பதற்கான வசதியளிப்பதற்கு கித்துல் பயிரை பிரதான பெருந்தோட்டப் பயிரொன்றாகப் பெயரிடுவதற்கு பெருந்தோட்டத்துறை அமைச்சின் வழிகாட்டலின் கீழ் இந்த இராஜாங்க அமைச்சினால் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அதேபோல், கித்துள் சார்ந்த கைத்தொழிலை அருவை (Intangible) உலக கலாசார மரபுரிமையொன்றாக ஐக்கிய நாடுகள் கல்வி, விஞ்ஞான, கலாசார அமைப்பு (UNESCO) ஊடாக பெயரிடுவதற்கு அவசியமான பூர்வாங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஆதலால், கித்துல் பயிரை பிரதான பெருந்தோட்டப் பயிரொன்றாகப் பெயரிடுவதன் மூலம் எதிர்காலத்தில் அது சார்ந்ததாக மேற்கொள்ளப்படும் பயிர் ஊக்குவிப்புகள், அபிவிருத்தி வேலைத்திட்டங்களை அமுல்படுத்தல், சட்டதிட்டங்களைத் தயாரித்தல் மூலம் ஒழுங்குபடுத்தல் முதலான கித்துள் பயிர் சார்ந்த கைத்தொழிலைக் கட்டியெழுப்புவதற்கு எடுக்கப்படக்கூடிய அனைத்து நடவடிக்கைகளையும் நாடு தழுவியளவில் மேற்கொள்வதற்கு வசதியானதாக அமையும். கித்துல் பயிர் சார்ந்த ஏற்றுமதி இலக்குகளை அடைந்துகொள்வதற்கும், கிராமிக் கைத்தொழிலொன்றாக ஊக்குவிப்பதற்கும் அவசியமான இலக்குகளை அடைந்துகொள்வதற்கு வசதியாக அமைவதால், கித்துள் பயிரை பிரதான பெருந்தோட்டப் பயிரொன்றாகப் பெயரிடுவது காலப்பொருத்தமுடைய முக்கிய ஒரு விடயமாகும்.

கித்துலை பிரதான பெருந்தோட்டப் பயிரொன்றாகப் பெயரிடுதலும் 'கித்துல் அபிவிருத்திச் சபையை' நிறுவுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

இராஜாங்க அமைச்சினால் கித்துள் துறையின் மேம்பாட்டுக்காக எடுக்கப்பட்டுள்ள சிறப்பான நடவடிக்கைகளின் முன்னேற்றம்

2020.08.01 ஆந் திகதிய, 2187/27 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலுக்கமைய இந்த இராஜாங்க அமைச்சு ஆரம்பமாக நிறுவப்பட்ட திகதியிலிருந்து கித்துள் துறையின் மேம்பாடு கருதி சிறப்பான பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

இதன் கீழ்,

- 2021-2025 கித்துள் துறை அபிவிருத்திக்கான ஐந்தாண்டு உபாயமுறைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது.
- கித்துள் பயிரை பிரதான பெருந்தோட்டப் பயிரொன்றாகப் பெயரிடுவதற்கும் 'கித்துள் அபிவிருத்திச் சபையை' நிறுவுவதற்கும் அமைச்சரவை அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு அமைச்சரவை விஞ்ஞாபனமொன்றைச் சமர்ப்பித்தல்.
- 2020.12.14 ஆம் திகதிய அவி/20/1882/326/019 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்திற்கு அமைய கித்துல் வர்த்தக பயிரொன்றாக பெயரிடப்படுவதை ஊக்குவிக்கும் நோக்கத்துடன், கித்துல் பிரதான பயிர் செய்கையொன்றாக பெயரிடப்பட்டமை.
- 2206/13 ஆம் இலக்க 2020.12.16 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி மூலம் 1976 இன் 46 ஆம் இலக்க தெங்கு அபிவிருத்தி சட்டத்தின் தத்துவங்களுக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளக்கூடியவாறு கித்துல் பயிரும் தெங்கு அபிவிருத்தி சட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டமை.
- 1971 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க தெங்கு அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் பெருந்தோட்டத்துறை அமைச்சருக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைப் பிரயோகித்து 'கித்துள் அபிவிருத்திச் சபை' தாபிக்கப்பட்டது.
- கித்துள் உற்பத்திகளைப் பாவிப்பதிலுள்ள சுகாதார ரீதியான அனுகூலங்கள், கித்துள் கைத்தொழிலின் சம்பிரதாய அறிவு சம்பந்தமாக சமூகத்தின் மத்தியில் விழிப்புணர்வூட்டுவதற்கு இந்த அமைச்சின் வழிகாட்டலுடனும் ஆதரவுடனும் அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கத்தினதும் தொழில்வாண்மையினர் சங்கத்தின் பங்களிப்புடனும் கித்துள் பற்றிய அறிவோர் ஒன்றுகூடலொன்று நடாத்தப்பட்டது.
- கித்துள் கைத்தொழிலின் முன்னேற்றத்துக்காக செலவுத் தலைப்பு 431-2-3-2-2507 இன் கீழ் 2021 ஆம் ஆண்டு ரூபா 83 646 850.00 (மில்லியன் 83.6 ஆன) ஏற்பாடுகள் கித்துள் காணப்படுகின்ற 11 மாவட்டங்களின் 70 பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு இராஜாங்க அமைச்சினால் ஒதுக்கப்பட்டது. 2021 இன் இறுதியில் பயனாளிகள் 5000 இற்கும் மேற்பட்டவர்களுக்கு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள், தேவையான உபகரணங்கள், கித்துள் உற்பத்தி நிலைய புதுப்பித்தல்களுக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை செய்துகொடுத்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டன.
- ஏற்றுமதி அபிவிருத்தி சபையினால் மேற்கொள்ளப்பட்ட கித்துள் சார்ந்த உற்பத்திகளுக்கு பெறுமதி சேர்க்கும் கருத்திட்டத்திற்கு அமைச்சின் செலவுத் தலைப்பு 431-2-3-2-2507 கீழ் ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகளில் ரூபா ஒரு மில்லியன் வழங்கப்பட்டது.
- 2021 ஆம் ஆண்டு அமைச்சின் செலவுத் தலைப்பு 431-2-3-2-2506 இன் கீழ் ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகளில் ரூ.மி. 3.9 ஆன தொகை காலி, கொழும்பு, களுத்துறை ஆகிய 03 மாவட்டங்களிலும் வாழும் கித்துள் தொழில்முயற்சியாளர்கள் 956 பேருக்கு கித்துள் கைத்தொழிலுக்கு அத்தியாவசியமான உபகரணங்கள் வழங்கப்பட்டமை.
- கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவகத்துடன் இணைந்து கித்துள் மரங்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் கிருமிகளை இனங்காணல், கித்துள் நாற்று மேடைகளை தாபித்தல் போன்ற தொழில்நுட்ப நடவடிக்கைகளுக்கு ரூ.மி. 5.58 ஏன தொகை அமைச்சினால் செலவிடப்பட்டது. .


கித்துல் துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் உத்தேச பெறுபேறுகள்

நிகழ்ச்சித்திட்டம்	உத்தேச பெறுபேறுகள்
கித்துள் கைத்தொழிலின் முன்னேற்றத்துக்கு ஏற்பாடுகளை பெற்றுக் கொடுத்தல்	கித்துள் வியாபித்துக் காணப்படுகின்ற மாவட்டங்களில் வாழும் குறைந்த வருமானம் பெறும் கித்துள் தொழில்முயற்சியாளர்களுக்குத் தேவையான உபகரணம் மற்றும் பயிற்சியை பெற்றுக் கொடுப்பதன் மூலம் அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தல். செலவிடப்பட்ட மொத்த தொகை ரூ.மி. 83.6 ஆகும்.
கித்துள் அபிவிருத்திச் சபையை நிறுவுதல்.	2025 ஆம் ஆண்டளவில் நன்கு வேரூன்றிய முறைசார்ந்த ஒரு பயிர்ச்செய்கையாக கித்துள் பயிர்ச்செய்கையை மாற்றுதலும் புதிய தொழில்நுட்பத்தை ஈடுபடுத்தி பெறுமதி சேர்க்கப்பட்ட புதிய உற்பத்திகளின் ஊடாக உண்ணாட்டு வளங்களை அடிப்படையாகக்கொண்ட ஏற்றுமதியொன்றாக கித்துளை ஊக்குவித்தலும் அதன் மூலம் ஏற்றுமதி வருவாயை 10 சதவீதத்தினால் அதிகரிப்பதற்கான இலக்கை அடைந்துகொள்வதற்கு அவசியமான முறைசார்ந்த நிறுவனச் சட்டமொன்று நிறுவப்பட்டமை
பெறுமதி சேர்க்கும் கருத்திட்டம்	ஏற்றுமதி அபிவிருத்தி சபையினால் மேற்கொள்ளப்படும் இக்கருத்திட்டம் மூலம் தெரிவு செய்யப்பட்ட கித்துள் தொழில்முயற்சியாளர்களுக்கு கித்துள் உற்பத்திகளின் தரத்தை மேம்படுத்தத் தேவையான பயிற்சி மற்றும் அத்தியாவசியமான உபகரணங்களை பெற்றுக் கொடுத்தல். செலவிடப்பட்ட மொத்தத் தொகை ரூ.மி. 1 ஆகும்.
கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவகத்துடன் இணைந்து மேற்கொள்ளும் கருத்திட்டம்	கித்துள் மரத்திற்கு வரும் நோய்களை இனங்காணல், கித்துள் நாற்று மேடைகளை தயார் செய்தல் மற்றும் கித்துள் கள்ளு தொடர்பான ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல். செலவிடப்பட்ட தொகை ரூ.மி. 5.58 ஆகும்.

2.2.4 கித்துள் துறை – ஒட்டுமொத்த முன்னேற்றம்

கித்துள் ஏற்றுமதி

கித்துள் கைத்தொழில் மூலம் உள்நாட்டு தேவைகளை பூர்த்தி செய்வதற்கு மேலதிகமாக 2021 ஆம் ஆண்டு கித்துள் பாணி மற்றும் கித்துள் கட்டி ஏற்றுமதி மூலம் அமெ.டொ. 943,489 ஆன வருமானம் உழைக்கப்பட்டது. இது 2010 ஆம் ஆண்டின் ஏற்றுமதி வருமானமான அமெ.டொ. 45,112 உடன் ஒப்பிடுகையில் 20 மடங்கு வளர்ச்சியாகும். எனினும் 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் கித்துள் உற்பத்தி ஏற்றுமதி வருமானத்தில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இலங்கையின் கித்துள் பாணி மற்றும் கித்துள் கட்டி உற்பத்தி அவுஸ்திரேலியா, கனடா, இங்கிலாந்து, ஐக்கிய அரபு இராச்சியம் உள்ளிட்ட சுமார் 20 நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றது.



கித்துள் கைத்தொழிலாக சிறு அளவில் மேற்கொள்ளும் கித்துள் கைத்தொழிலின் மற்றும் கித்துள் துறை தொடர்பிலான தரவுகளை இற்றைப்படுத்தாமை காரணமாக இந்தத்துறை தொடர்பான ஒட்டுமொத்த முன்னேற்றம் பற்றிய நம்பகமான மூலங்கள் இல்லை.

எவ்வாறாயினும் 2009 ஆம் ஆண்டு சனத்தொகை. புள்ளிவிபரவியல் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்புக் தகவல்களுக்கு அமைய 2009 ஆம் ஆண்டளவில் கித்துள் கைத்தொழிலை தமது வாழ்வாதாரமாக கொண்ட சுமார் 2587 குடும்பங்கள் உள்ளன. தற்போது உபயோக மட்டத்தில் 574,259 மரங்கள் உள்ளதுடன், இவற்றல் 89,855 மரங்கள் மாத்தரம் பயன்படுத்தப்படுகின்றன.

அதற்கமைய பயன்படுத்தப்படாத சுமார் 84% ஆன கித்துள் மரங்களை பயன்படுத்தி இத்துறையை விருத்தி செய்வதற்கான வாய்ப்புள்ளதுடன், பெறுமதி சேர்க்கப்பட்ட கித்துள் உற்பத்தியை ஊக்குவிப்பதன் மூலம் கித்துள் சார்ந்த ஏற்றுமதி வருமானத்தை கனிசமானளவு வளர்த்துக்கொள்ள முடியும்.

கித்துள் மரங்களின் எண்ணிக்கை மற்றும் கித்துளை தமது வாழ்வாதாரமாக கொண்ட குடும்பங்கள் பற்றிய தகவல்கள்

மாகாணம்	கித்துள் மரங்களின் எண்ணிக்கை				தற்போது பயன்படுத்தும் மரங்களின் எண்ணிக்கை	பாணி, கித்துள் கட்டி உற்பத்திக்கு பயன்படுத்தும் மரங்கள்	கள்ளு பெறுவோர் எண்ணிக்கை	கித்துள் கைத்தொழிலை பிரதான வாழ்வாதாரமாக கொண்ட குடும்பங்கள்
	மரங்களின் எண்ணிக்கை 05 வயதுக்கு குறைந்த	நடுத்தர வயது மரணங்களின் எண்ணிக்கை	விளைச்சல் மட்ட மரங்கள்	மொத்த மரங்களின் எண்ணிக்கை				
சபறகமுவா	372,331	246,924	133,743	752,998	21,667	14,174	6,828	459
மத்திய	336,687	195,991	126,168	658,846	25,930	20,913	8,167	1,159
ஊவா	348,622	183,923	104,035	636,580	13,067	9,583	5,259	432
தெற்கு	187,004	134,765	117,399	439,168	19,918	15,036	7,258	315
மேல்	145,783	88,454	59,462	293,699	7,634	5,719	1,629	210
வடமேல்	80,186	42,054	26,834	149,074	1,563	562	418	12
கிழக்கு	14,615	9,257	3,294	27,166	20	2	5	
வடமத்தி	10,888	5,518	3,324	19,730	56	18	43	
டிமாத்தம்	**1,496,116**	**906,886**	**574,259**	**2,977,261**	**89,855**	**66,007**	**29,607**	**2,587**

மூலம் : சனத்தொகை, புள்ளிவிபரவியல் திணைக்களம் 2009

கித்துல் துறை – வரவு செலவுத்திட்ட பிரேரணை மூலம் ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகளின் கீழான அபிவிருத்தி கருத்திட்டங்களின் முன்னேற்றம்

2021.12.31 ஆம் திகதிக்கு நிதிசார் முன்னேற்றம்

தொடர் இல.	கருத்திட்டம்	2021 நிதிசார் இலக்கு (ரூ.மி.)	2021 .12.31 ஆம் திகதிக்கு திருத்திய வருடாந்த இலக்கு (ரூ.மி.)	நிதிசார் முன்னேற்றம் (ரூ.மி.)	கையிலுள்ள பட்டியல்கள்
01	கித்துல் உற்பத்தி மற்றும் பெறுமதி மேம்பாட்டு கருத்திட்டம் (மீள்கையளித்தல் ரூ.மி. 10.12)	100	90	29.4	44.35

கித்துல் துறை - அபிவிருத்தி கருத்திட்டங்களின் முன்னேற்றம்

2021.12.31 ஆம் திகதிக்கு நிதிசார் முன்னேற்றம்

தொடர் இல.	கருத்திட்டம்	2021 நிதிசார் இலக்கு (ரூ.மி.)	2021 .12.31 ஆம் திகதிக்கு திருத்திய வருடாந்த இலக்கு (ரூ.மி.)	நிதிசார் முன்னேற்றம் (ரூ.மி.)	கையிலுள்ள பட்டியல்கள்
01	கித்துல் அபிவிருத்திக் கருத்திட்டம்	20	20	9.524	0

கித்துல் துறை – வரவு செலவுத்திட்ட பிரேரணை மூலம் ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகளின் கீழான அபிவிருத்தி கருத்திட்டங்களின் முன்னேற்றம்

2021.12.31 ஆம் திகதிக்கு பௌதீக முன்னேற்றம்

கித்துல் உற்பத்தி மற்றும் பெறுமதி மேம்பாட்டுக்கு இந்தக் கருத்திட்டத்தின் கீழ் ஹம்பாந்தோட்டை, பதுளை உள்ளிட்ட 11 மாவட்டங்களின் பிரதேச செயலாளர் பிரிவுகள் 70 இற்கு ரூ.மி. 83.65 ஆன ஏற்பாடுகள் வழங்கப்பட்டன.

- கித்துல் கைத்தொழிலாளர்களை ஊக்குவித்தல்.
- பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தல்.
- கித்துல் பூ வெட்டுவதற்குத் தேவையான உபகரணங்களை வழங்குதல்.
- கித்துல் சார்ந்த உற்பத்திகளை ஊக்குவித்தல்.
- தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை செய்துகொடுத்தல்

கித்துல் துறை – அபிவிருத்திக் கருத்திட்டங்களின் முன்னேற்றம்

2021.12.31 ஆம் திகதிக்கு பௌதீக முன்னேற்றம்

கித்துல் அபிவிருத்திக் கருத்திட்டம் (ரூ.மி. 20)
கித்துல் துறையின் அபிவிருத்திக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள கருத்திட்டத்திற்கு கைத்தொழில், தொழில்நுட்ப நிறுவகத்திற்கு ரூ.மி. 5.5805 ஆன ஏற்பாடுகள் வழங்கப்பட்டுள்ளதுடன், அதன் மூலம் பின்வரும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும்.

- கித்துல் நார்களை பிரித்தெடுத்தல்.
- கித்துல் மா தயார் செய்துகொள்ளல்
- கித்துல் மரத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தும் கிருமிகளை இனங்காணல் மற்றும் மேற்படி பாதிப்பை தடுப்பதற்கு, நோய் பரவுவதை தடுப்பதற்கு மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகளை சமர்ப்பித்தல்.
- கித்துல் உற்பத்திக்கு உரிய தரச் சான்றிதழை பெற்றுக் கொடுக்கும் முறையியலை அறிமுகம் செய்தல்.
- 10 மாவட்டங்களில் கித்துல் நாற்று மேடைகள் 10ஐ தாபித்தல்.
- ஏற்றுமதி அபிவிருத்தி சபைக்கு ரூ.மி. 1 ஆன ஏற்பாடு வழங்கப்பட்டுள்ளதுடன், காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களில் தெரியவு செய்யப்பட்ட கைத்தொழிலாளர்கள் 10 பேருக்கு GMP தரச் சான்றிதழை பெற்றுக் கொள்ளத் தேவையான தொழில்நுட்ப ஆலோசனை மற்றும் உபகரணங்களை பெற்றுக் கொடுத்தல்.

- கித்துல் நார்களை பிரித்தெடுத்தல்.



கித்துல் நாற்று மேடைகளை ஏற்படுத்துவதற்கு விதைகளை பயிரிடல்



கித்துலம் மரம் சம்பந்தமான நோய்கள் பற்றிய பரிசோதனை







கித்துள் துறை – அபிவிருத்திக் கருத்திட்டங்களின் முன்னேற்றம்

- கித்துள் மரத்திற்கு ஏற்படும் நோய்களுக்கு தகுந்த பரிகாரங்களை கண்டுபிடித்தல், கித்துள் கித்துள் நார் பிரித்தல், செயற்கை கள்ளு இனங்காணும் முறையை தயார் செய்தல், கித்துல் மா தயார் செய்துகொள்ளல், 10 கித்துல் நாற்றுமேடைகளை தாபிக்க கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்துடன் இணக்கபாட்டு உடன்படிக்கை 2021.04.30 ஆம் திகதி செய்துகொள்ளப்பட்டது. மேலும், மேற்படி கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம் கருத்திட்டப் பிரேரணை மூலம் கித்துள் நாற்றுமேடைகள் 10 ஐ ஆரம்பிக்க நடவடிக்கை மேற்கொண்டமை.
- கித்துள் கள்ளு தொடர்பில் நிலவும் சட்ட நிலைமையை காலத்திற்கு பொருத்தமானவாறு திருத்தம் செய்ய நிதி அமைச்சுக்கு பிரேரித்த பின்னர் 05/2021 எனும் மதுவரி அறிவித்தல் 2021.01.07 ஆம் திகதி வெளியிடப்பட்டது. அத்துடன் தொழில்நுடப பயிற்சி நிறுவனத்தின் ஒத்தழைப்புடன் இயற்கை மற்றும் செயற்கை கள்ளை (தெங்கு, கித்துள், பனை) பிரித்து இனங்காண்பதற்கு விஞ்ஞான முறையொன்றை தயார் செய்வதற்கும் விஞ்ஞாபன பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

வலல்லாவிட்ட கித்துள் நாற்றுமேடை ஆரம்பம்





இயற்கை மற்றும் செயற்கை கள்ளை (தெங்கு, கித்துள், பனை) பிரித்து இனங்காண்பதற்கு விஞ்ஞான முறையொன்றை தயார் செய்தல்





கித்துள் துறை – அபிவிருத்திக் கருத்திட்டங்களின் முன்னேற்றம்

- வலப்பனை பிரதேச செயலகத்தை மையமாகக் கொண்டு கித்துல் அபிவிருத்தி முன்னோடி கருத்திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன், கித்துள் கைத்தொழிலாளர்களை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் நுவரெலியா மாவட்டத்தில் வலபனை பிரதேச செயலாளர் பிரிவில் பயனாளிகள் 120 பேருக்கு கித்துள் கைத்தொழிலுக்குத் தேவையான உபகரணங்களான பிளாஸ்ரிக் பாஸ்கட் ஒன்று, பாணி காய்ச்சும் தாச்சி, தொப்பி, மழை மேலாடை மற்றும் மின்குமிழ் ஒன்று 2021.01.24 ஆம் திகதி வழங்கிவைக்கப்பட்டது.
- உள்நாட்டு பாரம்பரிய அறிவை மக்கள்மயப்படுத்தும் நோக்கத்துட்ன அரசாங்க மருத்துவ அலுவலர்களின் சங்கம், சுகாதார பரிசோதனை மற்றும் புத்தாக்க சங்கம் மற்றும் தொழில்வல்லுனர்களின் தேசிய முன்னணி ஆகியன இணைந்து 2021.01.16 ஆம் திகதி எமது கித்துள் கல்விமான்களின் கலந்துரையாடலை நடாத்தின.

வலபனையில் நடைபெற்ற முன்னோடிக் கருத்திட்டம்







2.3 பனை துறை

2.3.1 பனை துறை – அறிமுகம்

இலங்கையின் பனை மரங்கள் பற்றிய விபரம் பின்வருமாறு


மாவட்டம்	பனை மரங்களின் எண்ணிக்கை
யாழ்ப்பாணம்	3,500,000
கிளிநொச்சி	3,500,000
மன்னார்	3,000,000
முல்லைத்தீவு	500,000
திருகோணமலை	210,000
மட்டக்களப்பு	200,000
புத்தளம்	120,000
அம்பாறை	40,000
அநுராதபுரம்	40,000
வவுனியா	8,000
ஹம்பாந்தோட்டை	2,000
மொத்தம்	11,120,000

2021 ஆண்டு	
மொத்த பனை மரங்களின் எண்ணிக்கை	11,120,000
பயன்படுத்தும் பனை மரங்களின் எண்ணிக்கை	1,112,000
வெட்டப்பட்ட பனை மரங்களின் எண்ணிக்கை	15,000,000

பனை உற்பத்திக் கைத்தொழிலை மேம்படுத்துவதற்காக உயர் சாத்தியப்பாடு காணப்படுகின்ற கைத்தொழில் ஒன்றாக இனங்காணப்பட்டுள்ளது. புனை சார்ந்த உணவு வகைகளின் உற்பத்தி மற்றும் பிற அலங்காரப் பொருட்களின் உற்பத்திக்காக உள்ளூர் மற்றும் வெளிநாட்டு ரீதியில் உயர் கேள்வி நிலவுகின்றது.பிரதானமாக இலங்கை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை மையமாகக் கொண்டு பனை தாவரம் விஸ்தரிக்கப்பட்டுள்ளதுடன், பனை சார்ந்த கைத்தொழில்களை தமது வாழ்வாதாரமாகக் கொண்ட மக்கள் இப்பிரதேசங்களில் அதிகம் காணக்கூடியதாக உள்ளது.

ஆரசாங்கத்தின் கொள்கைச் சட்டகத்திற்கு ஏற்ப, உள்நாட்டு உற்பத்திகளின் மேம்பாட்டின் ஊடாக மக்களை மையமாகக் கொண்ட பொருளாதாரம் ஒன்றினை உருவாக்கும் போது கிராமியப் பொருளாதாரத்திற்கு வலுவூட்டும் நோக்குடன், பனைத் துறையினை அபிவிருத்தி செய்வது தொடர்பாக செயற்படுவதற்கு 2020.09.25 ஆம் திகதிய இலக்கம் 2194/74 உடைய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் கீழான இராஜாங்க அமைச்சு ஒன்றாக தென்னை, கித்துல் மற்றும் பனை பயிர்ச் செய்கை மேம்பாட்டுடன் தொடர்புடைய கைத்தொழில் பொருட்களின் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி பல்வகைமை இராஜாங்க அமைச்சு நிறுவப்பட்டுள்ளது. இந்த அமைச்சினால் பனைப் பயிர் சார்ந்த பொருளாதார சாத்தியப்பாடுகளை இனங்கண்டு அதனை விஸ்தரிப்பது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

பனை மரங்களின் பயன்கள் விரிவாக..



2.3.2 பனை துறைசார் அபிவிருத்திக்கான எதிர்கால நோக்கு

பனை துறைசார் அபிவிருத்திக்கான உபாயமுறையிலான சட்டகம் 2021-2025

உபாயமுறையிலான சட்டகம் 2021-2025

- **பனை செய்கையை மறுசீரமைத்தல் மற்றும் அபிவிருத்தி மற்றும் முறையற்ற விதத்தில் மரம் வெட்டுவதை கட்டுப்படுத்தல்**
- **மாதிரி பண்ணைகளை புனரமைப்புச் செய்தல் மற்றும் தாபித்தல்**
- **தொழில்நுட்பத்தை பரிமாற்றிக் கொள்ளும் நிகழ்ச்சித்திட்டம் (கைப்பணி, பனைசாறு, கல்லு, தும்பு, பலகை போன்றன)**
- **பனை உற்பத்தியில் தங்கிவாழ்வோரின் உழைப்பு மற்றும் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தல்**
- **பனையை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகளின் தரத்தை மேம்படுத்தல்.**
- **பனை உற்பத்தியாளர்கள் மற்றும் நுகர்வோருக்கு வாயப்புகள் மற்றும் சேவைகளை மேம்படுத்தல்**
- **பனை அடிப்படையிலான உற்பத்திகளின் சந்தைப்படுத்தல் தரத்தை மேம்படுத்தல்,**
- **ஆராய்ச்சி, தரக்கட்டுப்பாடு அபிவிருத்தி மூலம் இயற்கை வளமாக பனை மரங்களை நல்ல முறையில் பயன்படுத்தல்**
- **பனை கைத்தொழில் சார்ந்த உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல் மற்றும் சொத்துக்களின் பெறுகையும், பராமரிப்பும்**
- **பனை கைத்தொழிலின் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு மனித வளங்களை அபிவிருத்தி செய்தல்**

பனைத்துறையின் அபிவிருத்திக்கான ஐந்து வருட உபாயமுறையிலான திட்டத்தின் கீழ் பனை பயிர் செய்கையை மீளத் தாபித்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல், பனை மரம் வெட்டுவதை கட்டுப்படுத்த எதிர்பார்க்கப்படுகின்றது. பனை மரத்தை அடிப்படையாகக் கொண்ட தொழில்களில் நிலைபேறான அபவிருத்திக்கு புதிய பனை பயிர் செய்கையை மேற்கொள்ளல், பனை சார்ந்த உற்பத்திகளை அடிப்படையாகக் கொண்ட தொழில்கள் மற்றும் தொழில்முயற்சியாளர்கள் ஊடாக புதிய மாதிரி விவசாய நிலங்களை தாபித்தல், சட்டவிரோதமாக பனை மரம் வெட்டுவதை தடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

தொழில்நுட்பத்தை பரிமாற்றிக் கொள்ளும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பனை சார்ந்த கைப்பணி கைத்தொழில்கள் பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தல், பயிற்றுவிப்பாளர்களை பயிற்றுவித்தல், பனை சாறு, பனை பலகை அடிப்படையிலான உற்பத்திகள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன. இதற்காக அடுத்த ஆண்டில் ஏற்பாடுகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

மேலும், பனை உற்பத்திக் கைத்தொழிலில் தங்கிவாழ்வோரின் உழைப்பு மற்றும் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தல், பனை உற்பத்திகளின் தரத்தை மேம்படுத்தல், உற்பத்தி நிலையங்களை மேம்படுத்தல், கைத்தொழில் மட்ட உற்பத்திகளை மேம்படுத்தல், தரத்தை மேம்படுத்த எதிர்பார்க்கப்படுகின்றது.

பனை உற்பத்தியாளர்களுக்கு சந்தைப்படுத்தல் வாய்ப்புக்கள் மற்றும் நுகர்வோருக்கு தரமான உற்பத்திகளை கொள்வனவு செய்யும் வாய்ப்பு ஆகிய உபாயமுறைகளின் கீழ் உற்பத்தியாளர்களின் மற்றும் சந்தைப்படுத்தலின் தரத்தை மேம்படுத்தல், சந்தைப்படுத்துதல் சேவையின் புதிய முறையியல்களை அறிமுகம் செய்தல், உள்நாட்டு, வெளிநாட்டு சந்தைப்படுத்தல் வாய்ப்புக்களை விஸ்தரித்தல் போன்ற நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது.

மேலும், ஆராய்ச்சி மற்றும் தரக்கட்டுப்பாட்டு அபிவிருத்தி மூலம் பனை துறையை வலுவூட்டுவதற்காக ஆய்வுகூட சேவைகளை மேம்படுத்த ஆய்வுகூட வசதிகளை மேம்படுத்தல், தரக்கட்டுப்பாடு மற்றும் தரத்தை சான்றுப்படுத்துவதன் மூலம் பனை சார்ந்த கைத்தொழில்களை அபிவிருத்தி செய்ய எதிர்பார்க்கப்படுகின்றது.

உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல், சொத்துக்களை பராமரிப்புச் செய்தல், நல்ல பெறுகை செயன்முறை ஊடாக பனைத் துறையில் அபிவிருத்தி எதிர்பார்ப்பதுடன், அதன் கீழ் உட்கட்டமைப்பு வசதிகளை இனங்காணல் மற்றும் அபிவிருத்தி செய்தல், சொத்துக்களை மீளத் தாபித்தல், பராமரித்தல், பதவியணித் தேவைகள் மற்றும் பயிற்சித் தேவைகளை இனங்காணல், வழங்குதல் போன்ற நிகழ்ச்சித்திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

பனை துறை 2021 - இலக்கு

பனை துறையின் அபிவிருத்திக்கு 2021 ஆம் ஆண்டு பின்வரும் கருத்திட்டங்களை மேற்கொள்ளவென ரூ.மி. 200 அமைச்சுக்கும் ரூ.மி. 40 பனை அபிவிருத்தி சபைக்கும் ஒதுக்கப்பட்டது.

	அமுல்படுத்தும் கருத்திட்டம்	2021 இன் ஏற்பாடு (ரூ.மி.)	கருத்திட்டத்தின் நோக்கம்	உத்தேச பெறுபேறு/ இலக்கு	அமுல்படுத்தும் நிறுவனம்
வரவு செலவுத்திட்ட பிரேரணை மூலம் ஒதுக்கப்பட்ட ஏற்பாடு					
1	உள்நாட்டு பனை உற்பத்தியை பல்வகைப்படுத்தல்.	200.00	உள்நாட்டு பனை கைத்தொழிலை அபிவிருத்தி செய்தல் மற்றும் நிலைபேறான தன்மையை உறுதி செய்து பன்முகப்படுத்தல் மூலம் பனை கைத்தொழிலை மேம்படுத்தல்	• மாதிரி விவசாய பண்ணைகளை தாபிப்பதன் மூலம் புதிய பனை பயிர்செய்கைகளை அபிவிருத்தி செய்தல் • ஓலைகளை அடிப்படையாகக் கொண்ட கைப்பணிக் கைத்தொழில் உற்பத்திக்கு மற்றும் பனங் கள்ளு உற்பத்திக்கான திறமை மற்றும் விளைதிறனை மேம்படுத்துவதற்கான ஆரம்ப பயிற்சிகளை வழங்குதல் மற்றும் உபகரணங்களைப் பெற்றுக் கொடுத்தல் • தொழில்நுட்ப உபகரணம் வழங்குதல் மற்றும் சங்கங்களுக்கு உதவுதல், தற்போதுள்ள இயந்திரசாதனங்களை மீளத் தாபித்தல் மற்றும் உற்பத்தி நிலையங்கள், களஞ்சியசாலைகளை நிர்மாணித்தல் • ஆராய்ச்சி, அபிவிருத்தி, சர்வதேச ஒத்துழைப்பு மூலம் பதவியணிக்கு பயிற்சியளித்தல், பனை சார்ந்த ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல், அறிவை பகிர்ந்தளித்தல். • பனை பயிற்சி நிறுவகத்தை தாபிப்பதை பூரணப்படுத்தல். • புதிய கற்பகம் நிலையங்களை தாபித்தல், உதிரி பாகங்களை கொள்வனவு செய்தல், விற்பனை மேம்படுத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளல், சந்தைப்படுத்தல் பதவியணியின் கொள்ளளவை மேம்படுத்தும் பயிற்சிகள் மற்றும் சகல மாவட்டங்களையும் உள்ளடக்கும் வகையில் கண்காட்சிகள் மற்றும் நடமாடும் விற்பனைகளை மேற்கொள்ளல்.	பனை அபிவிருத்தி சபை

இல	அமுல்படுத்தும் கருத்திட்டம்	2021 இன் ஏற்பாடு (ரூ.மி.)	கருத்திட்டத்தின் நோக்கம்	உத்தேச பெறுபேறு/ இலக்கு	அமுல்படுத்தும் நிறுவனம்
விசேட அபிவிருத்தி கருத்திட்டங்கள்					
1	கள்ளு போத்தலில் அடைத்தல், கருப்பட்டி உற்பத்தி	5.00	உள்நாட்டு கள்ளு, கருப்பட்டி கைத்தொழிலை அபிவிருத்தி செய்தல்	• பயனாளிகள் 40 பேருக்கு தயாரிப்பு உபகரணம் மற்றும் இயந்திர சாதனங்களை கொள்வனவு செய்தல். • பயனாளிகள் 140 பேருக்கு பனங்கட்டி தயார் செய்வதற்கான உபகரணம் மற்றும் இயந்திர சாதனங்கள் கொள்வனவு	பனை அபிவிருத்தி சபை

2021 பனைத் துறையின் உற்பத்திகளுக்கான இலக்குகள் விரிவாக..

தொ. இல.	விபரம்	2021	இலக்கு 2022
01	பனங்கட்டி (MT)	55	70
02	பனங்கள்ளு (LT)	10,050,000	10,500,000
03	பல்ப் (MT)	50	60
04	பனங் கிழங்கு (MT)	350	400
05	பனை நார் (MT)	67	75
06	கைப்பணி (LKR Mn)	50	55

2.3.3 பனை துறையை அபிவிருத்தி செய்வதிலுள்ள சவால்கள்

பனை பயிர்செய்கை சம்பந்தமான சிக்கல்கள்

- உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திக்கு பனை மரங்கள் பரவலாக வெட்டப்படுவதனால் தற்போதுள்ள மரங்களின் எண்ணிக்கை குறைவடைதல்.
- பனை சார்ந்த உற்பத்திகளை மேற்கொள்ளத் தேவையான பனை மூலப் பொருட்களை பெற்றுக் கொள்ளும் ஆற்றல் ஆண்டில் ஒரு காலப்பகுதிக்கு (பருவம்) மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டதாக உள்ளமை.

பனை பயிர்செய்கையாளர்களுக்குள்ள சிக்கல்கள்

- சம்பிரதாயபூர்வமான பனை சார்ந்த கைத்தொழிலில் ஈடுபடுவது சமூகத்தில் மட்டுப்படுத்தப்பட்டதொரு சமூகக் குழுவொன்று மாத்திரமாக இருப்பதனால் கைத்தொழில்சார்ந்த தொழில்வாய்ப்புக்கள் உருவாக்கம் மட்டுப்படுத்தப்பட்டதாக உள்ளமை.
- இத்துறையில் ஈடுபடுவது தொடர்பில் சமூகத்தில் காணப்படுகின்ற பாதமமான மனப்பாங்கு காரணமாக இக்கைத்தொழிலில் ஈடுபடுவோரின் எண்ணிக்கை துரிதமாக குறைவடைதல்.

பனை சார்ந்த கைத்தொழில் சம்பந்தமான சிக்கல்கள்

- பனை கைத்தொழிலில் ஈடுபடும் கைப்பணிக் கலைஞர்களின் எண்ணிக்கை குறைந்த மட்டத்தில் காணப்படுதல்.
- பனை கைத்தொழில் சார்ந்த பயிற்றப்பட்ட தொழில்நுட்ப அலுவலர்கள் மற்றும் தொழில்நுட்ப அறிவு குறைவாக உள்ளமை.
- பனை கைத்தொழில் சார்ந்த புதிய தொழில்நுட்ப அறிவைப் பயன்படுத்துவது குறைந்த மட்டத்தில் காணப்படுதல்.

பனை சந்தை சம்பந்தமான சிக்கல்கள்

- செயற்கை உணவுக்கு சந்தையில் கூடுதல் வாய்ப்பு ஒதுக்கப்படுவதனால் பனை அடிப்படையிலான இயற்கை உணவுகளுக்கு சந்தையில் காணப்படும் வாய்ப்புக் குறைந்த மட்டத்தில் உள்ளமை.
- சந்தையில் நிலவும் அதிக போட்டித்தன்மை காரணமாக பனை சார்ந்த கைத்தொழில்களில் ஈடுபடும் கைத்தொழிலாளர்கள் ஊழியச் சுரண்டலுக்கு ஆளாதல்.

பனை உற்பத்திகளுக்கு பெறுமதி சேர்த்து உற்பத்திகளை அபிவிருத்தி செய்தல்

பனங்கல்லு சார்ந்த உற்பத்திகள் :
இனிப்பு பண்டம் உற்பத்திகள் : பனங்கட்டி, பனங்கல்லு, பனை சக்கரை,
மதுபானம் : சாராயம், போத்தல் கல்லு
வேறு உற்பத்திகள் : வினாக்கிரி

பனஞ்சாறு மூலமான உற்பத்திகள்
போத்தலில் அடைக்கப்பட்ட பனை சாறு, பினாட்டு, ஜாம், கோடியல், குடிபானம், பனை ஐஸ்கிறிம், யோகட், பற்பசை, முகத்தில் பூசுபவை, சவர்க்காரம், சொக்லட்

பனங்கிழங்கு மூலமான உற்பத்திகள்
பனங்கிழங்கு (பச்சை) உலர்த்திய கிழங்கு மா, அவித்த கிழங்கு, பிஸ்கட், கேக், கூழ் கலவை, பனை மா சுப்

பனை ஓலை மூலமான உற்பத்திகள்
பாரம்பரிய கைப்பணிக் கைத்தொழில், கூடை உற்பத்தி, கதிரை, மரமுந்திரிகை, தேயிலை, பலசரக்கு பொதிகள், தொப்பி, பாய், பற்குச்சி, ஸ்கி குச்சி, மலர்சாடி, அழகிய பொருட்கள், சுவர் அழங்காரப் பொருட்கள் போன்ற உற்பத்திகள்

பனை தும்பு மூலமான உற்பத்திகள்
வன் தும்பு – பல்தேவை பிரஸ்
நடுத்தர தும்பு – சுத்தம் செய்தல், வீட்டு பிரஸ்
மென்மையான தும்பு – கைப்பணி வேலைகளுக்கு
தும்பு – மரம் நடுகை, நீர்ப் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு

பனை பலகை மூலமான உற்பத்திகள்
கூரை வேயும் பலகை, தளபாடம் உற்த்தி, சிப் போட், விறகு, அருங்கலைப் பொருட்கள்

4.4 பனைத்துறைசார் ஒட்டுமொத்த முன்னேற்றம்

விபரம்			வருடாந்த முன்னேற்றம்		
			2019	2020	2021
பனை சார்ந்த உற்பத்தி கைத்தொழிலாளர்கள் எண்ணிக்கை	பனங்கல்லு சார்ந்த உற்பத்தி	உற்பத்தியாளர்	8,800	8,800	9,000
		கைத்தொழிலாளர்	54	56	60
	இலை மூலமான உற்பத்தி (கைப்பணி)	உற்பத்தியாளர்	2,315	3,351	3,661
		குழுக்கள்	40	40	40
	கிழங்கு மூலமான உற்பத்தி	உற்பத்தியாளர்	5,000	5,620	6,950
		குழுக்கள்	54	59	69
	சாறு மூலமான உற்பத்தி	உற்பத்தியாளர்	500	550	620
		குழுக்கள்	40	45	52
	தும்பு மூலமான உற்பத்தி		4	5	6
	உணவு உற்பத்தி (குடிபானம், இனிப்பு பண்டம்)		20	30	33
உள்நாட்டு வருமானம் (ரூ.மி.)	பனங்கல்லு சார்ந்த உற்பத்தி		1,400	1,700	1,780
	இலை மூலமான உற்பத்தி (கைப்பணி)		61.3	47.29	48.20
	கிழங்கு மூலமான உற்பத்தி		54.0	56	60
	சாறு மூலமான உற்பத்தி		5.0	4.5	5.0
	தும்பு மூலமான உற்பத்தி		58.0	36	36
	உணவு உற்பத்தி (குடிபானம், இனிப்பு பண்டம்)		17.72	8.50	9.28
ஏற்றுமதி வருமானம் (ரூ.மி.)	பனங்கல்லு சார்ந்த உற்பத்தி		56	37	40
	இலை மூலமான உற்பத்தி (கைப்பணி)		48.60	–	51
	கிழங்கு மூலமான உற்பத்தி		20	17	2,734.4
	சாறு மூலமான உற்பத்தி		5.00	4.00	5.39
	தும்பு மூலமான உற்பத்தி		தரவுகள் இல்லை		2,090.10
	உணவு உற்பத்தி (குடிபானம், இனிப்பு பண்டம்)		2.0	1	2.5

2.3.5. பனை அபிவிருத்தி சபை

பனை அபிவிருத்தி சபையான பனை பயிர் செய்கை தொடர்பிலான பணிகளை நிறைவேற்றுவதற்காக 1971 இன் 46 ஆம் இலக்க இலங்கை தென்னை அபிவிருத்தி சட்டம் 1975 இன் 24 ஆம் இலக்க சட்டம் மூலம் செய்யப்பட்ட திருத்தத்திற்கு அமைய 1978 ஆகஸ்ட் 18 ஆம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் மூலம் தாபிக்கப்பட்டது.

அதன் மூலம்,

- பனை பயிர்செய்கையை சீரான நிலைக்கு கொண்டுவருதல்.
- தற்போதுள்ள மாதிரி விவசாய இடங்களை நவீனமயப்படுத்தல், மேம்படுத்தல்
- கைப்பணிக் கைத்தொழில் பயிற்சி நிகிழ்ச்சித்திட்டங்களை வழிப்படுத்தல்
- பல்வேறு பனை பொருட்களின் உற்பத்தி, பனை உற்பத்திகளை மேம்படுத்தல்
- உணவு உற்பத்தி மற்றும் வேறு உற்பத்திகளின் அபிவிருத்தி சார்ந்த ஆராய்ச்சிகளை நடாத்தல்.
- கற்பகம் நிலையங்களை பேணிவருதல்
- உட்பட பனை சார்ந்த அபிவிருத்திக்கான நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளன.

நோக்கு

வாழ்வாதார அபிவிருத்திக்கு பலம்மிக்க துறையாக பனைத் துறையை அபிவிருத்தி செய்தல்

செயற்பணி

"நாட்டின் மொத்தத் தேசிய உற்பத்திக்கு விசேட பங்களிப்பு செய்பவராகும் பொருட்டு பனை கைத்தொழிலை அபிவிருத்தி செய்தல், பிரபல்யப்படுத்தல் மற்றும் ஒழுங்குறுத்தல்"

பனை கைத்தொழிலில் தங்கிவாழும் பல்லாயிரக்கணக்கானோரின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு பனை சார்ந்த ஆராய்ச்சி செயற்பாடுகளுக்கு வசதிகளை செய்துகோடுக்க பனை அபிவிருத்தி சபையின் கீழ் பனை ஆராய்ச்சி நிறுவனம் தாபிக்கப்பட்டுள்ளது. இந்த நிறுவனம் நான்கு ஆய்வுகூடங்களை கொண்டுள்ளது.

- பகுப்பாய்வு ஆய்வுகூடம் - உற்பத்திகளின் தரத்தை மேம்படுத்தல் மற்றும் பனை சார்ந்த உணவு உற்பத்தி பற்றிய பேசாக்கு கூறு பற்றி விழிப்புணர்வூட்டல்.
- உணவு, தொழில்நுட்ப ஆய்வுகூடம் - இலங்கை தரக் கட்டளைச் சட்டத்துக்கு அமைய பனை சார்ந்த சுவையான உணவுகளை முறையாக போசாக்குமிக்க உற்பத்திகளை செய்வதை நோக்காகக் கொண்ட ஆராய்ச்சி பணிகளை நிறைவேற்றல்.
- நுண்ணியல் ஆய்வுகூடம் - பனை சாறு உற்பத்தியின் ஒளடத முக்கியத்துவத்தை உறுதி செய்தல் மற்றும் உற்பத்தியில் நுண்ணுயிர் சார்ந்த தாக்கங்கள் மூலம் உற்பத்திகளை மேம்படுத்தல்
- அதிதொழில்நுட்ப ஆய்வுகூடம் - உயர் உண்மையான திரவ துருவப்படுத்தப்பட்ட காந்தம் போன்ற அதிதொழில்நுட்ப ஆய்வுகூட உபகரணங்களின் உதவியைக் கொண்ட உணவுகளின் இயக்க அளவுகளை இனங்காண செயற்படுகின்றது.ஆதமாத்திரமன்றி இந்நிறுவனம், ஆராய்ச்சி மற்றும் பரிமாற்றிக் கொள்ளும் நடவடிக்கைகள், ஆய்வுகூட சேவைகளை வழங்குதல், ஆராய்ச்சிக் கண்டுபிடிப்புக்களை வெளியிடுதல், பகிர்ந்தளித்தல் போன்ற பல செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது. ஆய்வுகூடம் வழங்கும் பரிசோதனை அறிக்கைகளை சர்வதேச ரீதியில் செல்லுபடியாகும் வகையில் நிறுவனம் ஐஎஸ்ஓ தரச்சான்றிதழை பெற்றுக் கொள்ள இறுதி கட்ட பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பனை அபிவிருத்தி சபையின் குறிக்கோள் மற்றும் நோக்கங்கள்

•பனை சார்ந்த அபிவிருத்தி மற்றம் சமுதாயத்தை மேம்படுத்துவதற்காக நல்லதொரு நிறுவனம்சார் அடிப்படையை பெற்றுக் கொடுத்தல்.

•இலங்கையின் பனை சார்ந்த கைத்தொழிலின் நுண்தொழில்முயற்சிகள், இடைக் கைத்தொழில் மற்றும் அதிதொழில்நுட்ப கைத்தொழில் மட்டங்களின் நிலைபேறான அபிவிருத்திக்கு நல்ல விஞ்ஞான ரீதியான அடிப்படையை ஏற்படுத்தல்.

•அதிதொழில்நுட்ப அபிவிருத்திக்கு வழிசெய்து, அடிப்படை உபாயமுறைசார் மற்றும் நடைமுறைசார் ஆராய்ச்சி ஊடாக பனை பவளங்களை பொருத்தமான பயிர் பேணல், வகைப்படுத்தல் மற்றும் உற்பத்தி அபிவிருத்தி தொழில்நுட்ப அபிவிருத்தி

•கூட்டு அபிவிருத்தி முயற்சிகளை பெற்றுக் கொடுப்பதற்காக வளர்ச்சியடைந்த பனை சார்ந்த பயிர் மற்றும் கால்நடைவள உற்பத்திக் கட்டமைப்பு மற்றும் முறையியல் அபிவிருத்தி

•பனை அபிவிருத்தி சபையினால் அபிவிருத்தி செய்யப்பட்டட, தங்கிவாழ்வோர் மற்றும் கைத்தொழிலாளர்களுக்கு உகந்த தொழில்நுட்பவியல்களை விளைதிறன்மிக்கவாறு பெற்றுக் கொடுத்தல்.

•பனை மரபணு வளங்களுக்கு தேசிய பேணல் நிலையமொன்றாக சேவை ஆற்றுதல் மற்றும் விருத்தி செய்த பயிர்செய்கை பொருட்களை உற்பத்தி செய்தல்

•நடைமுறைக்குப் பொருத்தமான பிரபலமான வகைகளுடன் பனை பற்றிய தொழில்நுட்ப தகவல்களை சேகரித்தல் மற்றும் பிரபல்யப்படுத்தல்

•உற்பத்திக் கட்டமைப்பு முகாமைத்துவம் பற்றி பல்வேறு மாற்றுத் தெரிவுகளை உருவாக்கக்கூடியவாறு பனை சார்ந்த நிறுவன அபிவிருத்தி மற்றும் உதவிகளை சிறந்த மட்டத்திற்குக் கொண்டுவருதல்.

பனை அபிவிருத்தி சபையினால் அமுல்படுத்தப்பட்ட கருத்திட்டங்களின் நிதிசார் மற்றும் பௌதீக முன்னேற்றம் (2021.01.01 முதல் 2021.12.31 வரை)

1: பனை வள அபிவிருத்தி

நிகழ்ச்சித்திட்டம்	அலகு	பௌதீக இலக்கு	பௌதீக முன்னேற்றம்	நிதிசார் இலக்கு	நிதிசார் முன்னேற்றம் (ரூ.மி.)
பனை மீள் பயிரிடல் மற்றும் அபிவிருத்தி		பயிரிட வேண்டிய விதை எண்ணிக்கை	விதை 500,000	80%	1.95
காணப்படுகின்ற மாதிரி விவசாய பண்ணைகள்		காணப்படுகின்ற மாதிரி	மாதிரி விவசாய பண்ணைகள் -04	80%	
மொத்தம்					1.95

பனை மரக் கைத்தொழிலை ஒழுங்குபடுத்தவதற்கான ஒரே அரச அமைப்பான பனை அபிவிருத்தி சபை பனை பயிர்செய்கையை விஸ்தரித்தல் மற்றும் தற்போதுள்ள மரங்களைப் பாதுகாப்பது தொடர்பில் முழுக் கவனத்தையும் செலுத்தியுள்ளது. இதற்காக 2020 செப்தெம்பர் முதல் டிசம்பர் வரையான காலப்பகுதிக்குள் வருடாந்த பயிர்செய்கை நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சித்திட்டத்தை வெற்றிகரமாக்கிக் கொள்வதற்காக பிரதேச செயலகம், பனை அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்கள், சமூர்த்தி மற்றும் சமுதாய அடிப்படையிலான அமைப்புக்கள் பனை அபிவிருத்தி சபையுடன் ஒத்துழைப்புடன் செயற்பட்டன.

இதற்கு மேலதிகமாக சட்டவிரோதமாக பனை மரம் வெட்டுவதை கட்டுப்படுத்துவதற்காக அறிவுறுத்தும் நிகழ்ச்சித்திட்டங்களும் வருடாந்தம் ஒழுங்கு செய்யப்பட்டன. சட்டவிரோதமாக மரம் வெட்டுவதை கட்டுப்படுத்துவதற்காக வெளிக்கள பதவியணி பிரதேச மற்றும் மாவட்ட மட்டத்தில் செயற்பட்டு வருகின்றது.

2. தொழில்நுட்ப பரிமாற்றல் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்

நிகழ்ச்சித்திட்டம்	அலகு	பௌதீக இலக்கு	பௌதீக முன்னேற்றம்	2021.12.31 இற்கு நிதிசார் முன்னேற்றம் (ரூ.மி.)
சுயதொழில்வாய்ப்புக்கு பனை சார்ந்த கைப்பணி கைத்தொழிலை பயிற்றுவித்தல்	பயிற்றப்பட்டோர்	325	3.00	1.18
பனை கைத்தொழிலின் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு பயிற்றுவிப்பாளர்களை பயிற்றுவிப்பதன் மூலம் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்	பயிற்றப்பட்ட பயிற்றுவிப்பாளர்கள்	46	0.10	
பலகை சார்ந்த வழங்கள் உற்பத்தியை மேம்படுத்தல்	பயிற்றப்பட்டோர்	75	0.15	
பனை சார்ந்த உணவு உற்பத்திக்கான பயிற்சி	பயிற்றப்பட்டோர் 46	50	0.15	
பனை சாறு உணவு உற்பத்தி பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்	பயிற்றப்பட்டோர்	150	2.45	
மொத்தம்			5.80	1.18

பனை அபிவிருத்தி சபை தொழில்நுட்ப பரிமாற்றல் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தில் பங்கேட்கின்றது. பனை இலை கைப்பணிக் கைத்தொழில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்படுவது பனை அபிவிருத்தி சபையின் கைப்பணிக் கைத்தொழில் போதனாசிரியர்களினாலாகும். நியம கைப்பணிக் கைத்தொழில் பயிற்சி 6 மாத காலப்பகுதிக்கு நடாத்தப்படுகின்றது. எனினும் கைப்பணிக் கைத்தொழில் உற்பத்தியாளர்களுக்கு புதிய ஆக்கங்கள் மற்றும் திறமைகளை அறிமுகம் செய்வதற்காக கைப்பணிக் கைத்தொழில் உற்பத்தியாளர்களுக்கு 3 மாத கால விசேட பயிற்சியும் நடாத்தப்படுகின்றது. பயிற்சியை வெற்றிகரமாக நிறைவு செய்த பின்னர் பயிற்சி பெற்றவர்கள், உற்பத்திக் குழுக்களாக ஒழுங்குசெய்யப்படுவார்கள்.

உற்பத்திக் குழுக்களுக்குத் தேவையான புதிய மற்றும் தரத்தை மேம்படுத்தும் பயிற்சிகள் மூலம் உற்பத்திக் குழுக்களுக்கு உதவியும் ஊக்கவும் கிடைக்கும், அவர்களின் தரமான உற்பத்திகள் பனை அபிவிருத்தி சபையினால் கற்பகம் நிலையங்கள் ஊடாக விற்பனை செய்வதற்குக் கொள்வனவு செய்யப்படும்.

உற்பத்திகள் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவின் உதவியுடன் கருப்பட்டி, சாறு பேணல் மற்றும் பலகை அடிப்படையிலான உற்பத்திகளை உற்பத்தி செய்வதற்கான பயிற்சியும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. பனை அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களின் கோரிக்கையின் அடிப்படையில் கல்லு காய்ச்சுவோருக்கும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் ஒருங்கு செய்யப்படுகின்றன.

3. பனை சார்ந்த உற்பத்திகளை மேம்படுத்தல்

நிகழ்ச்சித்திட்டம்	அலகு	பௌதீக இலக்கு	பௌதீக முன்னேற்றம்	2021.12.31 ஆம் திகதிக்கு நிதிசார் முன்னேற்றம்
பனை சார்ந்த உற்பத்திகள் ஊடாக பனைக் கைத்தொழிலில் தங்கிவாழ்வோரின் உழைப்பு மற்றும் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தல்	நவீனமயப்படுத்திய உற்பத்தி நிலையங்களின் எண்ணிக்கை	06	90%	
பனை அடிப்படையிலான உற்பத்திகளின் உற்பத்தி தரத்தை மேம்படுத்தல்	பதவியணிக்கு பதயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்	06	70%	8.06
பனை அடிப்படையிலான உற்பத்திகளின் தரத்தை மேம்படுத்தல்	தரப்படுத்தப்பட வேண்டிய உற்பத்தி நிலையங்களின் எண்ணிக்கை	03	60%	
மொத்தம்				8.06

பனை அபிவிருத்தி சபையினால் உணவு மற்றும் உணவு அல்லாத பல்வேறு பனை சார்ந்த உற்பத்திகள் மேற்கொள்ளப்படுகின்றன. பனை மரத்தை அடிப்படையாகக் கொண்ட உற்பத்தி நடவடிக்கைகள் மக்கள் மத்தியில் பிரபல்யம் அடைந்துள்ளதுடன், பல சிறு கைத்தொழில்களும் உருவாகியுள்ளன. பனை அபிவிருத்தி சபை உற்பத்தி நிலையத்தினால் இப்பிரிவு தொடர்பில் ஊக்கம் கொண்டுள்ள மக்களுக்கு முன்மாதிரியான மற்றும் தமது உற்பத்திகளை காட்சிப்படுத்தக்கூடிய உற்பத்தி நிலையமாக செயற்படுகின்றது. புதிய இயந்திரசாதனங்கள் மற்றும் கருவிகள அறிமுகம் செய்ததன் காரணமாக வீடுகள் சார்ந்த மட்டத்திலான உணவு உற்பத்திச் செயன்முறை சிறு கைத்தொழில் மட்டம் வரை மாற்றமடைந்துள்ளது. இதன் மூலம் சுகாதார ரீதியிலான உணவு உற்பத்திக்கு வழி உருவாகும்.

4. கற்பகம் ஊடாக சந்தைப்படுத்தல் வலையமைப்பை மேம்படுத்தல்

நிகழ்ச்சித்திட்டம்	அலகு	பௌதீக இலக்கு	பௌதீக முன்னேற்றம்	2021.12.31 ஆம் திகதிக்கு நிதிசார் முன்னேற்றம்
கற்பகம் ஊடாக சந்தைப்படுத்தல் தேறிய நடவடிக்கைகளை மேம்படுத்தல்	கற்பகம் விற்பனை நிலையங்களின் எண்ணிக்கை	10	80%	
விளம்பர நிகழ்ச்சித்திட்டங்கள்	ஏற்றுமதியாளர்களின் கூட்டங்கள், கண்காட்சி, நடமாடும் விற்பனை மற்றும் சந்தைகளின் எண்ணிக்கை		80%	5.98
மொத்தம்				5.98

பனை அபிவிருத்தி சபை தமது உற்பத்திகளை சந்தைப்படுத்துவது மாத்திரமன்றி, உற்பத்தியாளர்களின் பொருட்களை கொள்வனவு செய்து அதனை கற்பகம் எனப் பெயரிட்டுள்ள 13 விற்பனை நிலையங்கள் ஊடாக யாழ்ப்பாணம், கொழும்பு, திருகோணமலை, மட்டக்களப்பு, கல்முனை, வவுனியா, ஹம்பாந்தோட்டை மற்றும் மன்னார் ஆகிய நகரங்களில் இயங்கிவருகின்ற கற்பகம் விற்பனை நிலையங்களில் விற்பனை செய்கின்றது. இதன் மூலம் பனை மரம் உற்பத்தியாளர்கள் பல்லாயிரக்கணக்கானோர் வருடாந்தம் தமது உற்பத்திகளை விற்பனை செய்யும் வாய்ப்புக் கிடைக்கின்றது. பழச்சாறு, பனங்கட்டி, பாணி மற்றும் கோடியல் ஏற்றுமதியை அதிகரிப்பதன் ஊடாக இந்நாட்டு ஏற்றுமதி வருமானம் அதிகரிக்கும். பனை மர உற்பத்திகளின் விற்பனையை அதிகரிப்பதற்காக நீர்கொழும்பு, கொழும்பு மற்றும் கூட்டுறவு விற்பனை நிலையங்களில் புதிய காட்சியறைகள் தாபிக்கப்பட்டுள்ளன.

5. ஆராய்ச்சி மற்றும் தரக்கட்டுப்பாடு (பனை ஆராய்ச்சி நிறுவகம்)

நிகழ்ச்சித்திட்டம்	அலகு	பௌதீக இலக்கு	2021 ஏற்பாடு	பௌதீக முன்னேற்றம்	2021.12.31 ஆம் திகதிக்கு நிதிசார் முன்னேற்றம்
கைத்தொழிலுக்கு தரமான மற்றும் இற்றைப்படுத்திய ஆய்வுகூட சேவைகளை வழங்குவதற்காக ஆய்வுகூட வசதிகளை மேம்படுத்தல் (உதா. ஆய்வுகூட உபகரணம், கண்ணாடிப் பொருட்கள், சேவைகள், ஏனைய அம்சங்கள்)	உணவுக் கைத்தொழிலுக்கு வழங்கியுள்ள ஒட்டுமொத்த பரிசோதனை அறிக்கைகளின் எண்ணிக்கை	05	1.50	85%	4.94
பெறுமதி சேர்த்தல் பற்றிய ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தல் புதிய உற்பத்தி அபிவிருத்தி	ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை	08	1.00	100%	
ஆராய்ச்சிக் கருத்திட்டம் (செயலமர்வு, பயிற்சி மற்றும் வெளிச் செயற்பாடுகள்)	நடாத்திய நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை	10	0.90	80%	
வெளியீடுகள் மற்றும் ஆராய்ச்சி அம்சங்கள்	ஆராய்ச்சி வெளியீடுகளின் எண்ணிக்கை	05	0.10	90%	
பனை ஆராய்ச்சி நிறுவகத்தின் (PRI) உட்கட்டமைப்பு வதசிகளை மேம்படுத்தல்	பூர்த்தி செய்த ஆராய்ச்சிகளின் எண்ணிக்கை	15	1.00	70%	
PRI பதவியணிக்கான திறன் விருத்திப் பயிற்சி	பயிற்றப்பட்ட பதவியணி எண்ணிக்கை	05	0.50	70%	
நுண் உயிரியல் ஆய்வுகூடத்திற்கு ISO தரச்சான்றிதழ்	நிறைவு செய்யப்பட்ட ஆய்வுகளின் எண்ணிக்கை	05	1.00	85%	
மொத்தம்			**6.00**		**4.94**

பனை வளங்களைப் பயன்படுத்தி உடனடி கைகழுவும் கிருமிநாசினி திரவம் தயாரித்தல், கல்லின் எச்சங்களைப் பயன்படுத்தி கோழி உணவு உற்பத்தி செய்தல், சிறந்த பனை வைன் தயார் செய்தல், பனங்காய் மற்றும் கற்றாழையை பயன்படுத்தி புதிய பற்பசையை உற்பத்தி செய்தல் மற்றும் தரப்படுத்துதல், பனங்காய் மூலம் சோஸ், பௌதீக இராசாயன அம்சங்கள், தெளித்தல் அம்சங்களைப் பயன்படுத்தி பனை கூழ் மா தயாரித்தல் மற்றும் அதன் போசாக்கு பற்றிய பகுப்பாய்வு, விற்றமின் உள்ளடக்கம், கனியவகைகளின் ஒழுங்கமைப்பு, ஒடசிசனேற்றிகள், மற்றும் பனை கூழ் உற்பத்திகளின் முழுமையான பினொலிக் உள்ளடக்கத்தில் தயாரிப்பின் தாக்கங்கள், பனை மூலமான சுவையூட்டப்பட்ட சிரப் உற்பத்தி மற்றும் தரப்படுத்தல், பனை கிழங்கு மூலம் கசப்பு அற்ற மாவுக்கு பயன்வாய்ந்த தயாரித்தல் முறையை தீர்மானம் செய்தல் ஆகிய துறைகளில் ஆராய்ச்சிக் கற்கைகள் 10 மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



நிறுவன சொத்துக்களின் அபிவிருத்தி

நிகழ்ச்சித்திட்டம்	அலகு	பௌதீக இலக்கு	பௌதீக முன்னேற்றம்	நிதிசார் முன்னேற்றம் (ரூ.மி.)
உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி	அலுவலக எண்ணிக்கை மற்றும் மேம்படுத்தப்பட்டவை	02	95%	6.4
சொத்துக்களை மீளத் தாபித்தல் மற்றும் பராமரிப்பு	காணப்படும் அலுவலக எண்ணிக்கை	12	90%	
மனிதவள அபிவிருத்தி பதவிநிலை பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்	பதவியணி பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்	10	80%	
மொத்தம்				6.4

2021.12.31 ஆம் திகதிக்கு நிதிசார் முன்னேற்றம்

மாதம்	மூலதனம்		மீண்டெழும்		கையிலுள்ள பட்டியல்கள்
	ஒதுக்கம் (ரூ.மி.)	கிடைத்தது (ரூ.மி.)	ஒதுக்கம் (ரூ.மி.)	கிடைத்தது (ரூ.மி.)	(ரூ.மி.)
சன –டிச.	40	28.34	130	130	0.75

பனை புதிய பயிர்செய்கை தகவல்கள்

இல.	மாவட்டம்	2019 டிசம்பர் 31 வரை		2020 டிசம்பர் 31 வரை		2021 டிசம்பர் 31 வரை	
		விதை	ஹெக்.	விதை	ஹெக்.	விதை	ஹெக்.
1	யாழ்ப்பாணம்	101,950	127.44	109,000	136.25	100,000	125
2	கிளிநொச்சி	10,000	12.5	12,500	15.63	75,000	93.75
3	முல்லைத்தீவு	10,000	12.5	27,750	34.68	125,000	156.50
4	வவுனியா	5,000	6.25	91,000	113.75	150,000	187.50
5	மன்னார்	10,000	12.5	89,221	111.53	75,000	93.75
6	மட்டக்களப்பு	40,000	50	39,000	48.75	100,000	125
7	திருகோணமலை	5,000	6.25	2,500	3.13	100,000	125
8	அம்பறை	5,000	6.25	10,000	12.50	50,000	62.5
9	ஹம்பாந்தோட்டை	40,500	50.63	-	-	50,000	62.5
10	புத்தளம்	-	-	-	-	75,000	93.75
மொத்தம்		186,950	284	380,971	476.22	875,000	1,125.25

மூலம் - பனை அபிவிருத்தி சபை

2021 ஆம் ஆண்டு பனைத் துறையின் முன்னேற்றத்துக்காக பனை அபிவிருத்தி சபை மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள்

புதிய கற்பகம் விற்பனை நிலையங்களை திறந்துவைத்தல்



கொவிட் 19 நிலைமைகளின் கீழாயினும் பனை சார்ந்த உற்பத்திகளை மக்களுக்கு மத்தியில் பிரபல்யப்படுத்துவதற்காக ஈ-கற்பகம் பொறிமுறையை அமுல்படுத்தல், உள்நாட்டு பனை சார்ந்த உற்பத்திகளை காட்சிப்படுத்தல், விற்பனையை மேம்படுத்த பல்தொகுதிக் கடமை வலையமைப்புடன் இணைந்து செயற்படுதல், உற்சவ காலத்தில் கற்பகம் விற்பனை நிலையங்களின் விசேட மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல் மற்றும் பனை சார்ந்த உற்பத்திகளை மக்கள் மத்தியில் பிரபல்யப்படுத்துவதற்காக நாடு முழுவதிலும் நடாத்தப்படும் பல்வேறு கண்காட்சிகளிலும் பங்குபற்றியமை. அத்துடன் தற்போது காணப்படுகின்ற கற்பகம் விற்பனை நிலையங்களை மேம்படுத்தல் மற்றும் பல்வேறு பனை உற்பத்திகளுக்கும் துண்டுப் பிரசுரங்களை வழங்குவதும் மேற்கொள்ளப்படுகின்றது.

பனை சார்ந்த கைப்பணி மற்றும் பனச் சாராய உற்பத்தி பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தல்



பனை அபிவிருத்தி கூட்டுறவு சங்கங்களுக்கு சாராயம் போத்தலில் அடைத்தல் கைத்தொழில்சாலைகள் மற்றும் சாராயம் விற்பனை செய்யும் நிலையங்களை அமுல்படுத்த வசதிகள் செய்வதற்கு மதுவரி திணைக்களம், மாவட்ட செயலாளர்கள் மற்றும் பிரதேச அதிகாரிகளுடன் கலந்துரையாடி தேவையான வசதிகளை செய்தல்.

பனை சாறு மூலம் மேற்கொள்ளப்பட்ட உற்பத்திகளை வர்த்தகமயப்படுத்தல்



பனை சார்ந்த உற்பத்திகளான ஐஸ்கிறீம், பற்பசை, வையின், சோஸ், அழங்கார உற்பத்திகளை வர்த்தகமயப்படுத்த தனியார் கம்பனிகளின் பங்களிப்பைப் பெற்றுக் கொள்ளல்.

யாழ்ப்பாணம் கைதடியில் பனை பயிற்சி நிறுவனத்தை (பீரீஜ) தாபித்தல்

